Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 28 | சுடர்: 28 | கதிர்: 276 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 13, வியாழன் 29.08.2013


ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்
X 5

## சம்பூர் தான் எமக்கு வேண்டும்

### நவிப்பிள்ளையிடம் மக்கள் மன்றாட்டம்

திருகோணமலை.ஓக 29
எங்களுக்கு சம்பூர் தான் வேண்டும் என்று திருகோணமலை கிளிவெட்டி நலன்புரி முகாமில் வாழும் சம்பூர் மக்கள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்நவநீதம்பிள்ளையிடம் கண்ணீர் மல்கியவாறு கோரிக்கை விடுத்தனர்.



திருகோணமலைக்குப் பயணம் மேற்கொண்ட நவநீதம்பிள்ளை நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் சம்பூர் மக்களை நேரில் சந்தித்தார். அவரைக்கண்ட சம்பூர் மக்கள் கண்ணீர் மல்க தமது வாழ்வின் துன்பங்களை வெளிப்படுத்தினர்.

மக்களின் கருத்துக்களை கேட்டறிந்த நவநீதம்பிள்ளை, அவர்களை சொந்த இடங்களில் குடியேற்றுவது தொடர்பாக அரசுடன் பேசுவதாக அங்கு உறுதியளித்தார். (கு)

## காணாமற்போன சம்பவங்களை கையாளத் தனிச் சட்ட வரைவு

கொழும்பு. ஓக.29
காணமற்போனோர் தொடர்பிலான விவகாரங்கள் நாட்டில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில், கடத்தப்பட்டு காணாமற்போன சம்பவங்களைக் கையாளத் தனியான சட்டவரைவைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐநா மனித உரிமைகள ஆணையாளர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், காணமற்போனோரின் உறவுகள் தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறான தொரு சூழலிலேயே கடத்தப்பட்டு காணாமற்போன சம்பவங்களைக் கையாள தனிச் சட்டவரைவொன்றைக் கொண்டு வர

தொடர்ச்சி: பக்கம் 25

# காணாமற்போனோர் விடயத்தில் நவிப்பிள்ளை அதிக அக்கறை

## உறவினர்கள் 300 பேருடன் கொழும்பில் நாளை விசேட சந்திப்பு

கொழும்பு.ஓகஸ்ட் 29
காணாமற்போனோர் விவகாரத்தில் தனது அதிகூடிய கவனத்தைச் செலுத்தியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்நவநீதம்பிள்ளை, காணாமற்போனோரின் உறவினர்கள் 300 பேருடன் நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் விசேட சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வடக்கு - கிழக்குக்கான பயணங்களின் போது காணாமற்போனோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டங்கள், கையளிக்கப்பட்ட மனுக்கள் ஆகியவற்றை அடுத்து நாளை கொழும்பில் இந்த விசேட சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கான தனது பயணத்தின் போது 3 நாள்களை நவநீதம்பிள்ளை வடக்கு - கிழக்கில் செலவிட்டிருந்தார். இதன்போது காணாமற் போனோரின் உறவுகள் தமது பிள்ளைகளை கண்டுபிடித்துத் தருமாறு கோரி நவநீதம்பிள்ளை செல்லும் இடமெல்லாம் பின்தொடர்ந்து சென்று கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தினார்கள். யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன. இதனைவிட முல்லைத்தீவுக்குச் சென்ற ஆணையாளரை சூழ்ந்துகொண்ட மக்கள், தமது பிள்ளைகளை எப்படியாவது மீட்டுத் தரவேண்டும் என்று கண்ணீர்மல்க கோரிக்கை விடுத்தனர்.



அத்துடன் யாழ்ப்பாணத்தில் நவநீதம்பிள்ளையுடனான சந்திப்பின்போது காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் மனு ஒன்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த விடயத்தில் தனது அதிக கவனத்தை செலுத்தியுள்ள நவநீதம்பிள்ளை நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் காணாமற்போனோரின் உறவினர்கள் 300 பேருடன் விசேட சந்திப்பை நடத்தவுள்ளார் என ஐநா. வட்டாரங்கள்தெரிவித்தன. (கு-5)

## அரியம் எம்.பியும் நான்காம் மாடிக்கு அழைப்பு

கொழும்பு.ஓக. 29
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரனை விசாரணைக்காகக் கொழும்பு 4 ஆம் மாடிக்கு வருமாறு பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினர் அழைத்துள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அரியநேந்திரன் தெரிவித்தார்.

ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறி தரன், சுரேஸ் பிரேமச்சந்தி ரன், சிவசக்தி ஆனந்தன் மற்றும்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் 4 ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

## வலி. வடக்கு மக்களின் ‘ரிட்’ மனு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக.29
வலி. வடக்கு மக்களால் தமது பூர்வீக நிலங்கள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 2 ஆயிரத்து 194 'ரிட்' மனுக்கள் மற்றும் யாழ். ஆயரினால் தாக்கல் செய்யப்பட்ட 'ரிட்' மனு ஆகியன தொடர்பான விசாரணையை மேன் முறையீட்டு நீதிமன்றம் நவம்பர் 7 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 25

## அரச வேட்பாளர்களின் ஆயுதங்களால் அச்சம்

யாழ்ப்பாணம், ஓக.29
அரச தரப்பு வேட்பாளர்கள் , ஆதரவாளர்கள் என்போர் உயிராபத்தை ஏற்படுத்தும் ஆயுதங்களோடு நடமாடுவதால் குடாநாட்டு மக்களிடையே பெரும் அச்சநிலை தோன்றியுள்ளது. நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இந்த அச்சநிலையை மேலும் அதிகரித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான சர்வானந்தாவின் ஆதரவாளர்கள் இருவர் மீது அதேகட்

தொடர்ச்சி: பக்கம் 25

## சிங்கள சிவில் சமூகத்தையும் சந்தித்தார் நவிப்பிள்ளை

யாழ்ப்பாணம், ஓக.29
திருகோணமலைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட ஐநா மனிதஉரிமைகள் ஆணையாளர்நவநீதம்பிள்ளை, சிங்கள சிவில் சமூகத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

வடக்கு, கிழக்குக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்திருந்த நவநீதம்பிள்ளை நேற்றுத் திருகோணமலை மாவட்டத்துக்குச் சென்றிருந்தார். அங்கு கிழக்கு மாகாண ஆளுநர், திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஆகியோரைச் சந்திதுக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தகவல் எதுவும் வெளியாகவில்லை. (கு-5)

## அங்கஜனின் தந்தை இராமநாதன் கைது

### சாவகச்சேரி துப்பாக்கிச் சூட்டை அடுத்து

யாழ்ப்பாணம், ஓக. 29
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் அங்கஜனின் தந்தையான இராமநாதன் பொலிஸாரால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டார்.

அவரை இன்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் இரவு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்

தொடர்ச்சி: பக்கம் 25

## சிங்கள குடியேற்றத்தை நேரில் பார்த்தார் நவி

### முல்லைத்தீவு முகத்துவாரத்துக்கு திடீர் பயணம்

கொழும்பு, ஓக.29
முல்லைத்தீவில் சிங்கள மக்கள் அத்துமீறிக் குடியேறியுள்ள முகத்துவாரப் பகுதிக்கு நேற்று முன்தினம் இரவு திடீரெனச் சென்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அந்தப் பகுதிகளின் நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளையின் பயண நிகழ்ச்சி நிரலில் மேற்படி பிரதேசத்துக்குச் செல்வதற்கான திட்டம் எதுவும் உள்ளடக்கப்படாத போதும், அவர் அங்கு திடீர்ப் பயணம் மேற்கொண்டார்.

முல்லைத்தீவு பயணத்தின் பின் திருமலை செல்ல திட்டமிட்டிருந்தார் ஆணையாளர். முள்ளிவாய்க்காலில் மக்கள் சந்திப்பின் போது, சிங்கள மக்களின் அத்துமீறிய குடியேற்றம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து அவர் நேற்று முன்தினம் மாலை திடீரென கொக்கிளாய் முகத்து வாரம் பகுதியில் தங்கியுள்ள சிங்கள மக்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார். (கு-5)

## எழிலன் எம்மிடம் இல்லை

### கைவிரிக்கிறது இராணுவம்

கொழும்பு, ஓக.29
தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த எழிலன் எம்மிடம் இல்லை. அவரைப் பற்றிய தகவலும் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வருகை தந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை சந்தித்துப் பேசிய, எழிலனின் மனைவி

தொடர்ச்சி: பக்கம் 25

## நவநீதம்பிள்ளையைத் துரத்தும் காணாமற்போனோரின் உறவுகள்

### திருகோணமலையிலும் கவனவீர்ப்புப் போர்

திருகோணமலை, ஓக.29
ஐநா.மனிதஉரிமைகள்ஆணையாளர் நவநீதம் பிள்ளையை, காணாமற்போனோரின் உறவுகள் தொடர்ச்சியாகத் துரத்தி வருகின்றனர். திருகோணமலைக்கு நேற்று அவர் சென்ற போது அங்கும் காணாமற்போனோரின் உறவுகள் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட

தொடர்ச்சி: பக்கம் 25

## சிலாபம் கடலில் மிதந்த கொள்கலன்

### பொலிஸாரிடம் ஒப்படைப்பு

கொழும்பு,ஓக. 29
சிலாபம் கடலில் மிதந்த கொள்கலன் மீட்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.
சிலாபம், ஆழ்கடலில் மிதந்து கொண்டிருந்த கொள்கலனைக் கடற்படையினர் மீட்டு முந்தல், உடப்பு வரையிலும் இழுத்துவந்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.
அந்தக் கொள்கலனினுள் என்ன இருக்கின்றது என்பது தொடர்பில் தங்களுக்குத் தெரியவில்லை எனக் கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார். (த)

# இலங்கைக்கு எதிராக செயற்படுபவரே நவி

### தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 29
இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் ஆன்மீக சக்தியைப் பயன்படுத்திப் படையினருக்கு ஆசீர்வாதம் வழங்கியதாகவும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் நோக்கம் நிறைவேறுவதைத் தடுக்க இந்தச் சக்தியைப் பயன்படுத்தப் போவதாகவும் தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணியின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.
நவநீதம்பிள்ளை மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய செயற்படுவதோடு புலம்பெயர் தமிழர்களின் நோக்கத்தை நிறைவேற்றும் பெண்மணி என்றும் அவர் கூறினார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நவநீதம்பிள்ளை என்பவர் இலங்கைக்கு எதிராகச் செயற்படுபவர். இதனை இலங்கை மக்கள் அறிந்திருக்க வேண்டியது முக்கியமானது.
மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை என நவநீதம்பிள்ளையிடம் கேள்வி எழுப்புகிறோம்.
இலங்கையில் போர் நடைபெறவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை மட்டுமே முன்னெடுக்கப்பட்டது. நாட்டுக்கு எதிரானவர்களிடம் பேச்சு நடத்தி விட்டுச் செல்லவே நவநீதம்பிள்ளை இலங்கை வந்துள்ளார்- என்றார். (த)

## நவிப்பிள்ளையின் தலையீட்டை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது

### அமைச்சர் குமார வெல்கம கூறுகிறார்



கொழும்பு, ஓக. 29
உள்நாட்டு விவகாரங்களில், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தலையீடு செய்வதை அனுமதிக்க முடியாது என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.
மத்துகமவில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று வருவதற்கு, நவநீதம்பிள்ளை அனுமதிக்கப்பட்டுள்ளார். உலகின் பல்வேறு பகுதிகளிலும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகப் படைகள் கொடுமைகளை இழைத்த போது, நவநீதம்பிள்ளை மௌனமாகவே இருந்தார். 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கையை ஐ.நா குறிவைத்துத் தாக்கி வருகிறது.
அமைச்சர் ரவூப் ஹக்கீமுடனான சந்திப்பின்போது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று நவநீதம்பிள்ளை கோரியுள்ளார்.
ஆனால், அமெரிக்காவில், பிரிட்டனில், இந்தியாவில் இன்னும் பல நாடுகளில் தீவிரவாத எதிர்ப்புச் சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. போருக்குப் பிந்திய நல்லிணக்க முயற்சிகளை அமெரிக்காவின் தலையீடுகள் சீரழித்து விட்டன-என்று கூறினார். (த)

## விபத்தில் படுகாயமுற்ற சிறுவனும் நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம்.ஓக. 29
இ.போ.ச.பஸ் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த சிறுவனும் நேற்றுக் காலை உயிரிழந்தான். பஸ் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
தொண்டைமானாறு. உடுப்பிட்டி வீதியில் பொக்கணைச் சந்தியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டது. இதில் வட்டக்கச்சியைச் சேர்ந்த மாசிலாமணி மனோரஞ்சன் (வயது -38) படுகாயமடைந்து ஊறணி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். அவரின் மகனான முகிலன் (வயது-10) மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.
பஸ்ஸைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சாரதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
சிறுவனின் சடலம் விசாரணைகள் மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகம் நேற்று முல்லையில்

முள்ளியவளை,ஓக. 29
முல்லைத்தீவில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று நெடுங்கேணி- தண்ணீரூற்றில் நடைபெற்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், அரியநேத்திரன் ஆகியோரும் வடமாகாண சபை முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வீ.ஆனந்தசங்கரி மற்றும் மாவட்ட வேட்பாளர் நஸ்லிம் அயுப் உட்பட பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.





முன்னதாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து போட்டியிடும் வேட்பாளர்களும் தண்ணீரூற்றுச் சந்தியிலிருந்து ஆதரவாளர்களால் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து மண்ணின் விடுதலைக்காக ஆகுதியாகிய மாவீரர்களுக்கும், உயிரிழந்த மக்களுக்கும் வணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. (ஜ-400-433)

## வேட்பாளர் தம்பிராசா உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,ஓக. 29
தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் தம்பிராசா நேற்று யாழ்.செயலகத்துக்கு முன்பாக சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.
யாழ்.மின்சார நிலைய வீதியில் கடந்த வாரம் பிரசாரப் பணிகளை மேற்கொண்டிருந்த போது ஆளும்கட்சியில் போட்டியிடும் வேட்பாளரான அங்கஜனின் தந்தையாரால் தம்பிராசா மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.
இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இதனை எதிர்த்து நேற்றுமுதல் சாகும்வரை உண்ணாரவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளதாகவும் தம்பிராசா கூறியுள்ளார். (த-400)

## முழந்தாளிடவைத்த உறுப்பினருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு.ஓக 29
மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் ஆசிரியையை முழந்தாளிடவைத்த வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத்குமாரவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
புத்தளம் மேல் நீதிமன்றத்திலேயே குற்றப்பத்திரிகை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டபோது தான் நிரபராதியென்று பிரதிவாதி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.
இதனையடுத்து நவம்பர் 25 ஆம் திகதி முதல் வழக்கை விசாரணை செய்வதற்குத் தீர்மானித்த நீதிவான், சாட்சிகளுக்கு நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டார்.
இந்நிலையில் பிரதிவாதி சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி, தனது தரப்பைச் சேர்ந்தவருக்குக் கடும் பிணை நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளமையினால் அதனை தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரினார். எனினும் அதற்கு முறைப்பாட்டாளர் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.
இந்தச் சம்பவத்தைப் பாரதூரமாகக் கருதியே நீதிவானின் விசாரணை தவிர்க்கப்பட்டுக் குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரினால் நேரடியாகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதுடன் இந்த வழக்கு விசாரணை நவம்பர் 25 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு நடத்துவதற்கு நீதிவான் தீர்மானித்தார். (த)

**நவம்பர் 25 ஆம் திகதி முதல் வழக்கை விசாரணை செய்வதற்குத் தீர்மானித்த நீதிவான், சாட்சிகளுக்கு நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டார்.**

## இந்து மத கலைக்களஞ்சியம் சர்வதேச ரீதியில் வெளியீடு

நியூயோர்க்,ஓக 29
இந்து மதக் கலைக்களஞ்சியம் (Encylopedia of Hinduism) என்ற புத்தகத் தொகுப்பு ஒன்று கடந்த திங்களன்று அமெரிக்காவின் தெற்கு கரோலினா பல்கலைக்கழகத்தில் சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்டுள்ளது.
25 ஆண்டு காலமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் இந்து மதத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் எழுதிய சுமார் ஏழாயிரம் கட்டுரைகளின் 11 நூல்கள் கொண்ட தொகுப்பாக இந்தக் கலைக்களஞ்சியம் அமைந்துள்ளது.
இந்து மதத்தின் அடிப்படை நம்பிக்கைகள், சித்தாந்தங்கள், வழிபாட்டு முறைகள் போன்றவை குறித்து இந்தக் கலைக் களஞ்சியம் பேசுகிறது.
தவிர இந்து மதம் சார்ந்த இந்திய சரித்திரம், கலாசாரம், கலை, இலக்கியம் பற்றிய கட்டுரைகளும் இதில் இடம்பெற்றுள்ளன.
இந்திய பாரம்பரிய ஆய்வு அறக்கட்டளை என்ற அமைப்பை நடத்துகின்ற சித்தானந்த் சுவாமிகளின் முயற்சியில் இந்தக் கலைக்களஞ்சியப் பணிகள் நடந்துள்ளன.
அமெரிக்காவின் தெற்கு கரோலினா பல்கலைக்கழகம் இந்த திட்டத்துக்கு ஆதரவும் வசதிகளும் செய்துதந்திருந்தது.
இந்தக் கலைக்களஞ்சியத்தின் சர்வதேச வெளியீட்டு விழாவில் தெற்கு கரோலினா மாகாண ஆளுநர் நிக்கி ஹேலி, அட்லாண்டா நகரிலுள்ள இந்திய தூதர் அஜித்குமார், இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கத் தலைவர் அன்னா ஹசாரே உட்பட நூற்றுக்கணக்கான மத அறிஞர்களும் கல்வியாளர்களும் பங்கு கொண்டிருந்தனர்.
இந்தியாவில் இந்தக் கலைக் களஞ்சியம் ஏற்கனவே தலாய் [illegible]ாவினால் வெளியிடப்பட்[illegible]ந்தமை குறிப்பிட[illegible]க்கது. (த)



இலங்கைக்கு வந்துள்ள சூடான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் அப்துல் ரஹ்மான் மொஹமட் செயின் அஹமட் தலைமையிலான அந்நாட்டின் இராணுவப் பிரதிநிதிகள், விமானப்படை தலைமையகத்தில் இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மாஷல் எச்.டி. அபேவிக்ரமவைச் சந்தித்து பேச்சு நடத்தினர். இதன் போது இரண்டு நாடுகளுக்கு இடையிலான முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.(த)

## தேர்தல் வன்முறை சம்பவங்கள் 239

கொழும்பு,ஓக.29
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை 239 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலே இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
சட்டவிரோத பிரசார நடவடிக்கை தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடாக 107 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது. மத்திய மாகாணத்தில் அதிகப்படியாக 114 முறைப்பாடுகளும், வடமேல் மாகாணத்தில் 85 முறைப்பாடுகளும் வடமாகாணத் தில் 58 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (த)

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100%
சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில்
நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.
பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.
Rs.10
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 492 6003

## வடமாகாண விவசாயக் கண்காட்சி முன்னாயத்தப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஓக.29
வடமாகாண விவசாயக் கண்காட்சிக்கான முன்னாயத்தங்களை கிளிநொச்சி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் வடமாகாண விவசாயத் திணைக்களம் முன்னெடுத்துள்ளதாக வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

வருடந்தோறும் விவசாயத் திணைக்களத்தால் யாழ்.மாவட்டத்துக்கான விவசாயக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. முற்றுமுழுதாக விவசாயிகள் மற்றும் விவசாயத்துறை சார்ந்த மாணவர்கள் நன்மையடையக் கூடியதாக இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த வருடக் கண்காட்சியை வட்டக்கச்சியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5 மாவட்டங்களையும் ஒன்றிணைத்து நடத்தப்படும் இந்தக் கண்காட்சியை இந்த முறை பெரியளவில் நடத்துவதற்கான முன்னாயத்தங்களை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

காட்சிக் கூடங்களை அமைப்பதில் இருந்து பங்குபற்றுனர் மற்றும் பயன் பெறுனர்களுக்கான நன்மைகள் தொடர்பில் ஆராய்வுகளை மேற்கொண்டுள்ளனர்- என்றார். (வ-14)

## 500 இற்கும் அதிகமானோர் பயனடைந்த நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்.ஓக.29
தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை நேற்று புதன்கிழமை காலை8.30மணிக்குவேலணை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் நடைபெற்றது.

'கபே' அமைப்பின் அனுசரணையுடன் நடைபெற்ற நடமாடும் சேவையில் புங்குடுதீவு, நயினாதீவு, மண்டைதீவு, வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஐநூறுக்கும் அதிகமானோர் அடையாள அட்டை உட்பட பிறப்பு, இறப்பு, திருமணம் என காலங் கடந்த பதிவுகளை மேற்கொண்டனர்.

தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்களே அதிகமாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

முத்திரை, புகைப்படம் போன்றவற்றை கபே அமைப்பு இலவசமாக வழங்கியிருந்தது. அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் உடன் கவனத்தில் கொள்ளப்பட்டு விரைவில் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

**முத்திரை, புகைப்படம் போன்றவற்றை கபே அமைப்பு இலவசமாக வழங்கியிருந்தது.**

## நல்லூர் ஆலயச் சூழலில் நடமாடும் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஓக.29
நல்லூர் ஆலயச் சுற்றாடலில் நடமாடும் இரத்ததான முகாம் இன்று தொடக்கம் இடம்பெறுகிறது. ஆர்வமுள்ள அடியவர்கள் வந்து இரத்ததானம் செய்யுமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவு கேட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6ஆம் திகதி வரை இந்த முகாம் பிற்பகல் 4 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை செயற்படும். தேர், தீர்த்தத்திருவிழா நாள்களில் காலை 7 மணியிலிருந்து இரவு 8 மணி வரை இரத்ததானம் செய்ய முடியும். யாழ்.அரசடிச் சந்தியில் உள்ள சமூக அபிவிருத்தி மன்ற கட்டடத்தில் குறித்த இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது என்று இரத்த வங்கி அறிவித்துள்ளது. (வ-4)



# சிறையில் வாடும் உறவுகளுக்கு பொது மன்னிப்பு அளிக்க வேண்டும்

## நவிப்பிள்ளையிடம் பெற்றோர் வழங்கிய மகஜர்

யாழ்ப்பாணம்.ஓக.29
இந்த நாட்டில் உண்மையான சமாதான சகவாழ்வு மலர வேண்டுமாயின் அதனை அரசு விசுவாசத்துடன் வெளிப்படுத்த வேண்டும். இனியும் தாமதிக்காமல் நல்லெண்ண நடவடிக்கையாக சிறையில் வாடும் எம் உறவுகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும். அல்லது அவர்களுக்குப் புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்ய முன்வர வேண்டும். இந்த வகையில் இலங்கை அரசை வற்புறுத்தி சிறையில் வாடும் தமிழ் கைதிகளின் விடுதலைக்கு உதவி புரியுமாறு அரசியல் கைதிகளின் பெற்றோரும் உறவினர்களும் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் சமர்ப்பித்த மகஜரில் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.



எமது பிள்ளைகள் கொழும்பு மகசின், வெலிக்கடை, கொழும்பு தடுத்து வைக்கும் சிறை, நீர்கொழும்பு மகர, அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் பூசா ஆகிய சிறைகளில் விசாரணைகள் எதுவுமின்றி நீண்ட காலமாக அடைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ள அந்த மகஜரில் சிறைச்சாலைகளில் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற கொடுமைகளையும் பட்டியலிட்டுள்ளார்கள். அவைகளில் சில வருமாறு:-

சிறைச்சாலைகளில் தமிழர் என்றபடியினால் அடிமைகளாக நடத்தப்படுகின்றார்கள்.

கொழும்புச் சிறைகளில் உடல் பரிசோதனை எனும் பெயரில் முப்படைகளாலும், எம் உறவுகள் முழு நிர்வாணமாக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுவதுடன் உடல், உளரீதியாகவும், வதைக்கப்படுகின்றனர்.

காலத்திற்கு காலம் ஏற்படும் சிறைக்கலவரங்களில் எம் உறவுகள் கொல்லப்படுகின்றனர். அவர்களின் ஆவணங்களும், உடைகளும், கொள்ளையிடப்படுகின்றன. மற்றும் சிறைச்சாலைக்குள்ளேயே அடிக்கடி அகதிகளாக்கப்படுகின்றனர்.

தூர இடங்களில் சிறை வைக்கப்பட்டிருக்கும் எம் உறவுகளுக்கும் எமக்குமிடையே உள்ள உறவு துண்டிக்கப்படுகின்றது.

சிறைகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் அவர்களில் சிலரை மேலதிக விசாரணை என்ற பெயரில் மீண்டும் தடுப்பு காவலுக்குச் கொண்டுசெல்கின்றனர்

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட சிலரை மீண்டும் கைது செய்து சிறையில் அடைக்கின்றனர்.

நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக தண்டனைக் கைதிகளாக்கப்பட்ட எம் உறவுகள் மிகக் கடுமையாக வேலைவாங்கப்படுகின்றனர். முதியோரைக்கூட இவ்விதம் வாட்டிவதைக்கின்ற னர் என்றுள்ளது.

## அரசின் நில ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றக் கோரிக்கை

### உதவியற்றவர்கள் அமைப்பு மகஜர்

யாழ்ப்பாணம்.ஓக.29
போருக்குப் பின்னரான காலகட்டத்தில் இந்த அரசு மேற்கொண்டுவரும் காணிக் கொள்கையின்படி எந்தக் காணியாயினும், எந்த இடமானாலும் சிறுமாற்றம் செய்வதன் மூலம் ஆக்கிரமிக் கப்படுகின்றது. இவ்வாறு தமிழ் மக்களால் பல நூற்றாண்டு காலமாக சொந்தமாக அனுபவிக் கப்பட்ட காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று உதவிகளற்ற தமிழர்கள் என்ற அமைப்பினால் மனித உரிமைகள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் என்ற பாரம்பரிய தமிழ்க் கிராமம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபுலவு கிராமம் என்பன இதற்கு ஆணித்தரமான ஆதாரங்களாக உள்ளன.

இந்தப் பகுதிகளில் ஆட்சியாளர்கள் மிக மனிதாபிமானமற்ற முறையில் மக்களைச் சுரண்டி அவர்களை ஒட்டாண்டிகளாக்கியுள்ளனர். இந்த நிலை தமிழ் பகுதிகள் முழுக்கவும் நிலவி வருகின்றது என்று தெரிவித்துள்ள அந்த அமைப்பு.

தமிழ்ப் பகுதிகளில் மக்களது காணிகள் அபகரிக்கப்படுவதன் நோக்கத்துக்கான காரணங் களை மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மூன்று பாதுகாப்பு படைகளுக்குமென பெரும் எடுப்பில் நிரந்தர முகாம்களை அமைப்பது.

சோதனைச் சாவடிகளை அமைப்பதும் பயிற்சி அளிப்பது.

தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களை பெரும்பான்மையாக்குவதற்கு சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவது.

சிங்களவர் வாழும் இடங்களில் புத்த கோயில்களை அமைத்து புத்தர் சிலைகளை நிலைபெறச் செய்வது.

பெரும்பான்மை இனத்தவர்களுக்காக எதிர்காலத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைப்பது.

சரணாலயங்கள் மற்றும் அகழ்வாராய்ச்சிகளுக்கென்ற போர்வையில் பெரும்பான்மையினருக்காகவும் படையினருக்காகவும் நிலங்களை அபகரிப்பது. அபிவிருத்திப் பணிகளுக்கெனவும் நில அபகரிப்பு செய்தல் போன்ற.

அநீதியான விதங்களில் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கான வழிமுறை களைக் காணும்படி மகஜரில் ஆணையாளர் கேட்கப்பட்டுள்ளார். (ப)

## பிணையில் செல்ல நால்வருக்கு உத்தரவு

தென்மராட்சி.ஓக.29
பொலிஸாரின் அனுமதிப் பத்திரமின்றி ஓட்டோவில் ஒலிபெருக்கி பொருத்தி தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட நால்வரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நால்வரையும் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. (வ-9)

## பொலிஸாரால் வாகனங்கள் சோதனை

ஏ-9 வீதியில் சென்ற வாகனங்கள் நாவற்குழிப் பாலத்தில் சாவகச்சேரிப் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து வாகனங்கள் சோதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மீசாலையில் வர்த்தகர் வீட்டில் திருட்டு

தென்மராட்சி.ஓக.29
மீசாலை மேற்கில் உள்ள வர்த்தகர் ஒருவரது வீட்டில் நேற்று முன்தினம் இரவு திருட்டு இடம் பெற்றுள்ளது.

வீட்டு ஜன்னல் கம்பியை வளைத்து உள்நுழைந்த திருடன் அங்கிருந்து தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளான்.

வீட்டுக்குள் சத்தம் கேட்டதை உணர்ந்த வீட்டுக்காரர்கள் கதவைத் திறந்து வெளியே வந்த போது காற்சட்டை மட்டும் அணிந்திருந்த ஒருவர் வெளிக் கதவைத் திறந்து கொண்டு ஓடிச் செல்வதை அவதானித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பாதுகாப்பு உத்தியோகத்தர் பொதுமக்களிடையே முறுகல்

### சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்று

யாழ்ப்பாணம். ஓக.29
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பொது மக்களுக்கும் பாதுகாப்பு உத்தயோகத்தர்களுக்கும் இடையே நேற்று முறுகல் நிலை ஏற்பட்டது. எனினும் பொலிஸார் அங்கு நின்றதால் நிலையை சமாளிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது காயமடைந்தவர்களைப் பார்வையிட பெருமளவான அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் என பலர் வருகை தந்திருந்தனர். பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களை தடுத்த போதிலும் அதனைச் செவிமடுக்காமல் உள்ளே சென்றனர்.

இதேவேளை சம்பவத்தில் காயமடைந்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள் உள்ளே செல்ல பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனுமதிக்கவில்லை.

இதனால் பொதுமக்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குமிடை யில் முறுகல் நிலை தோன்றியது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு முறையிட்ட போது அது தமது கடமையல்லவெனத் தட்டிக் கழித்தனர். இருந்தும் முறுகல் நிலை அதிகரிக்காமல் பார்த்துக் கொண்டனர்.

சில ஊடக வியலாளர்களை பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் விடுதியில் நின்ற பொலிஸாரும் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (வ)

**இது தொடர்பாக பொலிஸா ருக்கு முறையிட்ட போது அது தமது கடமையல்லவெனத் தட் டிக் கழித்தனர். இருந்தும் முறுகல் நிலை அதிகரிக்காமல் பார்த் துக் கொண்டனர்.**

### மின்சார சபையின்

## வட மாகாண அலுவலகம் இந்த வருட இறுதியில் திறப்பு

யாழ்ப்பாணம். ஓக.29
யாழ்.பழைய பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இலங்கை மின்சார சபையின் வட மாகாண அலுவலகம் இந்த வருட இறுதியில் திறந்து வைக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக தெரிவித்தார்.

மின்சார சபைக்கான கட்டடம் யாழ்.பழைய பூங்காவில் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதையடுத்து அங்கு கட்டட நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டது. 150 மில்லியன் ரூபா செலவில் அந்தக் கட்டடம் ஐந்து மாடிகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. நிர்மாணிப்புப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. பணிகள் பூர்த்தியடைந் ததும் இந்த வருட இறுதியில் அதனைத் திறந்து வைக்க உத்தேசித்துள்ளதாக குணதிலக மேலும் தெரிவித்தார். (வ-4)

# தமிழகத் துறைமுகங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

## தீவிரவாத அச்சுறுத்தலை அடுத்து

சென்னை, ஓக.29
பாகிஸ்தான் தீவிரவாதக் குழு இலங்கையைக் களமாகக் கொண்டு தாக்குதல் நடத்தக் கூடும் என்ற புலனாய்வுத் துறையின் தகவலை அடுத்து தமிழகத்தின் முக்கிய துறைமுகங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இலங்கை, இந்திய கரையோரப் பகுதிகளிலிருந்து தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்ற புலனாய்வு பிரிவின் எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் மூன்று முக்கிய துறைமுகங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.
சென்னை, தூத்துக்குடி மற்றும் என்னூர் ஆகிய துறைமுகங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தாக்குதல் அச்சுறுத்தல்களை முறியடிக்கத் தேவையான சகல ஏற்பாடு களும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**சென்னை, தூத்துக்குடி மற்றும் என்னூர் ஆகிய துறை முகங்களின் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.**

பாகிஸ்தான் தீவிரவாதக் குழு ஒன்று இலங்கையைக் தளமாகக் கொண்டு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்றின் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.
இந்தத் தகவலை உதாசீனம் செய்யப் போவதில்லை எனவும், பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத் தப்பட்டுள்ளதாகவும் இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.
துறைமுகங்களுக்குள் பிரவேசிக்கும் நுழைவாயில்கள் மற்றும் வெளியேறும் பகுதிகளில் கூடுதல் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# இந்தியா பங்கேற்பதை கண்டித்து பிரசார இயக்கம்

## தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவுநர் பேட்டி



பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்பதை வலியுறுத்தி தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் ஏற்பாட்டில் பிரசார இயக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அந்தக் கட்சியின் நிறுவுநர் வேல் முருகன் தெரிவித்தார்.
தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தஞ்சை, திருவாரூர் மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தில் கலந்து கொள்ள தஞ்சை வந்த அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ஈழத் தமிழர்களை ஈவிரக்கமின்றி படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை தமிழக வாழ்வுரிமைக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.
ஈழ பெண்களை பாலியல் வன்புணர்வு செய்து அவர்களின் வாழ்வை அழித்த இலங்கை ஜனாதிபதி தலைமையிலான அரசு இலங்கையில் இருக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது.
இதுதொடர்பாக தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் பரப்புரை இயக்கம் ஆரம்பிக்க உள்ளது. இந்த பரப்புரை தமிழகம் முழுவதும் நடைபெறும் - என்றார்.

### உயிர்ப்பாதுகாப்பு வழங்குங்கள்

# தேர்தல் ஆணையாளருக்கு துவாரகேஸ்வரன் கடிதம்



யாழ்ப்பாணம், ஓக.29
தமிழ் பாதாள உலகத் தலைவர் ஒருவரால் தமக்கு எதிர்காலத்தில் உயிர் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்று ஐ.தே.க.வடமாகாண சபை வேட்பாளர் தி.துவாரகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் குழுக் களிடையே நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்ற மோதலில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவத்தின் ஊடாக எமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த குழுவினரிடம் இருந்து உடனடியாக ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அத்தோடு ஏனைய வேட்பாளர்களது பாதுகாப்பையும் உறுதிப்படுத்த தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லாத சந்தர்ப்பத்தில் ஐ.தே.க. சார்பாக வட மாகாணத்தில் போட்டியிடும் 19 வேட்பாளர்களும் தேர்தலில் இருந்து விலகிக்கொள்ள வேண்டிய நிலையே ஏற்படும் என்று துவாரகேஸ்வரன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நடனப்போட்டி திகதி நீடிப்பு

கலாசார திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள இந்த வருடத்துக்கான அரச நடனப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி பிற்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
போட்டிக்கான முடிவுத் திகதி ஓகஸ்ட் 15 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்ட போதி லும் நடனக் குழுக்களின் வேண்டுகோளுக்கு இணங்க செப்ரெம்பர் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நடனப் போட்டியில் பங்குபற்றவுள்ள தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பாட சாலைகள், நடனக் குழுக்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# ஈழ அகதிகள் நாடுகடத்தலுக்கு இடைக்காலத் தடை

இலங்கை அகதி விஎம்.பி நேரு என்ற ஈழ நேரு திருச்சி அகதிகள் முகாமில் உள்ளார். அவரது விருப்பத்துக்கு மாறாக அரசு அவரை நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்குத் தடை விதிக்க கோரி அவரது மனைவி உயர் நீதிமன்றத்தில் கடந்த வாரம் வழக்குத் தாக்கல் செய்தார்.
இந்த வழக்கை நீதிபதிகள் வி.தனபாலன், சி.டி.செல்வம் ஆகியோர் விசாரித்து, ஈழ நேருவின் விவகாரத்தில் தற்போதய நிலையே நீடிக்க வேண்டும், அவரை நாடு கடத்த கூடாது. வழக்குத் தொடர்பாக மத்திய, மாநில அரசு பதில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.
தொடர்ந்து இலங்கை அகதி செந்தூரானை நாடு கடத்த தடை உத்தரவு கோரி சட்டத்தரணி இளங்கோவன் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு மனுதாக்கல் செய்தார். அந்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரித்து, செந்தூரனை நாடு கடத்தத் தடை விதித்தது. இதைத் தொடர்ந்து இந்த இரண்டு வழக்குகளும் நேற்று முன்தினம் நீதிபதிகள் தனபாலன், சிடி.செல்வம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.
வழக்கை விசாரித்த நீதிபதிகள் வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். அதுவரை ஏற்கனவே விதித்த தடை உத்தரவை நீடிக்கப்பட்டுள்ளது

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.29
யாழ். குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.
இந்தக் கலந்துரையாடலில் உலக உணவுத் திட்டத்தின் கீழான நிவாரண விநியோகம் தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் சகல பொது முகாமையாளர்களும் கலந்துரையாடலுக்கு சமூகம்தருமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கேட்டுள்ளார். (த-17)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி.விஜிதா பிரதாபனின் அன்புத் தாய்
திருமதி.**விஜயரட்ணம் தவமணி**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கந்தரோடை, சுன்னாகம்.
பிரிவால் துயருறும் ஆசிரியர் கழகம்.
(யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை)

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் திருமதி கௌசல்யா செல்வேந்திரா அவர்களின் அன்புத் தாய்
**திருமதி இராஜரட்ணம் சரஸ்வதி**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவு சங்கம்.
(39272) (10,14)

## மரண அறிவித்தல்

### சற்குணம் ஜெகிலா



15/5, தனலயாளி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணம் ஜெகிலா நேற்று (28.08.2013) புதன் கிழமை அகால மரணமானார்.
அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் ஜெயலட்சுமி தம்பதியரின் மூத்த மகளும், சற்குணத்தின் மனைவியும், விதுர்ஷனின் அன்புத் தாயும், சுதர்ஷன், யசோதா, சுயாதா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2013) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
15/5, தனலயாளி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(39281) (10,14)
தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### மாசிலாமணி ஜெகதீஸ்வரன் (ஆனந்தன்)



எமது நகையகத்தில் பணிபுரியும் மயிதன் அவர்களின் அன்புத் தந்தை
**மாசிலாமணி ஜெகதீஸ்வரன்**
அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
157/1, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
(சி/11659)(23-14)
சாரங்கா நகைமாடம், சாரங்கா மணி எக்ஸ்சேஞ் பிறைவேட் லிமிட் உரிமையாளரும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### பரநிருபசிங்கம் சுரேந்திரன்



நாரந்தனை கிழக்கு (கர்ணந்தோட்ட கந்தசுவாமி கோயிலடி), ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் சுரேந்திரன் நேற்று (28.08.2013) புதன்கிழமை காலமானார்.
அன்னார் பரநிருபசிங்கம் - இரத்தினம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் சுந்தரமூர்த்தி - காலஞ்சென்ற மங்கயற்கரசி (மண்டைதீவு) தம்பதியரின் அன்பு மருமகனும், சுஜீவன், சானுகா, சாரங்கா, சஞ்சீவன், சங்கவி ஆகியோரின் அன்புத் தந்தையும் கனீந்திரன், சசிகலா, கஜேந்திரன், ஜெயகலா, விஜேந்திரன், அழகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரேமிளா (நிலா), கார்வண்ணன் (றதன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் நாரந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறை. 0773153491 (39283)(23-14) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
15
02
1949



மறைவு
30
07
2013

### திருமதி தங்கரெத்தினம் இராஜரெத்தினம்

திதி: அட்டமி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உங்களை
வானுறைந்த தெய்வமாய் வணங்கி
முப்பத்தொன்று நாள்கள் ஆகிவிட்டது
உங்கள் பிரிவு வாட்டுகின்றது எமையெல்லாம்
எங்கள் வீடு வெறுமையானது
எங்கள் வாழ்வு தனிமையானது
எமையெல்லாம் நிழலாய் நின்று காத்தவரே
உம் பிரிவு எமையெல்லாம் வாட்டுகின்றது
எங்கள் அன்புத் தெய்வத்தை 31ஆம் நாள்
இன்று நினைவு கூருகின்றோம்.

அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி- கிழக்கு.
(39276)(23-14)
உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

# சட்டத்தை மீறும் சட்டத்தரணி சட்ட நடவடிக்கை ஏதுமில்லை




வலி. வடக்கு.ஓக. 29
புதிதாக அமைக்கப்பட்டு வரும் காப்பெற் வீதிகள் வட மாகாண சபைத் தோதலில் போட்டியிடும் வேட்பாளர்களால் தேர்தல் பரப்புரைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டும் காணாது இருக்கின்றனர் என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.
பலகோடி ரூபா செலவில் யாழ். மாவட்டத்தில் போடப்பட்ட காப்பெற் வீதிகளில் பரவலாக வட மாகாண சபைத்தோதலில் போட்டியிடும் வேட்பாளாகளின் பெயாகள் இலக்கங்கள் மற்றும் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.
இதனால் போக்குவரத்து ஒழுங்குகள் சீர்குலைக்கப்படுவதுடன் தேர்தல் விதிமுறைகளும் மீறப்பட்டு வருகின்றன.
தேர்தல் திணைக்களமும் சா பொலிஸாரும் இத்தகைய விதி மீறல்களுக்குஎதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ள நிலையிலும் வீதி களில் சின்னம் பொறிப்பது நிறுத்தப்படவில்லை.
அரச கட்சி சார்பானவர்களே இத்தகைய நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவைகுறித்து பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ-86)

# கிடைக்கும் முறைப்பாடுகள் அனைத்தையும் தேர்தல் ஆணையருக்கே அனுப்புகிறோம்

## 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக.29
எம்மிடம் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் நாங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு தெரியப்படுத்துகின்றோம். இதுதான் நாம் முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கை என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.
வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியத் கூட்டமைப்பு வேட்பாளர்கள், கிளிநொச்சிமாவட்டத்தில்ஆளுங் கட்சியினரால் மேற்கொள்ளப்படும் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் நாம் ஆதாரத்துடன் கபே அமைப்பிடம் முறைப்பாடு செய்துள்ளோம். அந்த முறைப்பாடுகள் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது எனக் கேள்வியெழுப்பினர்.
இதற்குப் பதிலளித்த கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், எம்மிடம் செய்யப்பட்ட முறைப்பாடு களை நாம் தேர்தல்கள் ஆணையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளோம் என்று தெரிவித்தார்.
மேலும் இங்கு தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு 43நாள்களில் 84 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகளை விநியோகித்துள்ளோம் - என்றார் (ஐ-5-18)

## மதில்களில் சுவரொட்டிகள்

சங்கானை.ஓக.29
சங்கானை, சித்தங்கேணிப் பகுதிகளில் அரச கட்சிகளின் தேர்தல் சுவரொட்டிகள் அதிகமாக ஒட்டப்பட்டுள்ளதாகவும், இவற்றை அகற்றுவதற்கு பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
இரவு வேளைகளில் வாகனங் களில் வருபவர்கள் வீட்டு மதில்கள்,பொது இடங்களில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிவிட்டு செல்வதாகவும் மக்கள் கூறுகின்றனர்.
இரவு வேளைகளில் ஆயுதங் களுடன் வருபவர்களே இவ் வாறு சுவரொட்டிகளை ஒட்டுவதாகவும் வீட்டு மதில்களில் ஒட்டுவதற்கு ஆட்சேபம் தெரி வித்தால் மிரட்டுவதாகவும் வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-29)

# ஒற்றுமைக்கான உணர்வு இ.தொ.காவிடம் இல்லை

## தலவாக்கலையில் மனோ கணேசன்




குறைந்த தொகையினராக தமிழர் வாழும் மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் பெற்றுக் கொடுக்க அரசியல் பேதங்களை மறந்து இணைந்து செயல்பட வேண்டும். இத்தகைய தமிழின உணர்வுடன் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் இணைந்து செயற்பட்டமைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எனக்கு தந்த பரிசுதான், கொட்டகலையில் என்மீது நடத்தப்பட்ட தாக்குதல். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன்.
தலவாக்கலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கரந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்,
இன உணர்வுக்கும், நன்றி உணர்வுக்கும், பெருந்தன்மைக் கும் இ.தொ.கா.வில் இடமில்லை. பெருந்தலைவர் சௌமியமூர்த்தியுடன் அந்தக் கால கட்டம் முடிவுக்கு வந்து விட்டது என்பதை மலையக தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
அனைத்துத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொது அடிப் படை சம்பளத்தை உயர்த்த வலியுறுத்தி நாம் ஆர்ப்பாட்டம் செய்தோம். இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த போது என்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.
இது தமிழின உணர்வுடன் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் இணைந்து செயற்பட்டமைக்கு அவர்கள் எனக்குத் தந்த பரிசு. மேலும் இந்த வன்முறையாளர்களின் வன்செயல்கள் நேரடியாகவே மக்களுக்கு நன்கு தெரியும்.- என்றார். (ஐ)

# பாரபட்சம் காட்டுகின்றனர் பொலிஸார்

## கூட்டமைப்பு வேட்பாளர் தம்பிராசா குற்றச்சாட்டு



வலி.வடக்கு. ஓக. 29
யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸார் தமிழ் தேசியக்கூட்டமைப்பக்குஎதிராகவும் அரச கட்சி சார்ந்தவர்களுக்கு ஆதரவாகவும் செயற்பட்டுவருகின்றனர் என வட மாகாண சபைத்தோதலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிடும் ரி.தம்பிராசா குற்றம்சாட்டினார்.
சுதந்திரக் கட்சியைச் சார்ந்தவர்கள் தன்மீது தாக்குதல் நடத்தியதற்கு பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி யாழ்.பொலிஸ் நிலையம் முன் போராட்டம் நடத்தியபின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குற்றம் சாட்டினார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
என்மீதான தாக்குதல் குறித்து செய்யப்பட்ட முறைப்பாட்டை பொலிஸார் ஏனோ தானோ என்று கைவிட்டுள்ளனர். உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.
நான், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திறக்கு முன்பாக இராமநாதனால் தாக்கப்பட்டு காயமுற்ற நிலையில், பொலிஸாருக்கு தகவல் கொடுத் தேன். ஆனால் பொலிஸார் அவர்களைக் கைது செய்ய வில்லை. இதேபோன்று தோதல் சட்ட விதிமுறைகளுக்கு மாறாக செயற்படுபவர்கள் குறித்து சுட்டிக் காட்டியும் பொலிஸாரால் எந்த நடவழிக்கையும் எடுக்கப் படவில்லை.
சட்டத்தை செயற்படுத்த வேண்டிய பொலிஸாரே மீறல்களைக் கண்டும் காணாமலும் இருக்கின்றனர்-என்றார். (ஐ-86)









தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் நேற்று முன்தினம் மன்னார் மறை மாவட்ட ஆயர் ராயப்பு யோசப் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். (ஐ-5)

# வேட்பாளர்களிடம் ஆயுதங்கள் அப்பட்டமான தேர்தல் விதி மீறல்!

**த.தே.கூட்டமைப்பு வேட்பாளர் கஜதீபன் குற்றச்சாட்டு**



ஆளுங்கட்சி வேட்பாளர்களின் இரு குழுக்களுக்கிடையில் நடைபெற்ற மோதலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இவர்களுக்கு எங்கிருந்து ஆயுதங்கள் வழங்கப்பட்டன? ஆயுதங்களை வழங்கியவர்கள் யார்? என்ற கேள்வி எழுகிறது. அத்தோடு இது ஓர் அப்பட்டமான தேர்தல் வன்முறையாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண வேட்பாளர் பா.கஜதீபன்.

தென்மராட்சிப் பகுதியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரு குழுவினருக்கு இடையில் நடைபெற்ற மோதலில் துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டனத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்த அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர்களுக்கு ஆயுதங்களை வழங்கியவர் யார்? இவர்களுக்கு, அதுவும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆயுதங்களை வழங்கியவர் யார்? என்ற கேள்வி தவிர்க்க முடியாது. அரசு ஆயுதக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்கள் களையப்பட்டுள்ளன என்கின்றது. அப்படியானால் பாதுகாப்பு அமைச்சு இது தொடாபில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது?

நேற்று முன்தினம் நடந்த சம்பவம் ஓர் அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறலாகும். இதற்குத் தேர்தல் திணைக்களம் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். இன்று அவர்களுக்குள்ளே நீட்டப்பட்ட துப்பாக்கிகள் நாளை எம்மீது நீளாது என்பதற்கு என்ன உறுதிப்பாடு இருக்கிறது. இது குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

குடாநாட்டில் இதுவரை நடைபெற்ற அனைத்துக் கொலைகளுக்கும் கொள்ளைச் சம்பவங்களுக்கும் சூத்திரதாரிகள் யார் என்பது மக்களுக்கு இப்போது புலனாகியுள்ளது. இவர்களிடமுள்ள ஆயுதங்கள் உடனே களையப்பட வேண்டும். பொலிஸார் அதற்குரிய நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

மக்கள் சேவகர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டு சலுகை அரசியல் நடத்தும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் பதவிக்காக தமக்குள்ளேயே அடிபடுகின்றனர். இவ்வாறானவர்கள் எப்படி மக்கள் சேவை ஆற்றுவார்கள். மக்கள் இவர்களின் செயற்பாடுகளை உற்று அவதானித்து நல்ல பாடம் புகட்டவேண்டும். இவர்களை அரசியலில் இருந்து முற்றாகத் தோற்கடித்து ஒன்றுபட்ட தமிழினமாய் நம்மை நாமே ஆட்சி செய்வோம் - என்றுள்ளது. (ஐ-5)


பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் மக்கள் பலத்துடன்
வட மாகாணசபைத் தேர்தலில் வவுனியா மண்ணில் ...
எம்.எம்.ரதன் ஆசிரியர்
(தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞர் அணி)
வவுனியா மாவட்டம்
X 8
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
எங்கள் வாக்கு
எம்.எம்.ரதன்
ஆசிரியருக்கே





ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி,பண்பாட்டு,விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்.
அவர்களை ஆதரிப்போம்
X 19
(சீ/11220)
கல்வியின் ஊடாக அரசியல், சமூக பொருளாதார மேம்பாடு





வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்ப்பாண மாவட்டம்
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
தமிழ் தேசிய கூட்டமைப்பு
வடமராட்சி கிழக்கின் மைந்தன்
துணிச்சல் மிகு இளம் ஊடக பணியாளன்
X 14
(C/11230)
சந்திரலிங்கம் சுகிர்தன் (B.Com)





வடமாகாண சபைத்தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்
எங்களதும், உங்களதும்
காணாமல் போன
உறவுகளுக்காக....
விடுதலையின்றி
சிறைகளில் அடைத்து
வைக்கப்பட்டிருக்கும்
அரசியல் கைதிகளுக்காக
குரல் எழுப்பி வரும்
திருமதி அனந்தி
சசிதரனை ஆதரியுங்கள்.
X 1
திருமதி அனந்தி சசிதரன்
(எழிலன்)





வடமாகாண சபைத் தேர்தல் 2013
(தமிழரசுக் கட்சி)
X
வாக்குகளை சிதறடிக்காமல் அனைவரும் ஒருமித்து
தமிழரசுக் கட்சிக்கு வாக்களிப்போம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்
சுதந்திரம் எமது பிறப்புரிமை!
சுயாட்சி எமது கோரிக்கை!
தமிழ் படுகொலைகளுக்காக நீதி கிடைப்பதற்கு சர்வதேச விசாரணையைத்
தொடர்ந்து வலியுறுத்துவோம்.
எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.
9
X
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி






| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

# 27 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் இல்லை

## தென்மராட்சி தெற்கில் முறைப்பாடு


தென்மராட்சி, ஒக.29

தென்மராட்சி தெற்குப் பகுதியில் தாமதமாக மீளக்குடியேறிய 27 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் இந்திய வீட்டுத்திட்டம், சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனம் ஆகியவற்றினால் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிறுவனங்களினால் வீடமைப்புத் திட்டத்துக்கு குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்ட வேளையில் மீளக் குடியமராத குடும்பங்களே தமக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லையெனத் தெரிவித்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது இந்திய வீடமைப்புத் திட்டத்தில் தென்மராட்சி தெற்குப் பிரிவுகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு வீடமைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன. எனவே இந்தப் பிரதேசத்தில் மீண்டும் தெரிவுகள் இடம்பெறும்போது வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)



நேற்று பதினேழாம் திருவிழாவின் போது கந்தனின் வீதியுலாக் காட்சி

### மருதங்கேணி பிரதேச செயலகக் கட்டடப் பணிகள் மீண்டும்

வடமராட்சி.ஒக.29

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகக் கட்டட நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பிரதேச செயலகத்துக்கென மருதங்கேணி-தாளையடி வீதியில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அதன் 80 வீதமான பணிகள் நிறைவடைந்த நிலையில் கைவிடப்பட்டிருந்தன.

கைவிடப்பட்ட மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு மீளவும் கேள்விப் பத்திரம் கோரப்பட்டு தற்போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன. (வ-8)

### கையும் களவுமாக பிடிபட்டான் சைக்கிள் திருடன்

வலி.வடக்கு. ஒக.29

சுன்னாகம் நகரப் பகுதியில் உள்ள தனியார் கணினி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவியின் சைக்கிளைத் திருடிச் செல்ல முற்பட்டவர் கணினி நிலைய நடத்துநரால் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் விரட்டிச் செல்லப்பட்டு பிடிக்கப்பட்டார். நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் அந்தோனியார் ஆலயத்துக்கு முன்பாக உள்ள கணினி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவி சைக்கிளை வெளியே வழமை போன்று நிறுத்திவிட்டுச் சென்றுள்ளார். குறித்த இடத்துக்கு வந்த திருடன் யாரும் கவனிக்காத வேளையில் அம்மாணவியின் சைக்கிள் பூட்டை உடைத்து சைக்கிளை எடுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளார். இதனை அவதானித்த நிறுவன நடத்துநர் குறித்த நபரைப் பின் தொடர்ந்து சென்று பிடித்தபோது சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் தெரியவந்ததுடன் சைக்கிளும் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (வ-86)

## கழிவுப் பொருள்களைத் தகுந்த முறையில் அகற்ற நடவடிக்கை

### வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை ஏற்பாட்டில்



வடமராட்சி, ஒக.29

வடமராட்சி தெற்கு . மேற்கு பிரதேச சபையால் வீட்டுக்கழிவுகளையும், வீதிக்கழிவுகளையும் முறையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் வியாகேசு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீதிகளில் குப்பை போடுவதற்கான விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்படும். அதற்கேற்ப குப்பைகளை போட வேண்டும். அதேபோல் வீட்டிலிருந்து வெளியேற்றப்படும் குப்பைகள் எம்மால் ஒழுங்கான முறையில் அகற்றப்படும். அதேவேளை பச்சை மரங்களையும் குப்பைகளோடு ஏற்றுமாறு கூறுகிறார்கள். அவற்றைப் பிரதேச சபையினர் ஏற்ற மாட்டார்கள் எனவும், அதனை உரியவர்களே வெளியேற்ற வேண்டும். நெல்லியடிச் சந்தியில் உள்ள வியாபாரிகள் தமது கழிவுகளை ஒழுங்கான முறையில் அகற்ற வேண்டும்-என்றார். (வ-422)

## பிரதேச சபை நிதி மூலம் வீதிகளைத் திருத்த முடிவு

மாங்குளம்.ஒக.29

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு மூலம் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான தீர்மானம் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யார்க்கரு வீதி, மலையான் தோட்ட வீதி, நெல்லியடி பழைய சந்தைக் கடைகள் திருத்தம், ஓடை வீதி திருத்தம், தலைமையலுவலக வாகன தரிப்பிட நிர்மாணம் போன்ற பணிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன. (வ-422)

## பல்லூர்களும் போற்றும் நல்லூர்க் குமரா

பல்லூர்களும் போற்றும்
நல்லூர்ப் பதியமர்ந்து
தொல்லோர் புகழ்பாடும்
வல்லோன் குமரா உந்தன்
சந்தத்திருப் புகழை
சிந்தையிலே கொண்டு நான்
கந்தா உன் புகழ்பாட
முந்தைவினை களைவாய்
குஞ்சரன் துணையோடு
குஞ்சரி வள்ளியை
கொஞ்சிக் குலவி நீயுமவள்
நெஞ்சமது கவர்ந்தாய்
வஞ்சக அசுரன் தனை
வெஞ்சினம் கொண்டு வேலால்
வெஞ்சமர் செய்த உந்தன்
கஞ்சமலர் தாழ் பணிந்து
கெஞ்சி நாம் அருள வேண்டவெம்
பஞ்சம் பறந்தோடுமே

செல்வம் பவானந்தமூர்த்தி

## எம் துயர் தீர்த்திடுவாய்

நல்லைத் திருப்பதியில் நலமுடனே வீற்றிருக்கும்
எல்லையிலாப் புகழ்பெற்ற ஏந்தலே- வல்லவனே
ஏறுமயில் ஏறி ஓடிவந்து நீயும்
கூறுமடியார் வினை தீர்

முத்தமிழின் முதல்வா முக்கண்ணன் புதல்வா
எத்தனை நாள் ஏங்கி அழுகின்றோம்- வித்தகா
தமிழர் படும்பாடு பெரும்பாடு அல்லவோ
எழிலா நீ என்றெம் துயர் தீர்ப்பாய்

திருமதி செங்கமலம் தர்மபாலசிங்கம்

## பெருமானே காத்தருள்

நாவல் மரமேறி நாவற்கனி பறித்து
ஆவல் கொண்ட ஔவைக்குத் தந்தவனே
காவலனே நல்லைக் கனியமுதே ஓடோடி
ஆவலாய் வந்தெம் துயர் தீர்

அருளாறு முகங்களும் அருளொளி வீசிட
பெருநல்லைப் பதியுறை பேரழகா மனமுருகி
வருமடியார் வினை விலக்கி அவர் தம்மை
பெருவீதி வலம் வந்து பெருமானே காத்தருள்

செ.பரத்கிருஷ்ணா

# ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் வருகிறது புதிய கொள்கை

### கல்வி அமைச்சு ஏற்பாடு

அச்சுவேலி, ஒக29

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக புதிய "தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை" ஒன்று கல்வி அமைச்சால் உருவாக்கப்படவுள்ளது. இந்தப் புதிய கொள்கையை அடுத்த வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அதன் நகல் வடிவம் மாகாணக் கல்வி அமைச்சுகள் மற்றும் மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் நடைமுறையில் இருந்து வந்த தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையில் காலத்துக்கு ஏற்ற வகையில் புதிய ஏற்பாடுகள், நடைமுறை விதிகளை இணைத்துக் கொள்வதற்கும், தேசிய ஆசிரியர் இடமாற்றக்கொள்கையை மாகாண கல்வி அமைச்சுக்களும் மத்திய கல்வி அமைச்சும் உரிய முறையில் பின்பற்றி நடைமுறைப்படுத்துவதற்கும் ஏதுவாக புதிய தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை உருவாக்கப்படவுள்ளது.

> புதிய தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் நகல் வடிவம் மாகாணக் கல்வி அமைச்சுக்களுக்கும் மாகாண ஆளுநர் களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் நகல் வடிவம் மாகாணக் கல்வி அமைச்சுக்களுக்கும் மாகாண ஆளுநர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் புதிய கொள்கையில் மேலும் இணைத்துக் கொள்ள வேண்டிய அம்சங்களை உள்ளடக்கி தமது பரிந்துரைகளைச் சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்கையில் மாகாண அரசுக்களும் மத்திய கல்வி அமைச்சும் இணைந்த நிலையிலும் தனித்தனியாகவும் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளத்தக்க வகையில் வரைபுகள், வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேசியப் பாடசாலை ஆசிரியர்கள், மாகாணப் பாடசாலைகளுக்கும், மாகாணப் பாடசாலை ஆசிரியர்கள் தேசியப் பாடசாலைகளுக்கும் மாற்றிக்கொள்வதற்கான ஏற்பாடுகளும், குறிப்பிட்ட சேவைக் காலத்தை ஒரே பாடசாலையில் நிறைவுசெய்த ஆசிரியர்களை வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்தலை கட்டாயப்படுத்தல் சகல ஆசிரியர்களும் தமது சேவைக் காலத்தில் அதிகஷ்டப்பிரதேசம், கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்ற வேண்டியதன் அவசியம், ஆசிரியர் பதவி உயர்வுகளுடன் தொடர்பான சேவை வரையறை என்பன உள்ளடக்கப்பட்டிருப்பதோடு ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான விண்ணப்ப காலம், இடமாற்றச் சபைகளின் செயற்பாட்டு ஒழுங்கு மற்றும் நடைமுறை விதிமுறைகள் வரையறை செய்யப்படவுள்ளன. (வ-11)



## நாயைக் கடித்த குடிகாரனை தேடித் திரியும் பொலிஸார்

சென்னை. ஓக.29
தமிழ்நாட்டில் நாயை கடித்து மருத்துவமனைக்கு அனுப்பிய குடிகாரனை பொலிஸார் தேடி வருகின்றனர்.
சென்னை ஆர்.ஏ.புரம் பகுதியில் ஒரு நாய்க்குட்டியானது வாடிக்கையாக ஒரு இடத்தில் படுத்திருக்கும். அதே பகுதியை சேர்ந்த குமார் என்பவர் குடிபோதையில் நடந்து சென்றபோது அவரைப் பார்த்து நாய்க்குட்டி குரைக்க ஆரம்பித்துள்ளது. கடுப்பான குமார் நாய்க்குட்டியை கல்வீசி தாக்க முயன்றார். அப்போதும் விடாமல் நாய்க்குட்டி குரைத்துள்ளது.
போதையில் இருந்த குமாருக்கு என்ன செய்கிறோம் என்பதே தெரியாமல் நாய்க்குட்டியை பிடித்து காதை கடித்து துப்பி நாய்க்குட்டியை தூக்கி வீசியுள்ளார்.
கீழே விழுந்த நாய்க்குட்டி வலியால் கூச்சலிட்டது. சத்தம் கேட்டு அயலில் உள்ளவர்கள் ஓடி வந்து பார்த்தபோது நாய்க்குட்டி காதில் ரத்தம் வழிய அலறிக் கொண்டிருந்தது. அதை உடனே கால்நடை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்ததுடன். பொலிஸில் முறைப்பாடும் செய்தனர்.
முறைப்பாட்டை அடுத்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் தற்போது குமாரைத் தேடி வருகின்றனர். (ற)



தமிழகத்தில் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களை நாடு கடத்தக் கூடாது என்று வலியுறுத்தி திருச்சியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மக்கள் கலை இலக்கிய கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத்தொழிலாளர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி திருச்சி ஆகிய அமைப்புகள் ஒருங்கிணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். (ற)


## இந்தியாவில் 65 தீவிரவாத குழுக்கள்

புதுடில்லி. ஓக.29
இந்தியாவில் மொத்தமாக 65 தீவிரவாதக் குழுக்கள் உள்ளன என்று இந்திய உள்துறை அமைச்சர் ஆர்.பி.என்.சிங் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் இதுகுறித்து விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
"இந்தியாவில் 65 தீவிரவாத குழுக்கள் செயல்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
இவற்றில் அதிகபட்சமாக 34 குழுக்கள் மணிப்பூர் மாநிலத்தில் உள்ளன. காஷ்மீரில் லஷ்கர் இதொய்பா உட்பட 5 குழுக்கள் செயற்படுகின்றன. இந்த குழுக்கள் ஆந்திரா. கேரளா. கர்நாடகா. உ.பி.மகாராஷ்டிரா. குஜராத். ராஜஸ்தான். டெல்லி போன்ற மாநிலங்களில் தீவிரமாக செயல்படுகின்றன.
இந்தியாவில் தீவிரவாத செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கு வெளிநாடுகளில் இருந்து நிதியுதவியும் கிடைப்பதாக உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன" என்று தெரிவித்துள்ளார்.(ற)

# கண்டனம் வேண்டாம் பதிலடி கொடுங்கள்

## பாக். எல்லை மீறல் குறித்து வி.கே.சிங் கருத்து

புதுடில்லி. ஓக.29
இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் இராணுவம் ஊடுருவுவதற்கு கண்டனம் தெரிவிப்பதை விடுத்து. அதற்குச் சரியான பதிலடியைக் கொடுங்கள் என்று வலியுறுத்தியுள்ளார் இந்திய இராணுவ முன்னாள் தளபதி வி.கே.சிங்.
காஷ்மீரில் இந்திய எல்லைப் பகுதிக்குள் அத்துமீறி நுழையும் பாகிஸ்தான் இராணுத்தினர் தாக்குதலையும் மேற்கொண்டு வருகின்றனர். இது குறித்து இந்திய அரசு பாகிஸ்தானிடம் பலதடவைகள் கண்டனங்களைத் தெரிவித்துள்ளது. எனினும் எல்லை மீறும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றன.
இந்தநிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே இந்திய இராணுவ முன்னாள் தளபதி வி.கே.சிங் இவ்வாறு



கருத்துத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் இதுகுறித்துக் கூறும்போது.
"பாகிஸ்தான் எல்லை மீறல் குறித்து கண்டனம் மட்டும் தெரிவித்தால் போதாது. தேவையான பதிலடி கொடுக்கப்பட வேண்டும். அதை இந்தியா ஒருபோதும் செய்வதில்லை. இவ்வளவு நடந்தபிறகும் கண்டனங்களை மட்டும் வெளியிட்டுக் கொண்டிருப்பது சரியல்ல. சீனாவுடன் 1950ஆம் ஆண்டு ஏற்படுத்திய கொள்கைகளை பாதுகாப்பது எனில் எல்லை பிரச்னைக்கு தீர்வு காண முடியாது. அரசு நிலையில் காட்ட வேண்டிய கடுமையான பதிலை அளித்தால் ஏன் அதனை செய்தார்கள் அல்லது செய்ய வில்லை என மக்கள் புரிந்து கொள்வார்கள்" என்று தெரிவித்தார்.(ற)

## சித்துவைக் காணவில்லை

புதுடில்லி. ஓக.29
இந்தியாவின் அம்ரித்சர் தொகுதியில் இருந்து தேர்வு செய்யப்பட்ட பா.ஜ.க. உறுப்பினரும். முன்னாள் கிரிக்கெட் வீரருமான நவ்ஜோத் சித்துவைக் காணவில்லை. அவரை கண்டுபிடித்தால் ரூ.2 லட்சம் பரிசளிக்கப்படும் என்று அம்ரித்சர் பகுதியில் பதாதைகள் வைக்கப்பட்டுள்ளன.
அம்ரித்சர் பகுதிக்கு சித்து பல நாள்களாக வராததை அடுத்து அதிருப்தி அடைந்த அறக்கட்டளை அமைப்பு ஒன்றே இவ்வாறு பதாதைக்களை வைத்து தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனது.
"எங்கள் பகுதியில் பல பிரச்சினைகள் உள்ளன. ஆனால் சித்து வெகு நாள்களாக இந்த பக்கமே வரவில்லை. எனக்கு வாக்களித்தால் அம்ரித்சரை பரிஸ் போல ஆக்கிவிடுவேன் என்று கூறி வாக்கு கேட்டார். ஆனால் தற்போது எங்களை அனாதை யாக விட்டுவிட்டார்" என்று தெரிவித்துள்ளது அந்த அமைப்பு.(ற)

## தேர்தல் பணிகளை ஆரம்பித்தது அ.தி.மு.க.

சென்னை. ஓக.29
இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எப்போது வேண்டுமானாலும் நடத்தப்படும் என்ற நிலை தோன்றியுள்ளதை அடுத்து அ.தி.மு.க. தேர்தல் பணிகளை ஆரம்பித்துள்ளது.
மத்திய அரசின் பதவிக் காலம். அடுத்த ஆண்டு. மே மாதத்துடன் முடிகிறது. எனவே. மே மாதத்துக்கு முன் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சி மீது. தினம் ஒரு ஊழல் முறைப்பாடு வருவதால் தேர்தல் முன்னதாகவே வர வாய்ப்புள்ளது.
எனவே. தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகளான. தி.மு.க.. அ.தி.மு.க சில மாதங்களுக்கு முன்னரே தங்களை தேர்தலுக்கு தயார்படுத்தும் பணிகளை ஆரம்பித்துள்ளன.
தி.மு.க. தேர்தலுக்காக மாவட்டம் தோறும் நிதி வசூலிப்பில் ஈடுபட்டுள்ளது. அ.தி.மு.க.. மாவட்டந்தோறும் கட்சியின் ஆலோசனை கூட்டத்தை நடத்தி வருகிறது.இது ஒருபுறம் இருக்க வழக்கம்போல் அ.தி.மு.க. தலைமை வேட்பாளர் தேர்விலும். மற்ற கட்சிகளை முந்திக் கொண்டு ஒவ்வொரு தொகுதிக்கும் மூன்று பேர் அடங்கிய பட்டியலை தயார் செய்துள்ளது. தேர்தலுக்காக தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளிலும் தொகுதிக்கு மூன்று பேர் வீதம் கட்சியின் மாவட்டச் செயலர்கள். அமைச்சர்கள். வாரியத் தலைவர்கள் மூலம் பெயர் பட்டியல் கேட்கப்பட்டது.
அந்த பட்டியலில். தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள். கடந்த தேர்தலில் போட்டியிட்டு தோற்றவர்களின் பெயர்களை சேர்க்கவும். கட்சித் தலைமை. மாவட்ட செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி. தொகுதிக்கு மூவர் கொண்ட பெயர் பட்டியலை கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட செயலர்கள் ஒப்படைத்து உள்ளனர்.
தற்போது அ.தி.மு.க.. தலைமையால் வாங்கப்பட்ட பெயர் பட்டியல், விரைவில் உளவுத்துறை வசம் ஒப்படைக்கப்படும் என்றும், அதில் உள்ளவர்களின் மீது. உளவுத்துறை அதிருப்தி அறிக்கை அளித்தால். அவர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



தமிழ்நாட்டில் சதுரங்கப் பயிற்சியாளர் ஒருவர் தலைகீழாக ஒருமணிநேரம் தொங்கியபடி சதுரங்கம் விளையாடி சாதனை படைத்துள்ளார். சுவாமிவிவேகானந்தா யோகா மற்றும் ஸ்கேட்டிங் கழகத்தின் சதுரங்கப் பயிற்சியாளர் தங்கமாரியப்பன் என்பவரே தழைகீழாக கயிற்றில் தொங்கியபடி 1 மணி நேரம் செஸ் விளையாடி சாதனை புரிந்துள்ளார். (ற)

## புதிய மாநிலங்கள் உருவாக்கப்படாது

புதுடில்லி. ஓக.29
தெலுங்கானாவைப் போல வேறு புதிய மாநிலம் உருவாக்கும் திட்டம் இல்லை என்று மக்களவை யில் இந்திய மத்திய அரசு அறிவித்தது.
போடோலாந்து. கோர்காலாந்து. விதர்பா போன்ற புதிய மாநிலங்களை உருவாக்குவது பற்றி மக்களைவையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு உள்துறை இணையமைச்சர் ஆர்.பி.என். சிங் எழுத்துபூர்வமாகப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தெலுங்கானாவைப் பிரிக்கும் அரசின் முடிவு வெளியானதிலிருந்து. போடோலாந்து. கோர்காலாந்து போன்ற பல புதிய மாநிலங்களுக்கான கோரிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.(ற)

## நடுவீதியில் அடி வாங்கிய நடிகை வேடிக்கை பார்த்த பொதுமக்கள்

மும்பை. ஓக.29
மும்பையில் பிரபல தொலைக்காட்சி நடிகை ஒருவருக்கு பொதுமக்கள் முன்னிலையில் சரமாரியாக அடித்து உதைத்துள்ளனர் திருடர்கள். பெரும் எண்ணிக்கையானோர் கூடியிருந்போதும் யாரும் அதைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று கூறப்படுகின்றது.
பிரபல தொலைக்காட்சி நடிகையான லவ்லீன் கவுர். ஒட்டோவில் சென்றபோது அவரிடம் இருந்த கைப்பையை ஒருவன் திருடிக் கொண்டு தப்பி ஓடியுள்ளான்.
உடனே ஒட்டோவில் இருந்து இறங்கிய கவுர் அந்தத் திருடனைத் துரத்தியுள்ளார். ஆனால். சிறிது நேரத்தில் திருடனுடன் மேலும் இருவர் சேர்ந்து கவுரை சுற்றி வளைத்து சரமாரியாக



அடித்து உதைத்துள்ளனர்.இந்த தாக்குதலில் காயம் அடைந்த கவுர் உதவி கேட்டு அழுதுள்ளார். பட்டப்பகலில் பொதுமக்கள் முன்னிலையில் இந்த சம்பவம் நடந்தும் யாரும் தடுக்க முன்வரவில்லை.
இதுபற்றி தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து இருவரை மடக்கிப் பிடித்து கைது செய்துள்ளனர். மற்றைய ஒருவனைத் தேடி வருகின்றனர். (ற)

# உத்தரவிட்டால் தாக்குதல்

## சிரிய போர் நடவடிக்கைக்கு படைகள் தயார் என்கிறார் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் சக் ஹெகல்

வொஷிங்டன், ஓக.29
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டதும் சிரியா மீது தாக்குதல் நடத்துவதற்குரிய தயார் நிலையில் அமெரிக்கப் படைகள் காத்திருக்கின்றன என்று தெரிவித்துள்ளார் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் சக் ஹெகல்.

சிரியா இரசாயன ஆயுதப் பிரயோகங்களை மேற்கொண்டு வருகின்றது என்று குற்றஞ் சாட்டியுள்ள அமெரிக்கா, அந்நாட்டின் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்குரிய முன்னேற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. தற்போது தாக்குதலுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ள நிலையிலேயே அமெரிக்க பாதுகாப்புச் செயலர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

### பேச்சுக்கள் ரத்து

சிரிய உள்நாட்டுப் போரை அரசியல் ரீதியாக முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக ரஷ்யாவுடன் நடத்தத் திட்டமிட்டிருந்த பேச்சுக்களை திடீரென இடைநிறுத்தியுள்ளது அமெரிக்கா.

> சிரிய அரசு இரசாயன ஆயுதங்கள் பிரயோகித்தமை தொடர்பாக சிறியளவு சந்தேகமே காணப்படுகின்றது என்று முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த அமெரிக்க அரசு தற்போது அதற்கான ஆதாரங்கள் உண்டு என்று உறுதிபடத் தெரிவித்துள்ளது.



இதுகுறித்துத் தனது டுவீட்டர் தளத்தில் கருத்துத் தெரிவித்துள்ள ரஷ்ய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் ஜென்னடி காடிலோவ் "காரணம் எதுவுமின்றி அமெரிக்கா பேச்சை நிறுத்தியமை வருத்தமடையச் செய்யும் செயல்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"சொந்த நாட்டு மக்களின் மீது சிரிய இராணுவம் இரசாயனத் தாக்குதலை மேற்கொண்டிருக்கும் என்று கூறுவது கேலிக்கூத்தானது. அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. இந்தநிலையில் அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாதது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஆதாரம் உள்ளது

சிரிய அரசு இரசாயனத் தாக்குதல்களை மேற்கொண்டது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் உள்ளன என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது அமெரிக்கா. சிரிய அரசு இரசாயன ஆயுதங்கள் பிரயோகித்தமை தொடர்பாக சிறியளவு சந்தேகமே காணப்படுகின்றது என்று முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த அமெரிக்க அரசு தற்போது அதற்கான ஆதாரங்கள் உண்டு என்று உறுதிபடத் தெரிவித்துள்ளது.

சிரியாவில் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் அமெரிக்கா அறிக்கை ஒன்றைத் தயார்ப்படுத்தியுள்ளது. அந்த அறிக்கை அமெரிக்க உளவுத்துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

### விபரீதம் நேரும்

தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கப் படைகள் தயாராக உள்ளன என்று சக் ஹெகல் தெரிவித்துள்ளபோதும், இரசாயனத் தாக்குதலை எந்தச் சந்தர்ப்பத்திலும் தாம் நடத்தவில்லை என்று சிரிய அரசு தெரிவித்துள்ளது. அமெரிக்கா இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுமானால் விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று சிரியா, ரஷ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் கூட்டாக எச்சரித்துள்ளன. (ற)

## பாக். சிறுமி மலாலாவுக்கு உயரிய விருது



ஆம்ஸ்டர்டாம், ஓக.29
பெண்களின் கல்விஉரிமைகளுக்காகப் போராடி, அதன் காரணமாக தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய சிறுமி மலாலாவுக்கு சர்வ தேச குழந்தைகளின் அமைதிக்கான உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் நகரில் இயங்கிவரும் 'கிட்ஸ் ரைட்ஸ்' என்ற குழந்தைகளின் உரிமைகளுக்கான அமைப்பு இந்த விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.

"தனது உயிரைப் பணயம் வைத்து உலகில் உள்ள பெண் குழந்தைகள் கல்வியறிவை பெறும் உரிமைக்காக போராடியவர் மலாலா. 2013ஆம் ஆண்டுக்கான சர்வ தேச குழந்தைகளுக்கான அமைதிப் பரிசை மலாலாவுக்கு வழங்குவதன் மூலம் குழந்தைகளின் உரிமைக்காக சிறப்பு அர்ப்பணிப்புடன் போராடிய இந்த வீரமும், திறமையும் வாய்ந்த சிறுமியின் மீது கிட்ஸ் ரைட்ஸ் இயக்கம் ஒளி வெள்ளத்தை பாய்ச்சுகிறது" என்றுவிருதை வழங் கும் 'கிட்ஸ் ரைட்ஸ்' அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஒரு லட்சம் யூரோ பணம் மற்றும் சான்றிதழ் கொண்ட இந்த விருது தெற்கு ஹாலந்தின் தலைநகர் ஹாக் நகரில் அடுத்த மாதம் நடைபெறும் விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது. ஏமன் நாட்டின் பெண்ணுரிமைப் போராளியும், பத் திரிகையாளரும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான தவக்கோல் கர்மன் மலாலாவுக்கு இந்த விருதை வழங்கவுள்ளார்.

இந்த உயரிய விருது கடந்த ஆண்டு 13 வயதுச் சிறுவன் ஒருவனுக்கு வழங்கப்பட்டிருந்தது. தன்னைப்போன்று தெருக்களில் தவித்த பிலிப்பைன்ஸ் நாட்டு அனாதைக் குழந்தைகளின் நல்வாழ்வுக்காக பாடுபட்ட 13 வயது சிறுவனுக்கே இந்த விருது கடந்த வருடம் வழங்கப்பட்டது. (ற)

## பல்கலைக்கழக பரீட்சையில் ஒருவர் கூட தேறவில்லை

### லைபீரியாவில் பரிதாபம்

மொன்றோவியா, ஓக.29
பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு ஒன்றில் அனைத்து மாணவர்களும் தோல்வி அடைந்த சம்பவம் லைபீரியாவில் நிகழ்ந்துள்ளது.

மாணவர்களிடையே கல்வி பெறுவதற்கான ஆர்வம் இல்லாததும், அடிப்படை ஆங்கில அறிவும் இல்லாததுமே இந்த நிலைக்கு காரணம் எனப் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அந்நாட்டின் கல்வித் துறை அமைச்சர், "25,000 பேர் பரீட்சை எழுதிய இந்த தேர்வில் ஒருவர் கூட தேர்ச்சி பெறவில்லை என்பதை தன்னால் நம்ப முடியவில்லை. மாணவர்களுக்கு திறமை இல்லையெனில் அவர்கள் பள்ளித் தேர்வில் வெற்றி பெற்றிருக்க முடியாது. பல்கலைக்கழக நிர்வாகத்திடம் தேர்வு முடிவுகள் குறித்து விவாதிக்க வேண்டியுள்ளது. நாட் டின் கல்வி அமைப்புகளை மாற்றிஅமைக்க வேண்டி உள்ளது" என்று கூறியுள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



பாக்தாத்தில் இருந்து 65 கி.மீ. தொலைவில் உள்ள பகுபா நகரில் நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர். அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்ததில் 42 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ற)

## 4 வயதுச் சிறுவனுக்கு தொந்தரவு 10 வயது சிறுமி மீது வழக்குப் பதிவு

### ஆஸ்திரேலியாவில் விநோத சம்பவம்

மெல்பேர்ன், ஓக.29
4 வயதுச் சிறுவன் ஒருவனுக்கு 10 சிறுமி ஒருத்தி பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளாள் என்று வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விநோத சம்பவம் ஆஸ்திரேலியாவின் ஹாரிஸ் மாவட்டத்தில் நடந்துள்ளது.



10 வயதான சிறுமி ஆஷ்லே அவளது வீட்டின் அருகே உள்ள குழந்தைகளுடன் விளையாடியுள்ளாள். அப்போது 4 வயதுச் சிறுவன் ஒருவனை தவறான நோக்கத்துடன் தொட்டாள் என்று அயல் வீட்டைச் சேர்ந்த ஒருவரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டை அடுத்து பொலிஸாரும் வழக்குப் பதிவு செய்தனர்.

வழக்குப் பதிவு செய்யப்பட்டதையடுத்து சிறுமி ஆஷ்லே நான்கு நாள்கள் ஹாரிஸ் மாவட்ட சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஹூஸ்டன் குற்றவியல் விசாரணை பொலிஸார் ஆஷ்லேவிடம் விசாரணை நடத்திய போது அவளுடன் அவளது பெற்றோர்கள் உடன் இருக்க பொலிஸார் அனுமதிக்க வில்லை என்று கூறப்படுகின்றது.

வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகவுள்ளன. அதில் சிறுமி ஆஷ்லே மோசமான பாலியல் குற்றச்சாட்டை எதிர்கொள்ள உள்ளாள். (ற)

## இரட்டையரைப் பிரிக்க 10 மணி நேரப் போராட்டம் முடிவில் வெற்றிபெற்றனர் சீன மருத்துவர்கள்

பீஜிங், ஓக.29
இருபது மருத்துவர்களின் 10 மணி நேரப் போராட்டத்தின் முடிவில் ஒட்டிப் பிறந்த குழந்தைகள் வெற்றிகரமாகப் பிரித்தெடுக்கப்பட்டன.



சீனாவின் குவாங்சி மாகாணத்தில் உள்ள குய்பிங் மருத்துவமனையில் கடந்த ஜூன் மாதம் 12 ஆம் திகதி பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டார் யுவே ஜூக்சிங். வழமையான சோதனைகளின் பின்னர் மருத்துவமனையில் பிரசவத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார் அவர். 14 ஆம் திகதி அவருக்கு அழகான இரு பெண் குழந்தைகள் பிறந்தன.

குழந்தைகள் பிறந்த மகிழ்ச்சியை யுவே ஜூக்சிங்கால் கொண்டாட முடியவில்லை. ஏனெனில் இயல்பாக இல்லாமல் அந்தக் குழந்தைகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் காணப்பட்டன. அதனால் அந்தக் குழந்தைகள் எவ்வளவு காலம் உயிருடன் இருக்குமோ என்ற பயம் யுவே ஜூக்சிங்கை மட்டுமல்லாது குய்பிங் மருத்துவமனை வைத்தியர்களையும் ஆட்டிப் படைக்கத் தொடங்கியது.

தீவிர வைத்திய பரிசோதனைகளைத் தொடங்கினார்கள் குய்பிங் மருத்துவமனை வைத்தியர்கள். ஒட்டியபடி பிறந்த இந்தக் குழந்தைகளைத் தனித்தனியாகப் பிரிக்க முடியுமா என்பதே அவர்களின் சோதனைகளின் முக்கிய நோக்கம். தீவிர சோதனைகளின் பின்னர் குழந்தைகளைப் பிரிப்பதால் ஆபத்து எதுவும் ஏற்படாது என்று தீர்மானித்தனர்.

வைத்தியர்கள் சந்திரசிகிச்சைக்குத் தயார். ஆனால் குறித்த சத்திரசிகிச்சைக்குப் பெருந்தொகைப் பணம் செலவாகும். யுவே ஜூக்சிங்கிடம் அந்தளவுக்குப் பணவசதி கிடையாது. அதனால்சத்திரசிகிச்சையை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. மனம் தளராக யுவே ஜூக் சிங் ஊடகங்கள் மூலமும் இணைத்தளங்கள் மூலமும் குழந்தைகளின் புகைப்படங்களை வெளியிட்டு நிதியுதவி செய்யுமாறு கோரிக்கை விடுத்தார்.

யுவே ஜூக்சிங்கின் இந்த முயற்சிக்கு எதிர்பாராத அளவுக்கு பயன் கிடைத்தது. மளமளவென கிடைத்த நிதியுதவிகள் ஒரு இலட்சம் யுவானுக்கும் அதிகமாகச் சேர்ந்தது. யுவே ஜூக்சிங் சற்றும் எதிர்பாராத விதமாக சந்திரசிகிச்சையின் சில பகுதிகளை குவாங்சி மருத்துவ பல்கலைக் கழக மருத்துவமனை இலவசமாகச் செய்வதாகவும் அறிவித்தது.


அனைத்து முன்னேற்பாடுகளும் நிறைவுற்றநிலையில் சத்திரசிகிச்சை கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமானது. 20 மருத்துவர்களின் கடும் போராட்டம். 10 மணி நேர சத்திர சிகிச்சை. ஒட்டிப் பிறந்த குழந்தைகள் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டன. சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக முடித்தனர் குவாங்சி மருத்துவ பல்கலைக் கழக மருத்துவமனை மருத்துவர்கள்.

சத்திர சிகிச்சைக்குப் பின்னர் 3 வாரங்கள் மருத்துவக் கண்காணிப்பில் இருந்த குழந்தைகள் இப்போது நலமுடன் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன. எல்லாக் குழந்தைகளைப் போலவும் அந்தக் குழந்தைகளும் இயல்பாக இருக்கின்றன என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றார் யுவே ஜூக்சிங். (ற)

## ஏவுகணை செலுத்தும் முயற்சியை இறுதிநேரத்தில் கைவிட்டது ஜப்பான்

### தொழில்நுட்பக் கோளாறே காரணம்

டோக்கியோ, ஓக.29
அதிநவீன தொலைநோக்கிகளுடன் விண்ணில் செலுத்தப்படவிருந்த ஜப்பானிய ஏவுகணை தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இறுதி நேரத்தில் இடைநிறுத்தப்பட்டது.



நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் குறைந்த செலவில் அதேவேளை அதிக திறன் கொண்டதாக இந்த ஏவுகணை ஜப்பானிய விஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்டிருந்தது. குறித்த ஏவுகணையை நேற்று முன்தினம் கியூஷூ தீவிலிருந்து விண்ணுக்குச் செலுத்தத் தீர்மானித்திருந்தபோதிலும் இறுதி நேரத்தில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

அதிநவீன, தொலைநோக்கிகள் பொருத்தப்பட்டு வியாழன், செவ்வாய் மற்றும் சனி ஆகிய கோள்களைப் பற்றிய அரிய தகவல்களைப் பெறும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட இந்த ஏவுகணையைச் செலுத்துவதில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே அந்தத் திட்டம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது என்று கூறப்படுகின்றது.

12 ஆண்டுகளின் பின்னர் ஏவுகணையை விண்ணுக்குச் செலுத்தும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது ஜப்பான். எனினும் அந்த முயற்சிகள் வெற்றிகரமாக முடிவடையவில்லை. (ற)

## வாண்மை விருத்தி கருத்தரங்கு இன்று

மாங்குளம், ஓக.29
முறைசாராக் கல்விப் போதனாசிரியர்களுக்கான வாண்மை விருத்தி கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சம்பந்தப்பட்ட போதனாசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முறைசாராப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வே.இராசகுமாரன் தெரிவித்துள்ளார். (வ-422)

## இரவில் நிறம் மாறும் மதில்களும் கேற்களும் தேர்தல் சுவரொட்டிகளால்

தென்மராட்சி, ஓக.29
தென்மராட்சியில் ஆயிரக்கணக்கான ரூபா செலவில் மதில் அமைத்து அதற்கு நல்ல முறையில் தகரக் கேற்களும் அமைக்கப்பட்டு பிடித்த வர்ணமும் பூசப்பட்ட நிலையில் அவை இரவில் நிறம் மாறுகின்றன. இவ்வாறான சம்பவங்கள் தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்த நிலையில் முதல் நாள் இரவு இனந்தெரியாதோர் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை மதில்களில் ஒட்டிவிட்டு சென்று விடுகின்றனர். அந்தச் சுவரொட்டிகளுக்கு மறுநாள் இரவு கழிவு ஓயில் ஊற்றப்பட்டு கறுப்பு நிறமாக மாற்றப்படுகின்றது.
தேர்தல் வேட்பாளர்களுடன் பகைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபடாமல் உள்ள மதில்களும் இரட்டைக் கேற்களும் மறுநாள் கழிவு ஓயில் ஊற்றப்பட்டு கறுப்பு நிறமாக மாற்றப்படுவதால் மதில் உரிமையாளர்கள் இது குறித்து எவரிடம் முறையிடுவது என்று தெரியாமல் தவிக்கின்றனர். (வ-9)

## தளபாடங்கள் விற்போரிடையே மோதல் இருவர் காயம்

தென்மராட்சி, ஓக.29
வீடு வீடாகச் சென்று தளபாடங்கள் விற்பவர்களிடையே இடம்பெற்ற மோதலில் இருவர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரியில் இடம்பெற்றது.
மொரட்டுவவைச் சேர்ந்த நவிபர் சமிரா (வயது-32), சமிந்த (வயது-28) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
ஒருவர் எடுத்த முற்பதிவுக்கு மற்றவர் தளபாடத்தைக் கொடுத்து பணம் பெற்றதால் மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. (வ-9)

## மகனை ஆஸ்பத்திரியில் பார்வையிட்டுச் சென்ற பெற்றோரும் விபத்தில்

யாழ்ப்பாணம், ஓக.29
யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் மகனைப் பார்வையிட்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பெற்றோர் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்ததால் அவர்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த டிராக் டர் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்தால் குடும்பஸ்தரான பண்டத்தரிப்பைச் சேர்ந்த யசோதரன் (வயது-55) இடுப்பு எலும்பு விலகி ஆபத்தான நிலையிலும், அவரது மனைவியான விஜிதா (வயது-44) கை மற்றும் கழுத்தில் கடும் உட்காயத்துக்கும் உள்ளாகினர். (ஓ-4)


### பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 06-11 வரை கணிதம், வரலாறு கற்பிக்கப்படும். கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம். தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
தொடர்பு: **075 248 0158**
(39288)(3.6.11)

### CONSULATE GENERAL OF INDIA JAFFNA
**Notice for Attorney's Services**

Consulate invites offers from Attorneys based in Jaffna specializing in Property related matters for advising, drawal of Sale & Purchase agreement to purchase land and all other issues in finalizing the sale agreement. The offer should give details of services that will be rendered, terms and conditions and legal fees payable for undertaking the above work and be sent in a sealed cover which should reach by September 1, 2013super scribing the envelope with "Offer for Legal Services" at the following address.

**Head of Chancery
Consulate General of India.
14,Maruthady Lane, Nallur, Jaffna.**
(C/11649)(3.6.11)

### The Open University of Sri Lanka
Faculty of Natural Sciences

Applications are issued for
**B.Sc. Degree Programme**

***Admission requirements:***
* 3 passes in G.C.E. A/L Science / Maths stream (Applied Mathematics, Pure Mathematics, Combined Mathematics, Biology, Botany, Chemistry, Physics, Zoology), in any number of sittings

***Application forms:***
*Available from 12.08.2013 to 18.09.2013*
*Could be collected from: Open University of Sri Lanka, Jaffna Regional Centre, Brown road, Kokkuvil.*
*Contact No: 021-222-3374*

***Closing date : 18th of September 2013***

**OPEN DAY**
**(அறிமுகக் கருத்தரங்கு)**
All are welcome
On 31st of August 2013 (Saturday)
9.30 am
Venue: The Open University of Sri Lanka
Jaffna Regional Centre
Brown road, Kokkuvil

Registrar
The Open University of Sri Lnaka
(சி/11647)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

சுன்னாகத்தில் வதியும் ஓய்வு நிலைக் கணக்காளர் ஒருவருக்கு சமையல்வேலை செய்வதற்கு குடும்பப் பொறுப்புகள் அற்ற பெண் ஒருவர் தேவை. கிராம சேவகரின் நற் சான்றிதழுடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: **077 153 8284**
(39246)(1.6.6)

### TV கள் மலிவு விலையில்

யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் உத்தரவாதத்துடன் SONY Wega TV கள் 21"- 11000/= முதல், 29"- 16000/= Panasonic 29" -15000/= DTS amp. Box, DVD என்பன.
தொடர்பு: 077 044 0570
சோனி ரேடியோ சென்ரர் (பொலிஸ் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம்.
(39232)(45.6.3)

### கிறிஸ்த சேவ ஆச்சிரமம் மருதனார்மடம் - சுன்னாகம்

இந்த ஆச்சிரமத்தின் 74 ஆவது ஆண்டுவிழா இம் மாதம் ஓகஸ்ட் மாதம் 30,31,செப்ரெம்பர் 01 ஆம் திகதிகளில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

**30.08.2013**
காலை : 6.30 மணி - தூய நற்கருணை வழிபாடு
மாலை : 4.30 மணி - எழுப்புதல் வழிபாடு

**31.08.2013**
காலை : 07.00 மணி - தூய நற்கருணை வழிபாடு
காலை : 9.30 மணி - தோத்திர வழிபாடு
முற்பகல் : 10.30 மணி - வேதாகமப் படிப்பு
முற்பகல் : 10.45 மணி - பகிரங்கக் கூட்டம்
மதியம் : 12.00 மணி - பரிந்து வேண்டல்
பிற்பகல் : 2.30 மணி - கலை நிகழ்ச்சிகள்

**01.09.2013** காலை 6.30 மணி - தூய நற்கருணை வழிபாடு

குருமுதல்வர் S.J.ஜெயவீரசிங்கம் (தலைவர்)
அருட்திரு T.H.வசந்தகுமார் (செயலாளர்)
அருட்திரு S.W.தேவகுமார் (பொருளாளர்)
**பரிபாலன சபை**
(39247)(45.6.3)

### சேவை நலன் வாழ்த்துக்கள்




Best Wishes

மாந்தை கிழக்கு பிரதேச இணைப்பாளரும் பிரதேச சபை உறுப்பினரும், சமூக சேவையாளருமான
**பொன்னுச்சாமி பிருந்தாபன்**

துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கத்தின் கௌரவ தலைவரும் மு/கொல்ல விளாங்குளம் அ.த.க பாடசாலையின் அதிபரும், சமூக சேவையாளருமாகிய
**தம்பிப்பிள்ளை பிறேமச்சந்திரன்**

ஆகிய இருவரும் 14.08.2013 அன்று சமாதான நீதிவானாக முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர். இவர்களுடைய சேவை மேன்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**
த.சுதாகரன், அ.சிறீகாந்தன், இ.உதயராசா, ம.மூர்த்தி ஆகியோருடன் துணுக்காய் சங்கப் பணியாளர்களும்

### பவளவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்




இன்று 29.08.2013
தனது பவள விழாவினைக் கொண்டாடும்
LION
**ஆ.கா.இராமநாதன்**
அவர்கள் ஆவரங்கால் பர்பதபத்தினி சமேத நடராஜப் பெருமான் திருவருளால் நோய் நொடிகள் இன்றி நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.
*021 321 0915*

### 50 வது திருமண நாள் வாழ்த்துக்கள்



**திரு.திருமதி மகேந்திரன் தையல்நாயகி**

எங்கள் வளமான வாழ்விற்கு வழிகாட்டி இன்று நாம் உயர் நிலையை அடைய ஊன்று கோலாக இருந்த எமது கண்கண்ட தெய்வங்களாகிய அம்மா அப்பாவுக்கு இன்றைய நன்நாளிலே இன்று போல் என்றும் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் அருள் வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

*29.08.2013*
செட்டியார் மடம்
(சி/11640)

# சில்ப கண்காட்சியில் 6 லட்சம் இலாபம்

## பனை அபிவிருத்திச் சபைக்கு

யாழ்ப்பாணம், ஓக. 29
அண்மையில் நடைபெற்ற வருடாந்த சில்ப கண்காட்சியில் பனை அபிவிருத்திச் சபைக்கு 6 லட்சம் ரூபா இலாபம் கிடைத்துள்ளது என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.
வருடாந்தம் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களை ஒன்றிணைத்து கொழும்பில் சில்பக் கண்காட்சி நடத்தப்படுகின்றது. இந்த வருடம் தேசிய அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டில் அண்மையில் கண்காட்சி நடத்தப்பட்டது.
இந்தக் கண்காட்சியில் நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட பனைசார் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் பனைசார் உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. இதன் போதே 6 லட்சம் ரூபா வரையான உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன எனவும் தெரிவித்தார். (ந-14)

# வடமராட்சி வடக்கு கடலில் இந்திய மீனவர் அத்துமீறல்

## தடுக்கக் கோரும் உள்ளூர் மீனவர்

வடமராட்சி, ஓக. 29
வடமராட்சி வடக்கு கடல் பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் உள்ளூர் மீனவர்களின் மீன்பிடி வலைகளை அறுத்துச் செல்வதால் கோடிக்கணக்கான ரூபா இழப்பு ஏற்பட்டு வருவது டன் உள்ளூர் மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாதிருப்பதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே. அருள் தாஸ், இடம்பெயர்ந்த மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலை வர் எஸ்.யோகரார்சா ஆகியோர் தெரிவித்தனர்.
கடந்தஇரு வாரங்களுக்குமேலாக தொடர்ந்து இந்திய மீனவர்களின் நூற்றுக்கணக்கான இழுவைப் படகுகள் வடமராட்சிக் கடலில் தொழிலில் ஈடுபட்டுள்ளன. அவை தொழிலில் ஈடுபடும் போது மீன்பிடிப்பதற்காக உள்ளூர் மீனவர்கள் கடலில் விரித்த வலைகளை சுக்குநூறாக அறுத்துச் செல்கின்றன. இத்தகைய செயற்பாடுகளால் உள்ளூர் மீனவர்கள் தொழில் வாய்ப்புகளை இழப்பதுடன் பெரும் சொத்தான மீன்பிடி வலைகளையும் இழந்து மீள முடியாத கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் உள்ளூர் மீனவர் கள் வருமானம் இன்றி பட்டினி நிலையை எதிர்கொண்டுள்ளனர். அவ்வாறான அத்துமீறல்களில் இந் திய மீனவர்கள் ஈடுபடாத வகையில் கட்டுப்படுத்த அல்லது தடுக்க உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டுமென என இரு சங்கங்களின் தலைவர்களும் கோரியுள்ளனர். (வ-8)

# தனியார் பஸ் புறக்கணிப்பால் டிப்போவின் வருமானம் எகிறியது



வடமராட்சி, ஓக.29
தனியார் பஸ் சங்கத்தின் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பால் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ 3 லட்சத்து 23 ஆயிரம் ரூபாவை மேலதிக வருமானமாகப்பெற்றுக்கொண்டது.
சிற்றூர்தி சேவைச் சங்கத்தினால் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப் பட்ட பணிப்புறக்கணிப்பினால் சிற்றூர்திகள் சேவையில் ஈடுபட வில்லை.
இதனால் பலத்த சிரமங்களின் மத்தியில் பருத்தித்துறை இ. போ.ச. டிப்போ சிறப்பான சேவைகளை மேற்கொண்டது. இந்தச் சேவையினால் நாளாந்தம் சராசரியாக 4 லட்சம் ரூபா வருமானமாகப் பெற்று வந்த பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ அன்றைய தினம் 7 லட்சத்து 23 ஆயிரம் ரூபாவை வருமானமாகப் பெற்றுக் கொண்டது.
குறித்த தினத்தில் பருத்தித் துறை - யாழ்ப்பாணம் பிரதான பாதையில் கூடுதலான பஸ்கள் சேவையிலீடு படுத்தப் பட்டிருந்தன. (ஓ-8)

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பித்தோரில்

# தமிழர் எண்ணிக்கை மிகக் குறைந்தளவே

அச்சுவேலி, ஓக.27
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பித்தவர்களில் தமிழர்களின் எண்ணிக்கை மிகக் கணிசமானவையே. நாடளாவிய ரீதியில் 300 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் புதிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் முதலாம் தவணையில் ஆரம்பமாகவுள்ளன. அதற்கு பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறாத நிலையில் ஆசிரியர் பணி புரிபவர்களிடம் இருந்து கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.
நாடளாவிய ரீதியில் பலாலி ஆசிரியர் கலாசாலை தவிர்ந்த எட்டு ஆசிரியர் கலாசாலைகளுக்கு பயிற்சி ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, கொட்டக்கலை ஆகிய நான்கு ஆசிரிய கலாசாலைகளிலும் தமிழ், முஸ்லீம் ஆசிரியர்கள் தமிழ் மொழி மூலம் ஆசிரியர் பயிற்சியை பெற்றுக்கொள்ள முடியும். இந்த வருடம் தமிழ் மூலம் பயிற்சி பெறுவதற்கு 300 விண்ணப்பங்கள் மட்டும் கிடைத்திருப்பதாக அறியப்படுகின்றது.
நாடளாவிய ரீதியில் குறைவான எண்ணிக்கையானோர் விண்ணப்பித்திருப்பதால் தமிழ் மொழிமூல பயிற்சி ஆசிரியர் கலாசாலைகளுக்கு குறைந்த எண்ணிக்கையானோர் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்படலாம். இதனால் தமிழ் ஆசிரியர் கலாசாலை ஆளணி நிலையில் மாற்றம் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ-11)

**ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் புதிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் முதலாம் தவணையில் ஆரம்பமாகவுள்ளன.**

# பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள்

தென்மராட்சி,ஓக.29
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் மூக்குக் கண்ணாடிகள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.
பின்வரும் பயனாளிகள் தமது குடும்ப அட்டை, தேசிய அடை யாள அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவை கள் பிரிவுக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
இராமன் நாஜி-கைதடி மத்தி, மு.கணேசலிங்கம்-அல்லாரை தெற்கு, எஸ்.கனகம்மா- எழுது மட்டுவாழ் வடக்கு, ஈ.யோ கம்மா-கச்சாய் தெற்கு ஆகி யோருக்கே மூக்குக் கண் ணாடிகள் அனுப்பப் பட்டுள் ளன. (வ-9)

# நல்லூர் ஆலய வீதியில் துர்நாற்றம் வீசும் மலகூடம்



யாழ்ப்பாணம், ஓக. 29
நல்லூர் ஆலய வீதியின் தென்கிழக்குப்புறமாக அமைந்துள்ள தனியார் காணியில் கைவிடப் பட்ட மலசலகூடத்தை பொதுமக்கள் பயன்படுத்துவதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேடும் நிலவுகிறது. குறித்த மலசலகூடத்தின் குழியை மூடியுள்ள வெடித்துக் காணப்படுவதுடன் மலசலகூடமும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது. இதனையே ஆலய சுற்றாடலில் கடமையில் ஈடுபட்டுள்ள தொண்டர்கள் உட்பட சீருடையினரும் பயன்படுத்துவதால் இந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படக் காரணமாகவும் அமைகின்றது.
யாழ்ப்பாணம் மாநகர சபையினர் இதனையிட்டு உரிய கவனம் எடுக்க வேண்டும் என ஆலயத்துக்கு வரும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (வ-86)



# புலனாய்வுப் பிரிவினர் என்று கூறி வரணியில் திருட்டுகள்

தென்மராட்சி, ஓக.29
வரணிப் பகுதியில் இரு இடங்களில் தாம் புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி ஒரு குழுவினர் திருட்டுக் களை மேற்கொண்ட சம்ப வங்கள் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளன.
வரணி வடக்குப் பகுதியில் தம்மைப் புலனாய்வுத் துறையினர் எனக் கூறி வீட்டினுள் நுழைந்த திரு டர்கள்·அங்கிருந்த ஆண்களைத் தாக்கி கட்டி வைத்து விட்டு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.
இதேவேளை வரணி இடைக் குறிச்சிப்பகுதி வீடொன்றில் தம்மை புலனாய்வுத் துறையினர் எனக் கூறி வீட்டினுள் உள் நுழைய முற்பட்ட வேளையில் அவர்கள் மீது சந்தேகம் கொண்டு வீட்டார் சத்தமிடவே வாகனத்தில் ஏறித் தப்பி யோடி யுள்ளனர்.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கொடிகா மம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# முன்னாள் எம்.பி தர்மலிங்கத்தின் நினைவு தினம்

வலி.தென்மேற்கு, ஓக. 29
மானிப்பாய்த் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் நினைவு தினம் எதிர் வரும் 2 ஆம் திகதி உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.
தாவடியிலுள்ள அவரது நினைவுத் தூபிக்கு முன்பாக அமரரின் புதல்வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வட மாகாணசபை த.தே.கூட்டமைப்பு வேட்பாளருமான த.சித்தார்த்தன் தலைமையில் காலை எட்டு மணியளவில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மாகாண சபை வேட்பாளர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள். இதற்கான ஒழுங்கு களை ஏற்பாட்டுக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர். (ஓ-115)

# கல்வியியலாளர் சேவை III க்கு கொழும்பில் நேர்முகப் பரீட்சை

இலங்கை கல்வியியலாளர் சேவை தரம் III இற்கு கொழும்பு கல்வி அமைச்சில் நேர்முகப் பரீட்சை நடைபெற்று வருகின்றது.
இலங்கை கல்வியியலாளர் சேவை தரம் III பதவிக்கு கல்வி அமைச்சு விண்ணப்பம் கோரியிருந்தது. ஜூலை 25 ஆம் திகதியில் இருந்து நேர் முகப் பரீட்சை நடைபெற்று வருகின்றது.
வாரத்தில் இரண்டு தினங்கள் நேர்முகப் பரீட்சைகள் கொழும்பு கல்வி அமைச்சில் நடைபெறு கின்றது.
விண்ணப்ப அடிப்படைத் தகை மையை பூர்த்தி செய்யாத நிலையில் விண்ணப்பித்தவர் களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தனித் தனியாக அறிவிக்கப் பட்டிருப்ப தோடு அவர்கள் மேன்முறையீடு செயவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்தவர்கள், ஆசிரியர் கலாசாலைகள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் மற் றும் ஆசிரியர் கல்வி சார் நிலையில் விரிவுரையாளர் பதவிகள், போதனாசிரியர்கள் பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவதால் பலரும் விண்ணப் பித்துள்ளனர்.
இந்தமுறை ஆகக் கூடுதலான விண்ணப்பங்கள் 9 ஆயிரம் வரை கிடைத்திருப்பதாகவும் அதில் நிராகரிக்கப்பட்டவை தவிர ஏனைய விண்ணப்ப தாரர்களுக்கு நேர்முகப் பரீட் சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டு அவர்களின் தகைமை தொடர் பான சான்றிதழ்கள் பரிசீ லனை செய்யப்படுகிறது.
இந்த முதலாம் கட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படு பவர்கள் விடய முன்வைப்பு மற்றும் விரிவுரையாற்றல் தொடர்பான 2 ஆம் கட்ட நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட இருப்பதாவும் கல்வி அமைச்சு தெரிவிக்கிறது. (எ-11)

# நல்லூர் ஆலயச் சூழலில் கட்டாக்காலிகள் தொல்லை

வலி.வடக்கு, ஓக. 29
நல்லூர் ஆலயச் சுற்றாடலில் நடமாடும் நாய்கள், மாடுகளால் அடியவர்களும், ஆலயச் சூழலில் நடமாடுபவர்களும், ஆலய வீதிகளில் கும்பங்கள் வைப்பவர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.
ஆலய வீதியில் நடமாடும் நாய்களால் ஆலயச் சுற்றாட லில் நடமாடும் பொது மக்களும் மற்றும் மணலில் விளையாட்டில் ஈடுபடும் பிள்ளைகளும் நாய்கள் கடிக்கக்கூடும் என்ற அச்சத்துடன் காணப்படுகின்றனர்.
அத்துடன் நாய்கள் மலசலத்தைக் கூட வீதியில் கழிப்பதால் அங்கப்பிரதட்சணம் செய்பவர்களும் பாதிக்கப்படுகின்ற னர்.
இதே போன்று மாடுகள் வீதிகளில் நடமாடி அடியவர்களால் வைக்கப்படும் கும்பங்களைத் தட்டி விழுத்தி வாழை இலைகள் மற்றும் வாழைப்பழங்கள், நைவேத்தியங்களையும் உண்ண முற்படுவதால் கும்பங்களை வைப்பவர் களும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.
ஆலயச் சுற்றாடலில் பொலிஸார் மற் றும் யாழ். மாநகர சபை ஊழி யர்கள், சாரணர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண் டர்கள் எனப் பலர் கடமையில் உள்ள நிலையில் அவர்கள் இதனைக் கட் டுப்படுத்தாமல் இருப்பதை யிட்டு பொதுமக் கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-86)

# 'ஞானாலயம்' திறப்பு விழா

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் 90 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட "ஞானாலயம்" திறப்பு விழாவும், நூல்களின் கண்காட்சியும் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வல்வெட்டித்துறை சிவன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள், தும்பளை அஞ்சலி அகத்தைச் சேர்ந்த அருட்திரு சூ.டேமியன் அடிகளார், பருத்தித்துறை முகம்மதியா பள்ளிவாசல் மௌலவி முகமட் அஜ்மல் ஆகியோரின் ஆசியுரைகளைத் தொடர்ந்து வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், மருத்துவர் எம்.கே.முரு கானந்தன், வாழ் வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர். (வ-8-422)

# திருமலை சென்றார் நவநீதம்பிள்ளை


திருகோணமலை.ஓக.29
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்று புதன் கிழமை திருகோணமலை மாவட்டச் செயலகத்துக்கு சென்று மாவட்டச் செயலர் மேஜர் ஜெனரல் ரி.ரி.ரஞ்சித் டி சில்வாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அத்தோடு திருகோணமலை ஆளுனர் அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுனர் ரியல் அட்மிரல் மொஹன் விஜய விக்ரமவையும் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புக்களில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக அவர் கேட்டறிந்தார். (ச-40)



திருமலை மாவட்டச் செயலகத்துக்குச் சென்றபோது.......



கிழக்கு மாகாண ஆளுநருடன் உரையாடியபோது.......

# நவநீதம்பிள்ளைக்கு எதிராக திருமலையில் ஆர்ப்பாட்டம்



திருகோணமலை.ஓக.29
திருகோணமலைக்கு நேற்று புதன் கிழமை சென்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிராக திருகோணமலை மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக திருகோணமலை. மட்டக்களப்பு. அம் பாறை. பொத்துவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முப்பது வருடகாலப் போர் முடிவடைந்து தற்பொழுது நாட்டில் அமைதியும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளும் நடைபெறுகின்ற இவ்வேளையில் மனித உரிமைகளை மீறியதாக கூறிக் கொண்டு ஜக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் வேறு மனித உரிமைகள் அமைப்புக்கள் ஊடாக

> **திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொத்துவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று கோரியே மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச-40)

# இந்து எழுச்சி திருத்தல யாத்திரை ஆரம்பம்

அம்பாறை.ஓக.29
அம்பாறை . திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் இருந்து திருகோணமலை வெருகல் முருகன் ஆலயம் வரையிலான இந்து எழுச்சி திருத்தல யாத்திரை செவ்வாய்க்கிழமை சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகியது.

இந்த இந்து எழுச்சி திருத்தல பாதயாத்திரையில் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இவர்கள். அக்கரைப்பற்று. கல்முனை. மட்டக்களப்பு. வாழைச்சேனை. வாகரை ஊடாக பயணித்து வெருகல் வரை பிரதான வீதிகளில் உள்ள ஆலயங்களை தரிசித்து வெருகல் முருகன் ஆலயத்தை எதிர்வரும் 5 ஆம் திகதி சென்றடையவுள்ளனர்.

இந்து சமய. கலாசார பண்பாட்டு ஆன்மிக விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்க இந்துக்களிடையே விழிப்புணர்வை வலுப்படுத்தும் நோக்கோடு இந்த யாத்திரை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ரூ. 1.5 மில்லியன் செலவில் வடிகால் அமைக்க ஏற்பாடு

அம்பாறை.ஓக.29
அம்பாறை. ஆலையடிவேம்பு. கூழாவடிச் சந்தியிலிருந்து சாந்திபுரம் பிரதான வீதிவுரை வடிகான் அமைப்பதற்கான அடிக்கல் நீட்டு வைக்கப்பட்டது.

தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 1.5 மில்லியன் ரூபா செலவில் வடிகான் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன. ஆலையடிவேம்பு பிரதேச செயலர் வே.ஜெகதீசன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

# மட்டக்களப்பு மாநகரை அபிவிருத்தி செய்ய கொரியா உதவி

மட்டக்களப்பு.ஓக.29
கொரிய நாட்டு உதவி மற்றும் திட்டமிடலுடன் மட்டக்களப்பு மாநகரசபை பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று கொரிய அபிவிருத்தி நிலைய உதவிப் பணிப்பாளர் ஜின்சியோல் ஜோ தெரிவித்தார்.

கொரியாவில் பௌதீக திட்டமிடலினூடாகவே அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அவர் கூறினார்.

கொரியாவில் எமது அனுபவத்தை வைத்து இலங்கையிலும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தமிழர் இருப்புகளை பலப்படுத்த வேண்டும்

## மாகாணசபை உறுப்பினர் வேண்டுகோள்

மட்டக்களப்பு.ஓக.29
மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தங்களது இருப்புகளை பலப்படுத்துவதன் மூலமே எமது பிரதேசங்களைக் காப்பாற்றமுடியும்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பு. பட்டிப்பளை பிரதேசத்துக்குட்பட்ட 39ஆம் கொலனி முத்து மாரியம்மன் ஆலய கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இதனைத் தடுக்கவேண்டிய தார்மீக பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது.

இன்று நாம் வணங்கும் கடவுள்கள் மட்டுமே எமது எல்லையைப் பாதுகாத்து நிற்கின்றனர். எமது எல்லைப்பகுதி

> **எல்லைப் பகுதி காணிகளை வேறு இனத்தவர் ஆக்கிரமிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.**

பலவீனப்படுவதன் காரணமாகவே அங்கு அத்துமீறிய குடியேற்றங்கள் நிகழ்கின்றன.


எல்லைப்பகுதிக் காணிகளை வேறு இனத்தவர்கள் ஆக்கிரமிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் எமது பகுதிகளில் வாழவேண்டும். எமது பிள்ளைகளையும் வாழவைக்க வேண்டும். அங்கு கல்வி நிலையை உயர்த்த வேண்டும். அப்போதுதான் அந்தப் பகுதி பலமடையும்.

நாங்கள் மற்றவர்களின் கைகளை நம்பியிராமல் எங்களை நாங்களே முன்னேற்றுவதற்குரிய வழிவகைகள் தொடர்பில் சிந்திக்கவேண்டும்.- என்றார். (ச)



கல்முனை பிரதர்ஸ் ஹோட்டலில் பொரித்த இறைச்சியில் "அல்லாஹ்" என்ற அரபு நாமம் தெளிவாகத் தென்பட்டுள்ளது. இதனை நூற்றுக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (ச-10)

# கணவாய்க் கருவாடு உற்பத்தியில் மீனவர்



மட்டக்களப்பு.ஓக.29
மட்டக்களப்பு மாவட்டத்தில் கணவாய்க் கருவாடு உற்பத்தியில் மீனவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த மாவட்டத்தில் தற்போது கணவாய் பருவகாலம் ஆரம்பித்துள்ள நிலையில். அதிகளவான கணவாய்கள் மீனவர்களால் பிடிக்கப்படுகின்றன.

இவ்வாறு அதிகளவில் பிடிபடும் கணவாய்களை கருவாடாக மாற்றுவதில் மீனவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஒரு கிலோ கணவாய் 250 ரூபா முதல் 300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோ கணவாய்க் கருவாட்டை 1,000 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# திருட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் 5 பேர் கைது

## திருக்கோவில் பகுதியில் சம்பவம்

திருக்கோவில்.ஓக.29
திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் பகுதியில் வைத்து ஐந்து இளைஞர்கள திருக்கோவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டவர்களிடம் இருந்து ஒரு தொகுதிப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக திருக்கோவில் பகுதியில் இரவு வேளைகளில் பல்



வேறு இடங்களில் பல கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதுடன் பல லட்சக் கணக்கான பணம். தங்க நகைகள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்களும் திருடர்களால் சூறையாடப்பட்டிருந்தன.

அது சம்பந்தமான விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வரும் நிலையில் இந்த ஐந்து சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களிடம் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருக்கோவில் பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார். (ச)


# நிர்வாக சேவை அதிகாரிகளின் கலந்துரையாடல்

கொழும்பு.ஓக.29
கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள மூன்று மாவட்டங்களின் உயர் நிர்வாக சேவை உத்தியோக்த்தர்களுக்கான கலந்துரையாடல் மாகாண பிரதம செயலர் அலுவலகத்தித்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீட் ஏ. மஜிட் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாகாண. மாவட்ட. பிரதேச நிர்வாக சேவை உத்தியோகர்களுக்கிடையில் ஒரு கூட்டுணர்வையும். பலத்தையும் உருவாக்கும் நோக்கிலும். தற்போது எதிர்கொள்ளும் பிராந்திய அபிவிருத்தி. கல்வி மற்றும் பண்பாடுகள் தொடர்பில் ஏற்படும் சவால்கள் மற்றும் காணி. விவசாயம். மீன்பிடி. கிராமிய கைத்தொழில். சுகாதாரம். சிறுவர் பாதுகாப்பு. விளையாட்டு. வீதி. நீர்பாசன. நீர்வடிகான் போன்றவைகளில் ஏற்படும் பிரச்சினைகள் என்பவற்றுக்கு எவ்வாறான தீர்வுகளை முன்வைப்பது என்ற அடிப்படையிலும் இந்தச்செயலமர்வு இடம்பெற்றது. (ச)

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்குத் தீர்வு

### மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு



கொழும்பு.ஓக.29

வெலிவேரியா சம்பவத்தில் இராணுவத்தினரால் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம் தொடர்பிலான பிரச்சினைக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த ஆர்.பி. பெரேரா தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகளுக்கும், ஊடக அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் 7 ஊடக அமைப்புகள் பங்கேற்றன.

வெலிவேரியா போராட்டத்தில் ஊடகவியலாளர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதல் குறித்து இரு தரப்பினரும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடினர்.

ஊடகவியலாளர்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் குறித்து ஊடக அமைப்புகள் மனித உரிமைகள் ஆணைக்குழ பிரதிநிதிகளிடம் தெளிவுபடுத்தின.

இதையடுத்து வெலிவேரியாவில் இராணுவத்தால் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்த விரிவான அறிக்கையொன்றைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு ஊடக அமைப்புகளிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கேட்டுக் கொண்டார். (ச-சி)

# அரச அதிகாரிகளைக் கொண்டு வாக்கு மோசடி நடத்த அரசு சதி

### ஐ.தே.க. குற்றச்சாட்டு



கொழும்பு.ஓக.29

"அரச அதிகாரிகளைப் பயன்படுத்தி மாகாண சபைத் தேர்தலில் வாக்கு மோசடி செயற்பாட்டில் அரசு ஈடுபடவுள்ளது" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பொலிஸ் சேவை சுயாதீனமாக இயங்க வேண்டுமெனில் 17 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டும்.

மூன்று மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பரப்புரை நடவடிக்கைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு அரச வாகனங்கள், அரச உடைமைகளைப் பயன்படுத்துவதை அரசு இன்னமும் கைவிடவில்லை.

இந்தத் தேர்தல் முடிவடைந்தவுடன் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்தவே அரசு தற்போது எத்தனித்துள்ளது.

அதுமட்டுமல்லாது, தேர்தல் மேற்பார்வை உள்ளிட்ட தேர்தல் நடவடிக்கைளுக்கு அரச சேவையாளர்களான சமுர்த்தி அதிகாரிகள், ஆசிரியர்கள், அரச ஊழியர்களை மட்டும் அரசு பயன்படுத்தி வாக்கு மோசடிகளிலும் ஈடுபடவுள்ளது.

இதுபோன்ற செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மாகாண சபை முறைமையை "வெள்ளை யானை, நச்சுப்பற்கள், மாகாணசபைத் தேர்தல் நடைபெற்று விட்டால் அரசை விட்டு விலகி விடுவோம் என்றெல்லாம் விமல் வீரவன்ஸ மற்றும் ஜாதிக ஹெல உறு மயவின் உறுப்பினர்கள் கடந்த காலங்களில் வீர வசனங்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

ஆனால், தற்போது தங்கள் கட்சி வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றியடைய வேண்டுமென பரப்புரைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள்.

இப்படியான நகைச்சுவைகள் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுமனையில் ஆங்கிலத் திரைப்படங்களுக்கு ஒப்பீடான வகையில் அசம்பாவிதங்களும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

நிட்டம்புவ பகுதியிலியங்கும் எரிபொருள் நிரப்பு நிலயத்திற்குள் பட்டப்பகலில் நுழைந்த கொள்ளையர்கள் 22 லட்சம் ரூபாவைத் திருடிச் சென்றுள்ளர். அது மட்டுமல்லாது நொடிக்கு நொடி குற்றச்செயல்கள் நடந்து கொண்டே இருக்கின்றன.

இந்தக் குற்றச் செயல்களை நிறுத்த வேண்டுமெனில் பொலிஸ் சேவை சுயாதீனமாக இயங்குதல் அவசியமாகும். ஆனால், இங்கு பொலிஸாரிடம் அவ்வாறான சேவையை எதிர்ப்பார்க்க முடியாதுள்ளது. அப்படி இயங்க வேண்டுமெனில் 17 ஆவது திருத்தம் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும். இதை நாம் பல முறை அரசுக்குத் தெரிவித்து விட்டோம்.

ஆனால், அரசு இது தொடர்பில் எந்த வித நடவடிக்கைகளையும் எடுத்ததாக தெரியவில்லை. நாட்டில் பொலிஸ் சேவை சுயாதீனமான இயங்க வேண்டுமெனில் நடைமுறையில் இருக்கும் 18 ஆவது திருத்தத்தை உடனே நீக்கி 17 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்" -என்றரார். (ச-சி)

## பொதுநலவாய மாநாட்டின் மூலம் பொருளாதாரப் போருக்குத் தீர்வு

### இலங்கை வங்கியின் முன்னாள் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.29

பொதுநலவாய உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரப் போருக்குச் சிறந்த தீர்வு காண முடியும் என்று இலங்கை வங்கியின் முன்னாள் தலைவர் காமினி விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:


இந்த மாநாட்டையொட்டி இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள வர்த்தகப் பேரவையில் பெரும் எண்ணிக்கையிலான சர்வதேசப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் மூலம் சுமார் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடாகக் கிடைக்கும்.

> ” மாநாட்டை நடத்துவதன் மூலம் சுமார் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடாகக் கிடைக்கும்.

பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் உட்பட 53 நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வருவதன் மூலம் எமது நாட்டின் புகழ் உலகெங்கும் பரவியுள்ளது.

உலகின் பல நாடுகளுடனும் நெருக்கமான உறவுகளைத் தொடருவதற்கு இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாடு நடைபெறவேண்டியது அவசியம். இதன் மூலம் எமது நாட்டுக்கு பல அரிய வாய்ப்புக்கள் கிடைக்கும்.- என்றார். (ச)



மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு பெலாரஸ் நாட்டுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் நேற்று புதன்கிழமை அதிகாலை நாடு திரும்பினர்.அவர்களை பிரதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்தன,மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் முக்கியஸ்தர்கள் விமான நிலையம் சென்று வரவேற்றனர். (ச)

## முழந்தாளிட வைத்த நபர் மீது குற்றப்பத்திரிகை

கொழும்பு.ஓக.29

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் ஆசிரியையை முழந்தாளிடவைத்த வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத்குமாரவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் மேல் நீதிமன்றத்திலேயே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டபோது தான் நிரபராதியென்று பிரதிவாதி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை யடுத்து எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வழக்கை விசாரணை செய்வதற்குத் தீர்மானித்த நீதிவான், சாட்சிகளுக்கு கட்டளை அனுப்புமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு நடத்துவதற்கு நீதிவான் தீர்மானித்துள்ளார். (ச)

## முதியோர்களுக்கு விசேட அ.அட்டை

### 60 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்கலாம்



கொழும்பு.ஓக.29

நவீன தொழில்நுட்பத்துக்கு அமைவாக புதிய அடையாள அட்டை அறிமுகம் செய்யப்படவுள்ளது. இந்த அடையாள அட்டையில் முதியவர்களின் தனிப்பட்ட விவரங்கள், இரத்தமாதிரி, வங்கிக் கணக்கு, நோய்கள் உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் உள்ளடக்கப்பட உள்ளன என்று சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

இந்த அடையாள அட்டையைப் பயன்படுத்தி அரச மருந்த கங்களில் மருந்துக் கொள்வனவின் போதும் விசேட விலைக் கழிவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

தேசிய அடையாள அட்டை இல்லாத முதியவர்கள் இந்த அடையாள அட்டையைப் பயன்படுத்தி தேர்தலில் வாக்களிக்க முடியும். அரச நிறுவனங்களில் ஏதேனும் சேவையை பெற்றுக்கொள்ளும்போது இந்த அடையாள அட்டையை வைத்திருப்போருக்கு முன் னுரிமை அளிக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார். இந்த அடையாள அட்டைக்காக 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மஹிந்தவின் ஆட்சி முடியும் வரை பெண்களுக்குச் சுதந்திரம் இல்லை

### ரணில் குற்றச்சாட்டு



கொழும்பு.ஓக.29

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி முடியும் வரை பெண்களுக்குச் சுதந்திரம் கிடைக்கப்போவதில்லை" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

'வெற்றி பெறும் பெண்களின் ஒருங்கிணைப்பு' என்ற அமைப்பு செவ்வாய்க்கிழமை நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று பெண்களுக்கு எதிராக பல வன்முறைகள் நாளாந்தம் நடந்து வருகிறது. சிறுமிகள் முதல் பெரியவர்கள் வரை வயது வித்தியாசம் பார்க்கப்படாமல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

அண்மையில் நுவரெலியா மற்றும் தங்காலை போன்ற பிரதேசங்களில் நடைபெற்ற சம்பவங்கள் இதற்குச் சான்று பகிர்கின்றன.

இப்படியான சம்பவங்கள் நடைபெறுகின்ற போதிலும் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. காரணம் இங்கு பொலிஸ் சேவை சுயாதீனமாக இயங்குவதில்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலேயே அதிகமான பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

> ” மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலேயே அதிகமான பெண் கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் பொலிஸார் சுயாதீனமாக இயங்கக் கூடிய 17 ஆவது திருத்தத்துக்கு ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்.

இதனால் தான் நாட்டில் அட்டகாசங்கள் நாளாந் தம் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இந்த அரசின் ஆட்சி முடியும் வரைக்கும் இது போன்ற செயற்பாடுகளும் ஓயாது. பெண்களாலும் சுதந்திரமாக நடமாடமுடியாது -என்றார். (ச-10)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விலைபோகாதீர், வாக்காளர்களே!

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின்போது, வாக்குரிமை உள்ள சகலரையும், தமக்குள்ள அந்த உரிமையைப் பயன்படுத்துமாறு ஆசிரியர்கள், அதிபர்கள் தூண்ட வேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது தமிழர் ஆசிரியர் சங்கம். தமிழ் மக்களாகிய எங்களுக்கு உள்ள, ஜனநாயக உரிமைகளின் மிகமிக முதன்மையான வாக்குரிமை குறித்து, விழிப்புணர்வை உண்டாக்கும் விதத்தில், மேற்குறிப்பிட்ட (ஆசிரியர்களுக்கான) தொழிற்சங்கம் செயற்பட முனைந்தமை, குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்றாகும்.

சுமார் ஆறு தசாப்தங்களுக்கு முன்னால், எமது பிரதேசங்களினதும் மற்றும் மக்கள் நலன்களுக்காகவும், முன்னேற்றத்துக்கும் எனப் பல்வகை சார்ந்தும் உதவியவர்களில் மிகக் குறிப்பிடத்தக் கவர் களாக விளங்கியவர்கள் ஆசிரியர்கள் என்பது, கல்லில் எழுத்துப் போல் உள்ளது.

ஆனால், காலப் போக்கில் அந்த நிலை, தொய்வு கண்டு போயிற்று. மிகக் குறிப்பாக சகலவகை, அனைத்து நிலைப் பாடசாலைகளும் அரசுடைமை ஆக்கப்பட்ட பின்னர், அந்த நிலை தொய்வு கண்டு போயிற்று.

ஏனையோரைப் போன்று ஆசிரியர்களும் வாக்காளர் மட்டுமே என்ற நிலை மேலோங்கியது. ஓய்வுநிலை ஆசிரியர்கள், அதிபர்கள் மட்டும் தேர்தல்களில் வேட்பாளர்களாகப் போட்டி இடுவதோடு தறுக்கணித்துப் போயிற்று; அந்த மந்த நிலையே இப்போதும் தொடர்கிறது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு எமது பிரதேசங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் முந்திய நிலைக்குத் திரும்ப வேண்டிய தவிர்க்க முடியாத தேவை எழுந்துள்ளது. அதனை உணர்ந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர்கள் சங்கம் குரல் கொடுத்திருக்கிறது.

அதிபர் சேவை, ஆசிரியர் சேவை அனைத்துத் தரத்திலும் உள்ளவர்களுக்கு அரசியல் உரிமை உண்டு. அதிபர்கள், ஆசிரியர்கள் அதனைச் சரியாகப் புரிந்து கொண்டு தமது பங்களிப்பினை முழுமையாகப் பயன்படுத்திச் செயற்பட வேண்டும் என்றும்–

அத்தோடு, மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் வாக்களிக்கத் தகுதியுள்ள மக்களுக்கும் தேர்தல் விதிமுறைகளையும், வாக்களிக்கும் முறைகளையும் தெளிவுபடுத்த வேண்டும்– என்றும் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

மொத்தத்தில் , வடமாகாண சபைத் தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் தமக்குரிய வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு அதிபர்களும் ஆசிரியர்களும் வழிகாட்டிகளாகி உடந்தையாகச் செயற்பட வேண்டும் என்றும் அந்தச் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

இன்னும் சுமார் மூன்று வாரங்களில் நடைபெற உள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தல், சரியாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர் தலைப் போன்றே, அனைத்துலக மட்டத்தில் அவதானிப்புக்கு உரியதாக அமைகிறது.

முதன் முறையாக வடக்கில் மாகாண மட்டத்தில் அதிகாரங்களைக் கொண்ட சபையாக அது அமைய உள்ளதால், அடுத்த மாதத் தேர்தல் ஒரு வகையில் முக்கியத்துவமும் முதன்மைத்துவமும் பெறுகின்றது எனலாம்

போருக்குப் பின்னரான நான்கு வருடங்களின் பின்னரும், தமிழ் மக்களுக்கு உரிய, அவர்களுக்குச் சேர வேண்டிய தேவைகள் முற்றாகக் கிடைக்காத நிலையில் மாகாணசபைத் தேர்தல் நடைபெற உள்ளது.

இங்கு வாழும் மக்களின் தேவைகளையும், சேர வேண்டிய அபிவிருத்திகளையும் பெற்றெடுக்கக் கூடிய வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு –

வாக்காளர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பது முதன்மையானது.

வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதி உள்ள அனைவரும் தமது உரிமையைத் தப்பாது பயன்படுத்த வேண்டும். அதேவேளை, சலுகைகளுக்கும், அற்ப நலன்களுக்கும் பேரவாக் கொண்டு வேண்டாத தரப்புகளுடன் சகவாசம் வைக்காதிப்பதற்கும் வாக்காளர்கள் மனம் கொள்ள வேண்டும்.


தங்கள் ஒவ்வொருவரினதும் வாக்குகளின் பெறுமதியை வாக்காளர்கள் உணர்ந்து கொள்வது மிகவும் அவசியமானது; இன்றி அமையாதது. வெறும் சலுகைகளுக்காகவும், அற்ப சொற்ப சௌகரியங்களை நாடியும் பெறுமதியான வாக்குகளை எவருக்கும் " விற்பதற்கு" மனதாலும் நினைக்கக்கூடாது.

தங்கள் காரியம் நிறைவேறும் வரை அண்ணன், தம்பி, அம்மா, அக்கா என்று "சொந்தம்" கொண்டாடி உங்கள் பொன்னான வாக்குகளை அபகரிக்கப் பலரும் உங்களை, நாடித் தேடி வருவார்கள். அவர்களின் உள்நோக்கங்களையும், திட்டங்களையும் தெரிந்துகொள்ளாமல் உங்களை அறியாது விலை போகாதீர்கள்.

இப்போதிருந்தே அது குறித்து மிக்க அவதானமாக இருங்கள். உங்கள் பொன்னான வாக்குகளை, ஆசை வார்த்தைகளுக்கும், அற்ப சொற்பங்களுக்கும் ஏமாந்து "அழித்து" விடாதீர்கள். அதனை நாடி இன்னும் இருபத்திரண்டு நாள்களுக்கு மனங்களைத் திடமாக்கிக் கொள்ளுங்கள்.

# கண்ணீரில் மிதக்கும் தமிழக மீனவர்கள்!

● தயாளன்




இலங்கையில் தமிழர்கள் மீது சிங்கள இனவெறி அரசின் தாக்குதல் 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் உச்சநிலையை எட்டியது. இந்தியக் கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்களின் மீதான துப்பாக்கிச் சூடும், சிங்களச் சிப்பாய்களால் அப்போது முதல் தொடர்ந்து கொண்டே வருகிறது. தமிழகத்தில் உள்ள நாகை, புதுவை, முகவை, தூத்துக்குடி, குமரி ஆகிய மாவட்டங்களின் கடற்கரைப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் போதெல்லாம், சிங்களக் கடற்படையினரால் தொடர்ந்து சொல்லொணாத் துயருக்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில், சிங்களக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக மீனவர்களின் எண்ணிக்கை சுமார் நானூறைத் தாண்டும்; படுகாயமுற்றவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டும், சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட அப்பாவி மீனவர்கள் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் என்பது பதைபதைக்கும் செய்தி! கானாமல் போனவர்கள் எண்ணிக்கை இக்கணக்கில் வராது. மனதைக் கலங்கடிக்கும் இவ்விவரங்கள், இந்தியத் தமிழர்களை எண்ணி உலகத் தமிழர்களையே உலுக்கி எடுக்கின்றன. வேதனைத் தீயில் விழவைக்கின்றன.

அண்மையில், இராமேஸ்வரத்திலிருந்து விசைப்படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள், சிங்களக் கடற்படையால் நடுக்கடலில்; நள்ளிரவில் சுற்றி வளைக்கப்பட்டுள்ளனர். யுத்தக் கைதிகளைப் போல் மன்னார் பகுதிக்கு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். அங்கு, ஆடைகளைக் களைந்தும், அம்மணமாக்கியும், அடித்து உதைத்தும், கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதுபோலவே மற்றுமொரு அண்மைய நிகழ்ச்சி பாம்பன் மீனவர்கள் 35 பேர் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்; அப்பொழுது சிங்களக் காடையரால் கைது செய்யப்பட்டு, சிறை வைக்கப்பட்டுள்ளனர். இது போன்ற அடாவடிச் செயல்கள் ஏராளம். இவை, தாய்த் தமிழர்களின் நெஞ்சங்களைப் பதறவைக்கின்றன.

கணவனைக் கடலுக்கு மீன் பிடிக்க அனுப்பிவிட்டு தூக்கமற்ற மீனவக் குடும்பங்கள் ஏக்கத்தோடு இரவுகளைக் கழிக்கின்றன. ஆருயிர்த் தலைவன், அகாலமாய் மரணம் அடையும்போது, அம்மீனவக் குடும்பம் எழுப்பும் அழுகை ஓலமும், விசும்பல் ஒலியும் கடல் அலைகளோடு சேர்ந்து கரைந்து போகின்றன. அவர்களின் சடலங்கள் மட்டுமே கரை ஒதுங்குகின்றன. வாழ்க்கைக் கனவுகள் கண்ணீர்க் கடலில் கரை சேரமுடியாமல் மிதக்கின்றன.

தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக இலங்கையில் போராடத் தொடங்கியதிலிருந்து இந்தியத் தமிழக மீனவர்கள், கடலுக்குச் செல்லும் போதெல்லாம் காயப்படுத்தப்படுகின்றனர். கடல் தொழிலில் இருந்து பிரித்து அந்நியப் படுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை சிங்களக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் மீன் பிடித் தொழிலும் மிக மோசமாக நாசமாக்கப்பட்டு உள்ளது. ஆண்டுதோறும் ஆறு லட்சம் மெட்ரிக் தொன் மீன்களைப் பிடித்து வழங்கும் இவர்களின், கடல்தொழில், கேள்விக்குறியாகி உள்ளது.

உலக அளவில், நாடுகளுக்கான கடல் எல்லைகள் வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவை, கரையிலிருந்து 22 கி.மீ. தொலைவு வரை உள்நாட்டுக் கடல் எல்லையாகும்; 44 கி.மீ. தொலைவு வரை சுங்கவரி வசூலிக்கும் எல்லையாகும்; 320 கி.மீ. தொலைவு வரை பொருளாதார வலையத்திற்கான எல்லையாகும்; இவை பொதுவாகப் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. ஆனால், மீனவர்களின் நலனையும், வாழ்வையும் கருதி வகுக்கப்பட்ட இவ்விதிமுறைகள் மிகக் குறுகிய கடல் எல்லைகளைக் கொண்ட நாடுகளுக்குப் பொருந்தாது. இந்து மா கடலில் இந்தியாவின் காலடியில் கிடக்கும் இலங்கைத் தீவின் சிங்கள அரசு இச்சர்வதேச விதிமுறைகளைத் தன் காலில் போட்டு மிதித்து வருகிறது.

அதன் மூலம் இந்திய-தமிழக-மீனவர்களை அழித்து வருகிறது; கொன்று குவித்து வருகிறது. இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தியும், இலங்கையின் அதிபர் சிறிமாவோபண்டாரநாயகாவும்இணைந்து 1974 ஆம் ஆண்டு செய்து கொண்ட அன்றைய ஒப்பந்தத்தின்படி, இந்தியாவின் 285 ஏக்கர் பரப்பளவு கொண்ட கச்சத் தீவின் உரிமையை இலங்கையும் இந்தியாவும் பகிர்ந்து கொண்டன. அந்த ஒப்பந்தத்தில் 1976 ஆம் ஆண்டு சில விதிகள் மேலும் சேர்க்கப்பட்டன. இவற்றின்படி இந்திய கச்சத் தீவின், மீது இலங்கையைத் தவிர இந்தியாவிற்கு உரிமை எதுவும் இல்லை என்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உண்டாக்க இலங்கை அரசு முயன்று வருகிறது. அதற்கு, இந்திய நடுவன் அரசும், இரையாகிக் கொண்டி ருக்கின்றது என்பதே வரலாற்று ஆய்வாளர்களின்கருத்தாகும்.

கச்சதீவு இந்தியாவுக்கே உரியது. அத்தீவில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமையுண்டு; கச்சதீவில் மீனவர்கள் மீன் வலைகளை உலர்த்திக் கொள்வதற்கான உரிமையும் உண்டு. கச்சதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் யாருடைய அனுமதியின்றி வழிபடச் செல்லும் உரிமையும் உண்டு. இப்போது இவ்வுரிமைகளும், இவை போன்றவையும் இலங்கைச் சிங்கள அரசால் மறுக்கப்படுகின்றன.

சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்தியாவின் மீது ஒருவேளை தாக்குதல் தொடுத்திட்டால் அவர்களுக்கு, ராணுவத் தளம் அமைக்க, இலங்கை அரசு அனுமதி கொடுத்து விட்டால், அதனால், இந்தியாவுக்கு பேராபத்து ஏற்பட்டு விட்டால், என்கின்ற, ஊகமான கேள்விகளுக்கு விடையாக அல்ல, வினையாக அப்போதைய நடுவண் அரசு எடுத்த முடிவுதான் கச்சத்தீவு ஒப்பந்தம் அதன் தீய விளைவுதான் இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்லாமல், இந்தியத் தமிழக மீனவர்களும் சிங்களப் படையினரால் இன்று அழித்தொழிக்கப்பட்டு வரும் அவலநிலை.

இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான இந்திய நடுவன் அரசு, இலங்கைக்கு நவீன போர்க்கப்பலைக் கொடுத்து உதவுகிறது. கண்ணி வெடிப் பாதிப்புக்கு உள்ளாகாத ஊர்திகளையும் தாராளமாய்த் தருகிறது; குண்டு துளைக்காத பாதுகாப்புக் கவசங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள் உட்பட இருநூற்றி ஐம்பது கோடி ரூபாய் மதிப்புக்குமேல் ஆயுதங்களை அள்ளித் தந்துள்ளது. இவை தவிர்த்து, நூறு கோடி ரூபாய் நிதி உதவியும் இலங்கை அரசு, நம்மிடமிருந்து பெற்றுள்ளது. போதாக் குறைக்கு, இலங்கை இராணுவத் தின ருக்கு இந்திய இராணுவம் போர்ப்பயிற்சி வேறு புகட்டியுள்ளது.

இந்திய அரசின் இராணுவ உதவியையும் நிதி உதவியையும் பெற்றுக் கொண்டு இலங்கைச் சிங்கள அரசு என்ன செய்கிறது? இலங்கைக் குடிகளான தமிழர்களையும், தமிழக மீனவர்களையும் இராணுவத்தின் மூலம் துப்பாக்கி முனையில் நசுக்கி வருகிறது என்பதே உண்மை. கொன்று நரவேட்டையாடி வருகிறது என்பது கண்கூடு.

இக்கொடூரத் தாக்குதலுக்கு முடிவு கட்ட வேண்டும் என தமிழகத்தில் உள்ள பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தமிழர் தேசிய இயக்கம், உட்பட எல்லா எதிர்க்கட்சிகளும், ஓங்கிக் குரல் எழுப்பி வருகின்றன. நடுவண் அரசோ கேளாக் காதுடன் மீளாத்தூக்கத்தில் ஆழ்ந்து, மெத்தனமாகக் கிடக்கிறது.

இந்தியாவின் அரசியலை தீர்மானிக்கும் வல்லமை படைத்த தமிழக முதல்வர் மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதையும் தாண்டி, கடிது ஓச்சி மெல்ல எறிக' என்னும் வள்ளுவர் வாசகத்தை இப்போதேனும் கையில் எடுக்க வேண்டும்; தனது தமிழின உணர்வைத் தங்குதடையின்றி வெளிப்படுத்த வேண்டும்.

அந்த வகையில் தமிழக அரசு தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்திட நடுவண் அரசையும் அதன் மூலம் இலங்கைச் சிங்கள அரசையும் வலியுறுத்திட வேண்டும்.

இந்தியாவிற்குரிய மீன் பிடிக்கும் உரிமையை நிலைநாட்டிட கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும்.

இலங்கைச் சிறையில் சட்ட விரோதமாக அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் யாவரையும் உடனடியாக விடுதலை செய்திட நடுவன் அரசு மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துமீறி இந்திய கடற்பகுதிக்குள் நுழையும் சிங்கள மீன்பிடி படகுகளையும், இலங்கைக் கடற்படையினரையும் தடுத்து நிறுத்த இந்தியக் கப்பல் ரோந்துப் படையினரை நடுவண் அரசு ஆயுதங்களுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

கடல் எல்லைகளைத் தெளிவுறுத் காட்டுவதற்கு ஏதுவாக, ஒளிரும் மிதவை களை இரவு பகல் மிதக்கவிட வேண்டும்.

இலங்கையின் சிங்களக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மீனவர்களின் குடும்பங்களை இந்திய நடுவன் அரசு தத்தெடுத்துக் கொள்ள வேண்டும். தமிழக அரசு காயமுற்ற மீனவர்களுக்கு உதவித் தொகையும் மருத்துவ வசதியும் வழங்கிட வேண்டும்.

சார்க்' நாடுகளின் கூட்டமைப்பில் உறுப்பினர்களாயுள்ள இந்தியாவும், இலங்கையும் இப்பகுதியில் பதட்டம் நீங்கி அமைதி நிலவுவதற்கான ஏற்பாடுகளைத் தாமதமின்றித் தொடங்க வேண்டும். அணிசேரா நாடுகளில் ஒன்றான, இலங்கை, அலைகடல் வழியே, அருந் தமிழர்களை நித்தம் காவு கொள்ளும் நீசத்தனம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதுவரை, இந்தியத் தமிழர்கள் உலகத் தமிழர்களோடு சேர்ந்து ஓங் கிக் குரல் எழுப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.

# தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்கும் மழைநீர் தாங்கிகள்

## கிளி - தட்டுவன் கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயத்தின் முன்மாதிரி

கந்தப்பு பரமேஸ்வரன்
ஆசிரியர்

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்தின் ஓர் எல்லைக்கிராமமாகவும், யாழ் கண்டி வீதி ஏ-9 இல் இருந்து வடக்காக 3 கிலோமீற்றர் தூரத்தில் தட்டுவன் கொட்டி என்ற பனம் பெரும் கிராமம் அமைந்துள்ளது. இந்தப் பிரதேசம் வரலாற்று ரீதியான தொன்மைகளையும் சிறப்புக் களையும் தன்னகத்தே கொண்டது.

அத்தோடு ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் வன்னி இராச்சியத்துக்குட்பட்ட பிரதேசமாக இந்தக் கிராமம் காணப்பட்டது. இதனை அண்டிய பிரதேசத்தை காக்கையன் எனும் மன்னன் ஆட்சி செய்தான் எனவும் ஆனையிறவு கடல் நீரேரியை வடக்கு எல்லையாகவும், பழைய வட்டக்கச்சியை தெற்கு எல்லையாகவும் கொண்டு யாழ் கண்டி வீதி ஆரம்பத்தில் அமைந்திருந்ததாகவும், வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் கொம்படிப் பாதையும் இந்தக் கிராமத்தினூடாகச் சென்றிருந்தமையால் வரலாற்று முக்கியத்துவமுடையதாக தட்டுவன் கொட்டிக் கிராமம் விளங்கியது.


இந்தக் கிராமம் தெற்கே கண்டி வீதி ஏ9 மற்றும் ஆனையிறவு உப்பளத்தையும், வடக்கே கட்டைக்காடு , வெற்றிலைக்கேணியை உள்ளடக்கிய கடனீரேரியையும் , மேற்கே குறிஞ்சாத் தீவையும் கொண்டதாக காணப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தின் புவியியல் சார் தரைத்தோற்றத்தை நோக்கும் போது கிராமத்தைச் சூழ்ந்து உவர்நீர் கடநீரேரியாகவும் , உயர் வெப்பநிலையும் மற்றும் முட் புதர் காடுகளைக் கொண்ட தரை அமைப்பையும் கொண்டிருப்பதால் தரைக்கீழ் நீர் ஊற்றுக்கள் உவர்ப்புத் தன்மை கொண்டதாக காணப்படுகின்றன.

இதனால் இந்தப் பிரதேசத்தின் குடி தண்ணீர்ப்பிரச்சினை நீண்ட காலம் தொட்டு இருந்து வருகிறது. ஆரம்பத்தில் உமையாள்புரம் , முரசுமோட்டை கிராமங்களுக்கு மக் கள் கால்நடையாகச் சென்று குடி தண்ணீரை எடுத்து வந்தனர். பின்னர் பவுசர் மூலம் நீர் விநியோகம் வழங் கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத் தினால் (ஜீ.ரீ.சட்) இயக்கச்சியிலிருந்து தரைக்கீழ் குழாய் மூலம் நீர் பெறப் பட்டு இந்தக் கிராமத்தின் மத்தியில் தண்ணீர்த் தாங்கி அமைக்கப்பட்டு அதனுள் நீரைச் சேமித்து மக்களுக்கு காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் நீர் விநியோகம் வழங்கப்பட் டது. பின்னர் 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலை காரணமாக நீர்தாங்கி சேத மடைந்து நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

2010 ஆம் ஆண்டு மீள்குடியமர்வுக்குப் பின்னர் இங்கு வாழ்ந்த 350 குடும்பங்களில் 95 குடும்பங்கள் மட்டுமே மீளக்குடியமர்ந்தனர். இவர்களுக்கான குடிநீரை கரைச்சிப் பிரதேச சபை பவுசர் மூலம் விநியோகித்து வருகின்றது. தற்போது இந்தக் கிராமத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வரும் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த எஸ்.டி.சி என்ற வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனம் முதற்கட்டமாக கிளி/கண்ணகை அம்மன் வித்தியாலயத்தில் 5.8 மில்லியன் ரூபா செலவில் 250, 000 லீற்றர் கொள்ளளவுடைய இரண்டு நீர்த் தாங்கிகளை அமைத்து அந்த நீர்த் தாங்கிகளினுள் கட்டடத்தின் கூரைகளிலிருந்து வரும்மழைநீரை சேமித்து அதன்மூலம் பாடசாலை ஆசிரியர் மாணவர்களின் வருடம் முழுவதுக்குமான நீர்த் தேவையைப் பூர்த்தி செய்துள்ளது. இந்தத் திட்டம், இலங்கையில் பெரியளவில் நீர்த்தாங்கிகளில் மழைநீர் சேகரிக்கப்பட்டு குடிநீர் பயன்படுத்தப்படுவது என்ற பெருமையையும் கொண்டுள்ளது. இந்த மழைநீரைச் சேமித்து பயன்படுத்துவது தொடர்பான விளக்கங்கள் ஆசிரியர் மாணவர்களுக்கு எஸ்.டி.சி. நிறுவனத்தினால் விளக்கமளிக்கப்பட்டு உரிய வழிகாட்டல் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் கிடைத்த மழைவீழ்ச்சியிலிருந்து முதன் முறையாக இந்த நீர்த் தாங்கிகளில் நீர் சேமிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நீர் மாதிரியை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை பரிசோதனைக்குட்படுத்தி பாது காப்பான சுத்தமான குடிதண்ணீர் என பரிந்துரை செய்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். நீண்ட காலமாக குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர் நோக்கிய பாடசாலை சமூகத்துக்கு இந்தத் திட்டம் ஓர் வரப்பிரசாதமாகும். தற்போது எமது பிரதேசங்களில் தரைக்கீழ் நீர் மாசடைந்து வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அத்தோடு அதிகளவில் மக்கள் மாசடைந்த நீரையே குடிதண்ணீராகவும் பயன்படுத்துகின்றனர்.

எனவே இவற்றைத் தவிர்க்கும் வகையில் இந்தத் திட்டம் மாசுக்கள் அற்ற பாதுகாப்பான குடிதண்ணீர் பெறுவதற்கு வழிவகுப்பதால் நீர்ப்பிரச்சினையை எதிர்நோக்கும் ஏனைய இடங்களுக்கும் இதனை விஸ்தரிப்புச் செய்து மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் அக்கறையுடன் செயற்பட்டால் அதனால் குடி தண்ணீர்ப் பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிவதுடன் ஆரோக்கியமான வாழ்வுக்கும் அது வழி சமைக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தத் திட்டம் மாசுக்கள் அற்ற பாது காப்பான குடிதண்ணீர் பெறுவதற்கு வழி வகுப்பதால் நீர்ப்பிரச்சினையை எதிர் நோக்கும் ஏனைய இடங்களுக்கும் இதனை விரிவாக்கி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள அரசும், அரச சார்பற்ற நிறு வனங்களும் அக்கறையுடன் செயற் பட்டால் குடிதண்ணீர் பிரச்சினையை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிவதுடன் ஆரோக்கியமான வாழ்வுக்கும் அது வழி சமைக்கும்



# கவலைகளைத் தூக்கி எறியுங்கள்

கவிதாயினி

ஒன்றை இழந்துதான் மற்றொன்றைப் பெற வேண்டும். தம்முடைய இளம்பருவத்தை வறுமையில் கழித்தவர்கள் வசதிக்காக ஏங்குகிறார்கள்.

எந்தப் பணம் அவர்களைத் துன்பத்திலும், சோதனையிலும் தவிக்க விட்டு வேடிக்கை பார்த்ததோ, அந்தப் பணத்தைத் திகட்டுமளவு சம்பாதிக்கும் ஆசை அவர்களுக்கு வந்து விடுகிறது.

தாங்கள் தூக்கத்தை இழந்து, ஓய்வை இழந்து, பல இனிய அனுபவங்களை இழந்து பணத்தைக் குவிக்கிறார்கள்.

எண்ணம் சக்தி வாய்ந்தது. ஆயுத்தை விட மதிப்பு மிக்கது. எண்ணத்தில் இருந்தே செயலுக்கான தூண்டுதலை நாம் பெறுகிறோம். நல்ல எண்ணங்கள், நல்ல விளைவுகளையும். தீய எண்ணங்கள் தீய விளைவுகளையும் தத்தம் செயலின் வழியே கொண்டிருக்கும். எண்ணமே வாழ்க்கையை வடிவமைக்கிறது. பணத்தின் மீது விருப்பம் இருக்கலாம், ஆசை இருக்கலாம். ஆனால் அதுவே வெறியாகி விடக் கூடாது.

நீங்கள் எதை வேண்டுமானாலும் அடுத்தவர் தலையில் கட்டிவிட முடியும். ஆனால் உங்கள் கவலையை அவர்கள் மீது சுமத்த முடியாது.

மனிதர்கள் இரண்டு வகைப்படுவர். முதல் வகையினர் எதற்குமே கவலைப் படாதவர்கள், மற்றைய வகையினர் எடுத்ததற்கெல்லாம் கவலைப் படுகிறவர்கள். நியாயமான கவலைகள் இருப்பது மனித இயல்பு. நேற்று வரை தொலைந்து போன பணத்துக்காகக் கவலைப்படுவதும், அடுத்துத் தொலைத்ததை விட பணக்கார உறவினர் முலமாக அதிகபணம் ஈட்டிவிட முடியுமா என எதிர்பார்ப்பதும் எப்படி நியாயமான கவலையாகும்?

வாங்கிய கடனை எப்படிக் கொடுப்பது? கொடுத்த கடன் திரும்ப வருமா? மோட்டார் சைக்கிளில் சென்ற கணவன் பத்திரமாக வீடு திரும்புவானா? இப்படி கணக்கில்லாத கவலைகளும் சிலரை எட்டிப் பார்க்கும்.

கவலைகள் காளான்களாய் முளைக்கும். விட்டு வைத்தால் மலையாக மாறி நம்மை மலைக்கச் செய்யும்.

அனாவசியக் கவலைகளுக்கு இடமளிக்க வேண்டாம். அவை உங்கள் கனவுகளின் வண்ணங்களை இழக்கச் செய்யும். கவலை உங்களுடைய ஊக்கத்தை நலிவடையச் செய்து விடும். ஊக்கத்தை இழந்தால் நீங்கள் வெற்றி யில் இருந்து வெகுதூரம் விலகி நிற் கும்படியாகி விடும்.

இதைப் புரிந்து கொள்கிறவரை வாழ்க்கையில் உண்மையான எதிர்பார்ப்பு மற்றும் திருப்தி எது என்பதை எம்மால் உணர முடிவதில்லை.

எமது மகிழ்ச்சி என்பது பொருட்களில் இல்லை. அவற்றை பெறுவதில் இருக்கிறது. அதனால் தான் நாம் கடை கடையாக ஏறி, நமக்கு பிடித்தமானதை வாங்குகிறோம். மகிழ்ச்சி எங்கெல்லாம் இருக்கிறது? ஒலிக்கின்ற அருவியில், உலவுகின்ற காற்றில், அழகுப் பூக்களில், கவலை சிறிதுமில்லாத குழந்தையின் முகத்தில் என்றிப்படி எண்ணற்ற இடங்களில் மகிழ்ச்சி பரவிக் கிடக்கிறது.

சவால் என்பது சாதாரணமானதல்ல. ஒரு சவாலை நீங்கள் எதிர்கொள்கிற போது அது உள்ளடக்கிய அநேக பிரச்சினைகளையும் சேர்த்தே எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. சவால்கள் வளர்ச்சிக்கு அவசியம். அவற்றை வெல்லும்போது நீங்கள் வளர்ச்சி அடைகிறீர்கள் என்று அர்த்தம்..

நம்முடைய ஆற்றலை உறுதியான முறையில் பயன்படுத்துகிறபோது, நமது வாழ்விலும் அற்புதங்கள் நிகழும்.


நீங்கள் எப்படிச் சிந்திக்கிறீர்கள், எப்படி உணர்கிறீர்கள், நம்புகிறீர்கள் என்பதை பொறுத்தே உங்களுடைய வெற்றி நிர்ணயிக்கபடுகிறது. உங்களுடைய வழக்கமான சிந்திக்கும் முறைதான் வெற்றி அல்லது தோல்விக்கான விதையை உங்கள் மனதில் ஊன்றுகிறது.

வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுவதற்கு, உங்களுக்குள் ஏராளமான திறன்கள் காத்திருக்கின்றன என்றாலும் அதைக் கண்டுகொள்ள வேண்டும், அதைக் கருத்தாய் வளர்க்க வேண்டும். நம்முடைய திறமையைக் கொண்டு பல உன்னதங்களை நாம் நிகழ்த்த முடியும் என்று நம்புங்கள்.


எதுவுமே இல்லாதிருப்பதை விட ஏதாவது ஒன்றை பெற்றிருபது மேலானது என்பார்கள். நம்பிக்கை என்பது விரும்பிய விதத்தில் எண்ணமிடுவது அல்ல, ஒன்றைத் திடமாக நம்புவது.

ஓர் எண்ணத்தை, ஒரு திட்டத்தை, ஒரு செயலால் உங்களால் உருவாக்க முடியும். பின்னணியில் வலுவான நம்பிக்கை இருந்தால் எதுவும் சாத்தியம் ஒரு விதையளவு நம்பிக்கை இருந்தால் போதும். சிறிய விதைதான் ஆனால் அது விதைக்கபடும் போது அது செல்வத்தையும், ஆரோக் கியத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டு வந்து விடுகிறது.

எண்ணம் சக்தி வாய்ந்தது. ஆயு தத்தை விட மதிப்பு மிக்கது. எண் ணத்தில் இருந்தே செயலுக்கான தூண்டுதலை நாம் பெறுகிறோம். நல்ல எண்ணங்கள், நல்ல விளைவுகளையும், தீய எண்ணங் கள் தீய விளைவுகளையும் தத்தம் செயலின் வழியே கொண்டிருக்கும். எண்ணமே வாழ்க்கையை வடிவமைக்கிறது.



# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே



பெரிய வெடிப்புக் கொள்கையினால் உருவாகியதாகக் கருதப்படும் அண்டத்தினுள், புவியெனும் வைரத்தினுள், நுண்ணங்கி முதல் நாகரிக மனிதன் வளர்ச்சி வரை பொறுத்திருந்த அரசியல் இன்று அகிலமெங்கும் வியாபித்துப் பேசு பொருளாக விளங்குவது தெரிந்ததே.

அரசியல் என்பது பொதுவான கருத்துப்படி சேவை செய்தல் என்பதுள் அடங்கும். இந்தச்சேவைகளை ஆதரித்தல், எதிர்த்தல் என ஜனநாயகம் பேசுகின்றது.

அரசியல் வரையறையை உற்று அவதானிக்கும்போது அது பெண்களுக்கு அதிகம் பொருத்தப்பாடு அற்றதாகவே காணப்படுகிறது. இதனால் மக்கள் வாக்குகள் மூலம் பெண்களைத் தெரிவு செய்யும்போது எழுகின்ற வினாக்கள் ஏராளம், தாராளம். பிரச்சினைகளைக் கண்டு அதனை எதிர்க்கும் வல்லமை பெண்களுக்கு இருக்கிறது.

ஆனால் எம்மவர் பழமொழியான பெண்புத்தி பின்புத்தி என்பதை சொல்லி அவர்களை அடக்கிவிடுகிறார்கள். எனவே பெண்களின் அரசியல் பிரவேச வழி ஒன்று மூடப்பட்டுவிட்டது. இதை விடவும் பெண்மையின் அம்சங்களான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை அரசியலுக்குத் தடை போடுவதாகவே பெரும்பாலும் இருக்கக் காண்கிறோம்.

திருமணம் செய்யாத பெண் அரசியல் செய்யும்போது அவரது எதிர்கால வாழ்க்கைத் துணை அதனை விரும்புவதை காணுவது மிகவும் அரிதான விடயம். திருமணமான பெண்ணும் அரசியல் செய்வது பெரிதாக ஏற்கப்படுவதில்லை. வீட்டு வேலை, அரசியல் வேலை என அனைத்தையும் ஒருவர் செய்யும் போது ஏற்படும் மன உளைச்சல்கள் பெண்களைத் தாக்குகின்றது. அந்தப் பெண் சமூக சேவையில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பங்கள் குறைவாகவே அமைந்து விடுவதால் ஆண்களே அதிகமாக அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். விதவைப் பெண்களை எடுத்துக் கொண்டால் அவர்களின் அரசியல் பிரவேசம் அநேகமாக ஓர் ஆணால்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

அதாவது அவரது கணவன் அரசியலில் செல்வாக்கு செலுத்தியிருத்தல் மூலம் அரசியல் நுழைவு அவர்களுக்கு கிடைக்கிறது. எனவே அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஆண் களே என்று ஆணித்தரமாகக் கூற முடியும்.

ஓ.நிதூசன், யா/ இந்துக் கல்லூரி.

**பெண்மையின் அம்சங்களான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை அரசியலுக்குத் தடை போடுவதாகவே பெரும்பாலும் இருக்கக் காண்கிறோம்.**




## மௌன முட்கள்

உன் நினைவுகள்
உடைந்த கண்ணாடியாய்
மாறி - உள்ளத்தைக்
கீறிச் செல்கிறது
தெரியாமல் நீ
வீசிச் செல்லும்
பார்வைகள்
ஏக்கத்தோடு மலர்ந்து
உனக்காக காத்திருக்க
நீயோ மௌன
முட்களால்
குத்தி வதைப்பதேன்?

உனக்கும் எனக்கும்
இடையில் ஒன்றுமேயில்லை
ஆனால்
வெறுமைக்குள் நிரம்பி வழியும்
வெறுமைபோல் ஒன்றுமேயில்லை
என்பதிலேயே நமக்குள்
ஒன்றிருக்கின்றது என்பதை
என்று உணர்வாய்
என் இனியவனே..

தர்சி, சுண்டுக்குழி



## ஆய கலைகள் 64 எவை என்று தெரியுமா?

ஆய கலைகள் 64 பற்றி கேள்விப்பட்டு இருக்கிறோம் . அவ்வாறு கேள்விப்பட்ட 64 கலைகள் எவை என்று தற்போது தெரிந்து கொள்வோம்.

1. எழுத்திலக்கணம் (அக்கரவிலக்கணம்)
2. எழுத்தாற்றல் (லிகிதம்)
3. கணிதம்
4. மறைநூல் (வேதம்)
5. தொன்மம் (புராணம்)
6. இலக்கணம் (வியாகரணம்)
7. நயனூல் (நீதி சாத்திரம்)
8. கணியம் (சோதிட சாத்திரம்)
9. அறநூல் (தரும சாத்திரம்)
10. ஓகநூல் (யோக சாத்திரம்)
11. மந்திர நூல் (மந்திர சாத்திரம்)
12. நிமித்திக நூல் (சகுன சாத்திரம்)
13. கம்மிய நூல் (சிற்ப சாத்திரம்)
14. மருத்துவ நூல் ( வைத்திய சாத்திரம்)
15. உறுப்பமைவு நூல் (உருவ சாத்திரம்)
16. மறவனப்பு (இதிகாசம்)
17. வனப்பு
18. அணிநூல் (அலங்காரம்)
19. மதுரமொழிவு (மதுரபாடணம்)
20. நாடகம்
21. நடனம்
22. ஒலிநுட்ப அறிவு (சத்தப் பிரமம்)
23. யாழ் (வீணை)
24. குழல்
25. மதங்கம் (மிருதங்கம்)
26. தாளம்
27. விற்பயிற்சி (அத்திரவித்தை)
28. பொன் நோட்டம் (கனக பரீட்சை)
29. தேர்ப்பயிற்சி (ரத பரீட்சை)
30. யானையேற்றம் (கரி பரீட்சை)
31. குதிரையேற்றம் (அசுவ பரீட்சை)
32. மணிநோட்டம் (ரத்தின பரீட்சை)
33. நிலத்து நூல்/மண்ணியல் (பூமி பரீட்சை)
34. போர்ப்பயிற்சி (சங்கிராமவிலக்கணம்)
35. மல்லம் (மல்ல யுத்தம்)
36. கவர்ச்சி (ஆகருடணம்)
37. ஓட்டுகை (உச்சாடணம்)
38. நட்புப் பிரிப்பு (வித்துவேடணம்)
39. காமநூல் (மதன சாத்திரம்)
40. மயக்குநூல் (மோகனம்)
41. வசியம் (வசீகரணம்)
42. இதளியம் (ரசவாதம்)
43. இன்னிசைப் பயிற்சி (காந்தருவ வாதம்)
44. பிறவுயிர் மொழியறிகை (பைபீல வாதம்)
45. மகிழுறுத்தம் (கவுத்துக வாதம்)
46. நாடிப்பயிற்சி (தாது வாதம்)
47. கலுழம் (காருடம்)
48. இழப்பறிகை (நட்டம்)
49. மறைத்ததையறிதல் (முஷ்டி)
50. வான்புகவு (ஆகாயப் பிரவேசம்)
51. வான்செலவு (ஆகாய கமனம்)
52. கூடுவிட்டுக் கூடுபாய்தல் (பரகாயப் பிரவேசம்)
53. தன்னுருக் கரத்தல் (அதிருசியம்)
54. மாயச்செய்கை (இந்திரசாலம்)
55. பெருமாயச்செய்கை (மகேந்திரசாலம்)
56. அழற்கட்டு (அக்கினித் தம்பனம்)
57. நீர்க்கட்டு (சலத்தம்பனம்)
58. வளிக்கட்டு (வாயுத்தம்பனம்)
59. கண்கட்டு (திருட்டித்தம்பனம்)
60. நாவுக்கட்டு (வாக்குத்தம்பனம்)
61. விந்துக்கட்டு (சுக்கிலத்தம்பனம்)
62. புதையற்கட்டு (கனனத்தம்பனம்)
63. வாட்கட்டு (கட்கத்தம்பனம்)
64. சூனியம் (அவத்தைப் பிரயோகம்)


## சிவப்புச் சாலை

மௌனமாய் இருக்கும் சாலைகளில்
மக்கள் பலர் மண்டியிடுகின்றார்கள்
மாந்தர்கள் நடமாடும் வீதிகளில்
மரணங்கள் தலைவிரித்து ஆடுகின்றன

மானிடம் தான் போர் புரிகிறது என்றால்
வீதி என்னும் போர்க் களத்தில்
வாகனங்களும் போர் புரிகின்றன

கறுப்பாய் இருக்கும் வீதிகள்
நித்தம் சிவப்பு வண்ணம் பூசுகின்றன
இத்தனையும் நடந்துமா இன்னும்
மக்கள் புரிந்துகொள்ளவில்லை

த.டிலானி, மீசாலை




## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................................

முகவரி :-..............................................................

..............................................................

.........................    .........................
திகதி    கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பளை நகருக்குச் செல்வதிலும் கிளாலி மக்களுக்கு சிரமங்கள்

அக்கராயன், ஓக. 29

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிளாலிக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பளை நகருக்குச் செல்வதில் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் முன்பு கிளாலி, அல்லிப்பளை ஆகிய கிராமங்கள் ஊடாக பளை நகருக்குச் சென்று வந்தனர். இதற்கென ஐந்து கிலோ மீற்றர் நீளமான வீதி பயன்படுத்தப்பட்டது.

மீள்குடியமர்வின் பின்னர் மிதிவெடிகள் அகற்றப்படாமை இராணுவ நிலைகள் அமைந்துள்ளமை ஆகிய காரணங்களால் வேறொரு சுற்றுப் பாதையூடாக 12 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து பளை நகரத்தைத் சென்றடைய வேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும் பளைப் பிரதேச செயலகம், மருத்துவமனை ஆகியவற்றுக்குச் செல்லும் போதும் இங்கு வசிக்கும் 236 குடும்பங்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

ஆகவே முன்னர் போன்று கிளாலி, அல்லிப்பளை ஆகிய இடங்களுக்கு ஊடாக பளை நகரத்துக்கு சென்று வருவதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## 5 பௌசர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகம்

பூநகரி, ஓக. 29

பூநகரிப் பிரதேச சபை ஐந்து தண்ணீர் பவுசர்கள் மூலமாக குடிதண்ணீரை வழங்கி வருவதாக அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் 10 பிரிவுகளுக்கு குடிதண்ணீர் வழங்கல் இடம்பெற்று வருகின்றது.

பூநகரிப் பிரதேச சபை இதற்கென ஐந்து தண்ணீர் பௌசர்களைப் பயன்படுத்தி வருகின்றது.

இங்கு நிலவும் கடும் வறட்சி காரணமாக பெருமளவு நிலம் உவராக மாறியுள்ளது. நன்னீர்க் கிணறுகளும் உவராக மாறியமையால் குடிதண்ணீர் நெருக்கடி என்றுமில்லாதவாறு இங்கு காணப்படுகின்றது.

பூநகரி உவராகும் நிலையைக் கட்டுப்படுத்துவதும், நன்னீர் நிலைகளை உருவாக்குவதும் நன்னீரைப் பெறுவதற்கான வழிகளாகுமென இங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)



**இங்கு நிலவும் கடும் வறட்சி காரணமாக பெருமளவு நிலம் உவராக மாறியுள்ளது. நன் னீர்க் கிணறுகளும் உவராக மாறியமையால் குடிதண்ணீர் நெருக்கடி என்று மில்லாதவாறு இங்கு காணப்படுகின்றது.**

## மேம்பாலத்தை அமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை

அக்கராயன், ஓக. 29

கிளிநொச்சியிலுள்ள உருத்திரபுரம் சோலை கிராமத்துக்கும் கோணாவில் கிராமத்துக்கும் இடையிலுள்ள ஆற்றுக்குக் குறுக்கே மேம் பாலம் ஒன்றை அமைக்குமாறு இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மழை காலத்தில் இந்த இரு கிராமங்களையும் பிரிக்கும் வகையில் ஆற்று வெள்ளம் பாய்ந்து செல்வதன் காரணமாக மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இதேவேளை மீள்குடியமர்வு இடம்பெற்று மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் கோணாவில் தாமரைக்குளம் பாலம், யூனியங்குளம் பாலம் என்பன புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

எதிர்வரும் மழை காலத்துக்கு முன்னர் இந்தப் பாலங்கள் புனரமைக்கப்படாது விட்டால் மக்கள் பெரும் போக்குவரத்து இடர்களை எதிர்கொள்வரென்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

## போக்குவரத்துக்கு உதவாத ஒட்டறுத்தகுளம் பிரதான வீதி

துணுக்காய், ஓக. 29

மாந்தைக் கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒட்டறுத்தகுளம்-கொல்ல விளாங்குளம் பிரதான வீதியில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.



இந்தப் பிரதான வீதி சுமார் 3.5 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டது. கடந்த வருடம் இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றபோதிலும், தற்போது இதில் பயணிக்க முடியாதவாறு குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றது.

பருவமழை ஆரம்பித்தபின்னர் தாம் எவ்வாறு இந்த வீதியால் செல்வதென்ற கேள்வியை மக்கள் இப்போதே கேட்க ஆரம்பித்துள்ளனர்.

இதைவிட இந்தக் கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்தப்படாமையால் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் குப்பி விளக்கு வெளிச்சத்தில் தமதுகல்வியைத்தொடர்கின்றனர்.

மேலும் மின்சாரம் இல்லாததால் கொல்லவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு ஆகிய கிராமங்கள் இரவு வேளையில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன. எனவே இங்குள்ள பிரதான வீதியை மீண்டும் புனரமைத்து வழங்குமாறும் மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறும் இங்கு வசிக்கும் மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (க-415)

# இனியும் வேதனம் தாமதமானால் பணிப் புறக்கணிப்பு

### வவுனியா பஸ் டிப்போ ஊழியர் தெரிவிப்பு

நெளுக்குளம், ஓக. 29

தமது ஜூலை மாத வேதனம் வழங்கப்படாது தொடர்ந்தும் இழுத்தடிக்கப்பட்டு வருமாயின் தாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வேண்டிவருமென வவுனியா அரச பஸ் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த டிப்போவில் 57 சாரதிகள், 71 காப்பாளர்கள், 8 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 41 பொறியியல் துறையைச் சேர்ந்த அலுவலர்கள், 35 ஏனைய உத்தியோகத்தர்களெனப் பலர் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கே கடந்த ஜூலை மாதத்துக்கான வேதனம் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் தாம் பல்வேறு பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்கொள்வதாகஅவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் விரைவில் தமது வேதனத்தை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை டிப்போ நிர்வாகம் மேற்கொள்வதன் மூலமாக ஊழியர்களுக்கும் நிர்வாகத்துக்குமிடையில் நல்லுறவு தொடருமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமக்கான வேதனத்தை வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்படுமாயின் தாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக இருக்குமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பஸ் டிப்போ முகாமையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது ஜூலை மாத வேதனம் வழங்கப்படாததை ஒப்புக்கொண்டார்.

மேலும் இது தொடர்பான செய்திகள் பத்திரிகையில் வெளிவருவதால் எந்தவிதப் பயனும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார். (க-402)

## பஸ் சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டும்



அக்கராயன், ஓக.29

பூநகரிக்கும் கிளிநொச்சி நகருக்கும் இடையிலான அரச பஸ் சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டும் எனப் பூநகரியில் மீள்குடியமர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தினமும் பூநகரி வாடியடியிலிருந்து கிளிநொச்சி செல்வதாயின் மக்கள் நீண்ட நேரமாகக் காத்திருக்க வேண்டிய அவலம் தற்போது காணப்படுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவைகள் இடம்பெறுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேசம் தனியானதொரு பிரதேச செயலர் பிரிவைக் கொண்டுள்ள போதிலும், போக்குவரத்து நெருக்கடிகள் மிகுந்தகிராமங்களைக்கொண்டதாகக் காணப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறுவதில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## துணுக்காயில் கால்நடைகளை பதம் பார்க்கும் நாய்கள்

துணுக்காய், ஓக. 29

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கால்நடைகள் கட்டாக்காலி நாய்களால் கடியுண்டு இறக்கும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதால் கால்நடை வளர்ப்பாளர்கள்பாதிக்கப்பட நேர்ந்துள்ளது.

போரின் பின்னரான மீள்குடியமர்வின் பின்னர் உதவி அமைப்புக்கள், கால்நடை வளர்ப்புச் சங்கங்கள் என்பன உயர்ந்த இன ஆடு, மாடுகளை வழங்கி வருகின்றன. இந்த நிலையில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்கள் ஆடு, மாடுகளைக் கடித்துக் காயப்படுத்தி வருகின்றன.

இதனால் நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகும் கால்நடைகள் இறந்தும் வருகின்றன.

இதனால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இங்கு கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென அவர்கள் வேண்டுகோள் விடுத்துவருகின்றனர். (க-18)



## கால்நடைகள் கடத்தலைத் தடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 29

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கால்நடைகளைக் கடத்தும் சம்பவங்களைக் கட்டுப்படுத்துமாறு இந்தப் பகுதி மக்கள், கோரிக்கை விடுத்துள்ளனர்.

பன்னங்கண்டி மற்றும் மூன்றாம் வாய்க்கால் ஆகிய பகுதிகளில் பண்ணையாளர்களால் பராமரிக்கப்பட்டு வரும் கால்நடைகள் இரவோடு இரவாகக் கடத்திச் செல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இரவு வேளையில் வீட்டு முற்றத்தில் கட்டி வைக்கப்பட்ட கால்நடைகள் மறுநாள் காலையில் காணப்படாத நிலையே நீடித்து வருகின்றது. கால்நடைகளின் உரிமையாளர் மறுநாள் இவற்றைத் தேடிச் செல்லும்போது அவை இறைச்சிக்காக வெட்டப்பட்டு கழிவுப் பொருள்கள் வீசப்பட்ட நிலையில் இருப்பதையே காண முடிகின்றது.

இத்தகைய பல சம்பவங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை பன்னங்கண்டிப் பகுதியில் மூன்று மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்ட நிலையில் தகவலொன்றின் அடிப்படையில் குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் இறைச்சிக்காக வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட இறந்த மாடுகளைப் பார்வையிட்டதுடன் முறைப்பாடுகளையும் பதிவு செய்தனர்.

மேலும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

எனவே இவற்றை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-6)



மீள்குடியமர்வின் பின்னர் 2010 ஆம் ஆண்டு புனரமைப்பு வேலைகள் இடம்பெற்ற போதிலும் 2011, 2012 ஆம் ஆண்டுகளில் கடுமையான வெள்ளத்தால் சேதமடைந்த அக்கராயன் குளத்தின் வான்பகுதி தற்போது மீண்டும் அதே ஒப்பந்தகாரரால் புனரமைக்கப்பட்டு புதுத் தோற்றத்துடன் காணப்படுகின்றது. (க-18)

## ‘சிவில் மன்றம் ஒன்றைக் கட்டி எழுப்புவோம்’ கலந்துரையாடல் கிளிநொச்சியில்

அக்கராயன், ஓக. 29

சிவில் மன்றம் ஒன்றைக் கட்டி எழுப்புவோம் என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக இணைப்பாளர் சி.ஜீவநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன், தேசிய அமைப்பாளர் மனாஸ் மசீன் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.



தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது, தேர்தல் விதிமுறைகள், தேர்தலில் மக்களின் பங்களிப்பு, தேர்தலின்போது மக்கள் பயன்படுத்த வேண்டிய ஆவணங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது. மேலும் எதிர்காலத்தில் அமைக்கப்படவிருக்கும் சிவில் மன்றக் கட்டமைப்புக்கள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்**: மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டும் என நினைப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.

**இடபம்**: மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். சில விடங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மிதுனம்**: மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்து செல்லும். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், அடையலாம். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**கடகம்**: உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**கன்னி**: எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**நாளை**

ஆவணி-14 வெள்ளிக்கிழமை 30.08.2013
திதி: நவமி மு.ப.08.29 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ.08.53 வரை
சுபநேரம்: 06.05 - 07.35 வரை
இராகுகாலம்: 10.35 - 12.05 வரை

**துலாம்**: ஒரு வித படபடப்பு வந்து செல்லும். சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். கடந்த காலத்தை நினைத்து அவ்வப்போது கொஞ் சம் பதற்றமாவீர்கள். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**விருச்சிகம்**: பழைய கடன் தீரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**தனுசு**: அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**மகரம்**: இங்கிதமாகப் பேசிக் கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.

**கும்பம்**: எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**மீனம்**: புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 8 | | 6 | 4 | | 9 | 5 |
| 3 | 4 | | | 8 | 5 | | | |
| | 6 | | 1 | | | | | 8 |
| | | | | | | 5 | | 4 |
| | | | 5 | | 2 | | | |
| 8 | | 1 | | | | 2 | 6 | |
| 2 | | | | | 8 | | 4 | |
| | | | 7 | 2 | | | 5 | 6 |
| 5 | 8 | | 4 | 3 | | 9 | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 3 | 9 | 8 | 4 | 5 | 2 | 6 |
| 4 | 2 | 9 | 6 | 5 | 7 | 3 | 8 | 1 |
| 6 | 8 | 5 | 2 | 3 | 1 | 7 | 9 | 4 |
| 3 | 9 | 4 | 8 | 7 | 2 | 1 | 6 | 5 |
| 5 | 7 | 8 | 1 | 6 | 9 | 2 | 4 | 3 |
| 1 | 6 | 2 | 3 | 4 | 5 | 9 | 7 | 8 |
| 2 | 4 | 7 | 5 | 1 | 8 | 6 | 3 | 9 |
| 9 | 3 | 1 | 4 | 2 | 6 | 8 | 5 | 7 |
| 8 | 5 | 6 | 7 | 9 | 3 | 4 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# மரண அறிவித்தல்

## கந்தையா கார்த்திகேசு (BA)-JP

(ஓய்வு பெற்ற முன்னாள் பிரதி அதிபர் இந்து தேசிய கல்லூரி - புஸ்ஸல்லாவ, உரிமையாளர் - கந்தையா அன்சன்ஸ், நியூ கவிதா ஸ்ரோர்ஸ் - புஸ்ஸல்லாவ)



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு மற்றும் புஸ்ஸல்லாவையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கார்த்திகேசு (BA)- JP 27.08.2013 செவ்வாய்க்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை-பர்வதம் (கந்தையா அன்சன்ஸ் - புஸ்ஸல்லாவ) தம்பதியரின் மகனும், உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான துரைசிங்கம்-யோகம்மா தம்பதியரின் அருமை மருமகனும், மனோகரியின் அன்புக் கணவரும், கார்த்திகா (கனடா), கவிதா (கனடா), காயத்திரி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கண்மணி மற்றும் கதிர்காமசாமி (கனி போடெக்ஸ் - கொழும்பு-11 ), கனகமணி (கண்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மார்க்கண்டு (ஓய்வு பெற்ற கிராமசேவகர்) மற்றும் தவநாதன் (கருணாநிதி ஸ்ரோர்ஸ் - கண்டி), திலகவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரவீஸ்வரன் (கனடா), ரதீசன் (கனடா), கார்த்திக் (இந்தியா) மற்றும் மகேஸ்வரன் (ஜேர்மனி), சபேஸ்வரன் (கனடா), சுதேஸ்வரன் (கனடா), காண்டீபன் (கனடா), பார்த்தீபன், மஹிந்தினி (கனடா), சுகந்தினி (லண்டன்), ரவீந்தினி (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும், தர்ஷன் (லண்டன்), தர்ஷிகா (லண்டன்), தீத்திகா ஆகியோரின் பெரிய தந்தையும், மக்கீரன் (கனடா), ரஷ்மியா (கனடா), கார்த்திக் (கனடா), மிதுனன் (கனடா), இயளினி (கனடா), கார்த்தியா (இந்தியா), கார்த்திக்ராம் (இந்தியா) ஆகியோரின் தாத்தாவுமாவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (30.08.2013) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணி முதல் மாலை 5 மணி வரை பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக பொரல்ல ஜயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுப் பின்னர் இறுதி அஞ்சலிக்காக 381, நுவரெலிய வீதி, புஸ்ஸல்லாவ அன்னாரது இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு 01.09.2013 ஞாயிற்றுக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் புஸ்ஸல்லாவ பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

381, நுவரெலியா வீதி,
புஸ்ஸல்லாவ.
077 454 5228

(39243)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.
கே.கே.சாமி-077 730 8982
தவநாதன்- 077 209 4400



# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கின்றேன்.
லூ. 23:43.

## அமரர் யேசுதாசன் டேமியன்

அன்னை மடியில்
26.10.1975

ஆண்டவன் அடியில்
29.08.2006





வாழும் உரிமை பறிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் ஆனதாவோ!
நடப்பவைகளெல்லாம் கண்ணுற்று தடமாறுகிறோம்
ஏதோவொரு ஆறுதல் நல்லதொன்று நடந்திடுமென்று
அது நீங்கள் மீண்டுவருவதாக இருந்திட்டால் என்னவோ?

டேமி! உங்கள் உடலாலும், செயலாலும்
பண்பு நிறைந்த நல்வார்த்தைகளாலும்
நீர் காட்டிச் சென்ற மனிதநேயப் பணிகள்,
தட்டிக் கொடுத்தவை, விட்டுக் கொடுத்தவை
அழகிய குரலால் அடுத்தாரை மகிழ்வித்தமை
வித்தைகள் பல பயின்று காட்டியவை
அவை நினைவுகளாக நிலைத்திட்டாலும்
நீங்களில்லாத வெற்றிடத்தை
தோற்றுவித்துள்ளது என்பதே உண்மை.

இன்பமண வாழ்வில் அன்பு மனைவியுடன்
சொற்ப நாள்கள் வாழவா அவன் எழுதிவைத்தான்
அன்பு மனைவியின் தூய கருவினில் கண்ணுற்ற மகள்
பிறந்திட்டபொழுது உம்மைக்காணாது...
பெற்றவளால் முடியுமா மீண்டெழ?
கடுகதியில் வந்த காலனுக்கு என்ன தெரியப்போகுது
புன்சிரிப்பும், காந்தக் கண்களும், பண்புகளும்
ஏழாண்டுகளென்ன ஏழேழு ஜென்மங்களும் மறக்க முடியாதவை.

ஒரு தாய் வயிற்றில் பிறந்தோம் காலமெல்லாம்
ஒன்றாகவே வாழ்வோம் என்றிருந்தோம்
காலன் உனைப்பிரித்தபோது துவண்டுபோனோம்
ஆண்டு தோறும் பத்திரிகையில் நினைவு துயர் பகிர்கிறோம்
ஆனால் மீதி நாள்களில் உங்கள் மனத்தின்
தூய கவ்வி வார்த்தைகள் கோடிக்கணக்கில் சேர்த்து
வைத்துள்ளோம் எதில் பிரசுரிப்பதென்று

மறக்க முடியுமா? இறைவனே என்ன வலியிது?
இப்படியொரு இழப்பினைக் காண்பதற்கா நாம் பிறந்தோம்?
இயேசுகிறிஸ்து ஆண்டவர் இவ்வுலகின்மீது கொண்ட அன்பினால்
பாடுகள்பட்டு பாய்ந்தோடிய இரத்தத்தினால் உலகை மீட்டார்
உமக்கு ஏற்பட்ட இழப்பும் எதைத் தரப்போகிறது?

இல. 186, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
இல. 9/1, மருதடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

உமது ஆன்மா இறைவனின் நித்தியத்தில் இருப்பதாக.

அம்மா, அப்பா, சகோதரர்கள்,
சகோதரிகள், மனைவி, அன்பு மகள் ஆன்டேனுஜா,
மாமா, மாமி

# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க நவிக்கு எந்த உரிமையும் இல்லை

## அமைச்சர் விமலின் கட்சி கொதிப்பு

கொழும்பு,ஓக.29

"அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங் கப்பட்டுள்ள அதிகாரங் கள் குறித்து கேள்வி எழுப்பவும் - அழுத்தம் கொடுக்கவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் நவநீதம்பிள்ளைக்கு எந்த விதத்திலும் உரிமை இல்லை" என்று அரசின் பங் காளிக்கட்சியான தேசிய சுதந் திர முன்னணி தெரிவித்துள்ளது.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீ முடன் இடம்பெற்ற சந்திப் பில் பொலிஸ் திணைக்களத்தைத் தனியாகக் கையாள்வதற் கென புதிதாக உருவாக்கப் பட்டுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு ஜனாதிபதி வசம் இருப்பது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் நவநீதம் பிள்ளை ஆட்சேபனை வெளியிட்டிருந் தார்.

இதுதொடர்பில் கொழும்பில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் தேசிய சுதந்திர முன்ன ணியின் ஊடகப் பேச்சாளர் எம்.முஸம்மில் தெரிவித் தவை வருமாறு:

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சட் டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு, அரசமைப்பில் ஜனாதிபதிக் குரிய அதிகாரங்களுக்கு அமை யவே உருவாக்கப்பட்டுள் ளது. நாடு தொடர்பில் அரச மைப்புக்கு அமைய

**நாட்டுக்கு ஆபத்தை ஏற்ப டுத்தும் அறிக்கை யொன்றை அவர் தயாரித்து விட் டார் என்பது அவரின் நடவ டிக்கைகளினூடாக நன்கு தெரிகிறது.**

தீர்மானங்கள் மேற் கொள்வதற்கான உரிமை எமக்கு இருக்கிறது.

எனவே, இது விடயத்தில் கேள்வி எழுப்பவும் - அழுத் தம் கொடுக்கவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா ளர் நவநீதம் பிள்ளைக்கு எவ்வி தத்தி லும் உரிமையில்லை.

நாட்டுக்கு ஆபத்தை ஏற்ப டுத்தும் அறிக்கையொன்றை அவர் தயாரித்து விட்டார் என்பது அவரின் நடவடிக்கை களினூடாக நன்கு தெரிகிறது.

தற்போதைய இலங்கைப் பயணத்தில் நாடு முழுவதும் சென்று அவர் ஆராய்ந் தாலும் தாம் ஏற்கனவே தயாரித்து வைத்துள்ள அறிக்கையில் அவர் எந்த மாற்றங்களையும் செய்ய மாட்டார்.-என்றார். (ச-சி)

# ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துங்கள்

## பத்திரிகையாளர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு,ஓக.29

ஊடக சுதந்திரத்தை உறுதிப் படுத்த வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் தாம் வலியுறுத்தி யதாக இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலை வர் லசந்த ருஹுணுகே தெரி வித்தார்.

மனித உரிமைகள் ஆணைக் குழுப் பிரதிநிதிகளுக்கும் ஊடக அமைப்பு களுக்கும் இடையே செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடக சுதந்திரத்துக்கு அச்சு றுத்தல் விடுக்கும் வகையில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நாம் தெளி வுபடுத்தினோம். குறிப்பாக வெலிவேரியா ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகவியலாளர்கள் மீது இராணுவத்தினர் மேற் கொண்ட தாக்குதல் தொடர்பில் தெளிவு படுத்தினோம்.

வெலிவேரியாவில் இராணு வத்தினர் மேற்கொண்ட தாக் குதலால் ஊடக வியலாளர்க ளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளதுடன், ஊடக சுதந்திரத் துக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட் டுள்ளது.- என்றார். (ச)

ST.JOHN'S COLLEGE, JAFFNA
SRI LANKA

All the staff and students of Grade 6 and upwards are requested to assemble at school today (29th August 2013) at 7.30 a.m.in order to pay tribute to our chaplain and Teacher

Rev.V.P.Thanendra

who passed away on 27th August 2013

All the students are expected to come in school uniform

PRINCIPAL (C/11652)(12.3.6)

# அரசின் ஊது குழல் பஷீர்; அமைச்சர் ஹக்கீம் தாக்கு



கொழும்பு,ஓக.29

"முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் அரசின் ஊது குழலாகச் செயற்படுகின்றார்" என்று அக் கட் சியின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார்.

அவர் அரசின் ஊதுகுழல் என் பதை கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலின் போது நன்கு தெரிந்து கொள்ள முடிந்தது. இதற்கு நன்றிக்கடனாகவே அவருக்கு அமைச் சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

கட்சியின் அங்கீகாரமில்லா மல் அமைச்சர் பதவி யொன்றை பெற்றுள்ளார். அவரது கருத்துகள் இன்று கட்சிக்கு ஒத்துபோகாதவை யாக உள்ளன. அவரால் கூட்டப்படும் எந்தவொரு கூட் டமும் முஸ்லிம் காங் கிர ஸினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று அமைச் சர் ஹக்கீம் குமுறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அமைச்சுப் பதவி மூலம் அரசு அவருக்கு பதவி யுயர்வு வழங்கியுள்ளது.

இந்தப் பதவியுயர்வு குறித்து கட்சிக்கும் தெரியாது. தலை வருக்கும் தெரியாது. திடீ ரென்று வழங்கப்பட்ட பதவி யுயர்வானது எனக்குச் சமாந்தரமான அமைச்சுப் பதவியாகும்.

அவர்தான் எமது கட்சியின் புத்த ளம் மாவட்டத் தேர்தல் பொறுப்பாளர். ஆனால், அவர் இங்கு இல்லை. அவர் இங்கு வரமாட்டார். அப்படி அவர் வர வேண்டி யிருந்தால் அமைச்சர் பத வியை இராஜினாமாச் செய்ய வேண்டும்.

அப்படி பொறுப்பான பதவி யைத்தான் அவருக்கு ஜனாதிபதி வழங்கியுள்ளார். ஊக்குவிப்புத்திறன் அமைச்சு என்றால் என்ன வென்று அகராதியை எடுத்துத்தான் பார்க்க வேண்டும். அந்த ளவுக்கு பொறுப் பான பத வியை அரசு அவருக்கு கொடுத்துள்ளது.

தற்போது அவர் முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த முடிவு பிழை என்று மேடை போட்டு பேசுவதுடன் பத்தி ரிகை அறிக்கையும் விடு கின்றார். விவஸ்தையில் லாமல் அறிக்கை விடுவதில் எந்தவித அர்த்தமு மில்லை. இந்தக் கட்சியின் போராளிகளை நேரடி யாகச் சந்திப்பதற்கு அவ ருக்குத் திராணியிருக்க வேண்டும்.

அவ ருக்கு முடியுமாக இருந் தால் அந்த விடயத்தை நேரடியாக வந்து மக்கள் முன் பேச வேண்டும்.- என் றார். (ச-சி)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
27★11★1934



மறைவு
30★07★2013

அமரர்-கனகசபை தர்மதேவன்

[ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்,வ/சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கச் செயலாளர்]

எமது குடும்பத் தலைவர் அமரர் கனகசபை தர்மதேவன் அவர்கள் 30.07.2013 காலமான செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத் தியவர்களுக்கும், வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் இருந்து தொலை பேசி மூலமும், இணைய மூலமும் துயர் பகிர்ந்து கொண்டவர்க ளுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்னைகள் 13.08.2013 அன்று காலை கீரிமலையிலும், வீட்டுக்கிரியைகள் 14.08.2013 அன்று இல. 25, 4 ஆம் ஒழுங்கை, குருமன்காடு, வவுனியாவில் உள்ள அன்னா ரது இல்லத்திலும் நடைபெற்றன.

குருமன்காடு,
வவுனியா.

திருமதி நா.தர்மதேவன்,
த.யசோதரன் குடும்பம்,
த.வினோதரன் குடும்பம்,
ஜெ.விஷ்வகுமாரன்,தேவகி.
T.P- 024 222 1953

# பாதகமான நுண்ணங்கிகள் நாட்டினுள் பரவும் அபாயம்

> **பாதகமான நுண்ணங்கி களினால் விவசாயத் துறையும் பெருந்தோட் டத்துறையும் படிப் படியாக அழிவடையும் .**

கொழும்பு,ஓக.29

இரசாயனப் பசளைக்கு மாற்றீடாக பயன்படுத் தப்படும் உயிரியல் பசளையினூடாக நாட்டிற் குள் பாதகமான நுண்ணங்கிகள் பரவும் அபா யம் தலை தூக்கியுள்ளது என்று தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சு எச்சரித்துள்ளது. இதுகுறித்து அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:

•பாதகமான நுண்ணங்கிகளினால் விவசாயத் துறையும் பெருந்தோட்டத்துறையும் படிப்படி யாக அழிவடையும். அதனால் தரமற்ற உயிரி யல் பசளைகளைப் பயன்படுத்துவது தடுக்கப்பட வேண்டும்.

விவசாயிகள் உயிரியல் பசளை பயன்படுத்து வதில் கூடுதல் ஈடுபாடு காட்டி வருகின்றனர். போதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் இலங்கையில் உயிரியல் பசளைகள் உற்பத்தி செய்யப்படுவதோடு சில தனியார் துறையினர் அவற்றை இறக்குமதி செய்தும் வருகின்றனர். உயிரியல் பசளை பயன்படுத்தப்படுவதனூ டாகப் பரவும் நுண்ணங்கிகள் எமது மண் ணுக்கு உகந்தவையே என்பது உறுதிப் படுத்தப்படாத நிலையிலே அவை உப யோகிக்கப்படுகின்றன. இரசாயனப் பசளையால் ஏற்படும் பாதிப்பை விட பாதகமான நுண்ணங் கிகளினால் ஏற்படும் பாதிப்பு அதிகமானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியை
திருமதி தங்கரத்தினம் இராசரத்தினம்
அவர்கள் 24 வருடங்கள் எமது பாடசாலையில் சேவைபுரிந்துள்ளார். அவரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை ஆசிரிய கழகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம் கொக்குவில்.

பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19.09.1931

மறைவு
21.08.2003



அமரர்
பொன்னையா பாலசிங்கம்
(Retired Supeintendent of Audit)

அன்பாய்ப் பேசி பண்பாய் வாழ்ந்து - எமை
அவனியிலே வாழ்வாங்கு வாழவைத்த தெய்வமே!
பத்தாமாண்டு திதிதனிலே - உமைப்
பாசத்துடன் நினைந்து வணங்குகிறோம் அப்பா!

166/3,
சேர்.பொன்.இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(39161)(12)(3.6)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஓக. 29
நல்லூர் கந்தன் ஆலய பதினெட்டாம் திருவிழாவான இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.
நிகழ்வில் 'குக சைவசித்தாந்தம்' என்ற பொருளில் மு. கௌரிகாந்தனின் சிறப்புச் சொற்பொழிவும், ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை, அராலி கோமாதா அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் திருக்குமரன் அறநெறிப் பாடசாலை, மட்டுவில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.
இசை அரங்கில் பாடலை திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா வழங்க, அணிசேர் கலைஞர்களாக வயலின்- ஏ.ஜெயராமன்,



மிருதங்கம்- எஸ். மகேந்திரன், முகர்சிங்- கே.நந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

★ ★ ★

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நல்லை ஆதீனத்தில் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு செல்வி கார்த்திகேயக் குருக்கள் நிகேதளாவின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெறும் மகாபாரத தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று மாலை 6.30 மணிக்கு ஆரம்பாகும்.
பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா 'பாஞ்சாலி சபதம்' பற்றி இசைப் பேருரை நிகழ்த்துவார்.

★ ★ ★

நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று இரவு 7.15 மணிக்கு சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் 'சடங்குகளும் சம்பிரதாயங்களும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார்.

★ ★ ★

நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டு கழகத்தினர் நடத்தி வரும் தெய்வீக பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு "இறைபணி நிற்றல்" என்னும் தலைப்பில் சிவத்திரு எஸ்.கே. என். தவராசாவின் சொற்பொழிவு இடம்பெறும். (ந-86-7-14)

## மனிதனிலுள்ள 'தான்' என்பதன் முக்கியத்துவம்

'தான்' என்பதனாலேயே மனிதனது உடம்பு, சிந்தை, அறிவு ஆகியன தொழிற்படுகின்றன. 'தான்' என்ற ஒன்றினா லேயே இப்பரந்த பிரபஞ்சமும் இயக்கப்படுகிறது. எவ்வாறாயினும் மனிதனின் உடம்பு, சிந்தை, அறிவு ஆகியனவற்றால் நடத்தப்படுகின்ற தொழிற்பாடு 'தான்' என்பதை எவ்விதத்திலும் தாக்குவதில்லை.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை




வலி. வடக்கு, ஓக.29
இளவாலை மணலடைப்பு அண்ண மகேஸ்வரா ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரெண்டு தினங்கள் நடைபெறவுள்ளன.
தினமும் பிற்பகல் இடம் பெறும் விசேட அபிஷேகம் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து மாலையில் சுவாமி வெளி வீதியுலா வரும் நிகழ்வு இடம் பெறும். திருவிழாக் காலங்களில் தினமும் ஆன்மிகச் சொற்பொழிவுகளும் இடம் பெறவுள்ளன. (வ-86)

★ ★ ★

துன்னாலை சதா சகாய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாத் திருப்பலியும், நற்கருணை ஆராதனை வழிபாடும் இடம் பெற்று மறுநாள் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும்.
திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (ந-8)

## ஆவணப்படம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.29
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்களின் உருவாக்கத்தில் "யாழ்ப்பாணக் கோட்டை சமர்களின் தளம்" ஆவணப்படம் வெளியீட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பயிற்சி மைய மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல் கலைக் கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக கலைப் பீடப் பீடாதிபதி விபிசிவநாதனும் கலந்து கொள்ள வுள்ளனர். (ஜ-10)

## பன்முகப்படுத்திய நிதியில் சரவணபவன் எம்.பி யால் தென்மராட்சிக்கு நிதி

தென்மராட்சி, ஓக.29
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த வருட பன்முகப்படுத்தப் பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் தென்மராட்சி பிரதேசத்தில் 15 வேலைத் திட்டங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி கிராமத்தில் பாலமுருகன் சனசமூக நிலையத்துக்கு தளபாடக் கொள்வனவுக்காக 50 ஆயிரம் ரூபாவையும், கச்சாய் வடக்கு விறுமர் சனசமூக நிலைய கட்டடத் திருத்த வேலைக்கு 50 ஆயிரம் ரூபாவையும், கைதடி கள்ளிநகர் துர்க்கா சனசமூக நிலையம், கைதடி குமரநகர் உதயசூரியன் சனசமூக நிலையம், மந்துவில் மேற்கு விநாயகர் சனசமூக நிலையம் ஆகியவற்றின் புனரமைப்பு பணிகளுக்கு தலா 90 ஆயிரம் ரூபா வீதமும், கைதடி மேற்கு பாரதி சனசமூக நிலையத்துக்கு தண்ணீர் தாங்கி நிர்மாணிக்க 95 ஆயிரம் ரூபாவும் கைதடி நவபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு மலகூடம் அமைக்க ஏழு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளார்.
நாவற்குழி சான்றோர் வி.க, சங்கத்தானை பவர் வி.க, பாரதி வி.க., சாவகச்சேரி லிகோரியார் வி.க, கோவில் குடியிருப்பு ஸ்ரீமுருகன் வி.க, வரணி இடைக்குறிச்சி நவ. வி.க, இடைக்குறிச்சி வரணி நண்பர்கள் வி.க., மறவன் புலோ அம்பிகை வி.க ஆகியவற்றுக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## அபராதம்

தென்மராட்சி, ஓக.29
மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய யாழ்ப்பாணம் கொட்டடி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
நாவற்குழிப் பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட சாவகச்சேரி பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினர் மது போதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற போது அவரைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்தனர்.
வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப் பட்டது.
மோட்டார் போக்குவரத்துப் பிரிவினரால் தாக்கல் செய்யப் பட்ட 13 வழக்குகளில் இவ்விதம் அபராதம் விதிக்கப்பட்டது.(வ-9)



வடமராட்சி கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் பயிற்சியாளர்களுக்கான "ஆளுமை விருத்தியும் ஒழுக்க விழுமியங்களும்" சம்பந்தமான செயலமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை வடமராட்சி கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது...... (ந-422)

## பொது நூலகத்தில் சைக்கிள் திருட்டு

வலி.வடக்கு, ஓக. 29
சுன்னாகம் பொது நூலகத்தில் நிறுத்தப்பட்டிருந்த மாணவியின் பத்தாயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருட்டுப் போயுள்ளது.
சுன்னாகத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவரின் சைக்கிளே பொது நூலகத்தில் இருந்து திங்கட்கிழமை பகல் திருட்டுப்போயுள்ளது. இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (வ-86)

## பன்னிரு ஜோதிலிங்க தரிசனம் சனியன்று

யாழ்ப்பாணம், ஓக.29
யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஜோதி லிங்க தரிசனம் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெறவுள்ளது. தொடர்ந்து செப்ரெம்பர் 7 ஆம் திகதிவரை பக்தர்கள் இந்தத் தரிசனத்தை கண்டு பயன்பெறலாம். (வ)

## மிளகாய், கத்தரிச் செய்கையில் கிளிநொச்சி விவசாயிகள் ஆர்வம்

கிளிநொச்சி, ஓக.29
கிளிநொச்சி மாவட்டத்தில் மரக்கறிப் பயிர்ச் செய்கையில் இந்த வருடம் மிளகாய், கத்தரிப் பயிர்களை விவசாயிகள் அதிகளவு மேற்கொண்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் உட்பட நெல் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாத விவசாயிகள் உட்பட மரக்கறிப் பயிர்ச் செய்கையாக மிளகாய் மற்றும் கத்தரிக்காய் பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ளனர்.
கால போகத்துக்கான மரக்கறிப் பயிர்ச் செய்கையாக இவை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் தற்போது அதற்கான அறு வடைகளும் இடம்பெற்று வருகின்றன.
அந்தந்தப் பிரதேச மரக்கறிப் பயிர்ச் செய்கையாளர்கள் அறுவடைகளை மேற்கொண்டுள்ளதுடன் காலபோக விவசாய நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளனர்-என்றார்.(வ-14)



## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா கற்கைநெறி

தென்மராட்சி, ஓக.29
தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியைகளில் 40 பேருக்கான டிப்ளோமா கற்கை நெறி கடந்த சனிக்கிழமை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.
'ஆறுதல்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆறுமாத காலப் பயிற்சிகள் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். பயிற்சிக்கான கைநூல்கள் வளவாளர்களுக்கு வழங்கப் பட்டு பயிற்சி நெறிகள் நடத்தப் பட்டு வருகின்றன.
தற்போது நடைபெற்றுவரும் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைகள் முடிவுற்றதும் பயிற்சிநெறி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (ந-9)

## வீதியில் படுத்திருந்து பாயும் நாய்கள் பூநகரிப் பகுதியில் பலர் பாதிப்பு

தென்மராட்சி, ஓக.29
பூநகரிப் பிரதேசத்தில் கட்டாக் காலி நாய்களால் கடிபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வீதிகளில் படுத்திருக்கும் இந்த நாய்கள் வீதியில் நடந்தும் சைக்கிளிலும் செல்வோரைத் திடீரெனப் பாய்ந்து கடிப்பதாகவும் இவர்களில் பெரும்பாலா னோர் மாணவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.
சில வளர்ப்பு நாய்களும் வீதிகளில் படுத்திருந்து அவ்வழியே செல்வோரைக் கடித்து விட்டு தப்பியோடுவதால் இந்த நாய்களின் கடிக்கு உள்ளாகும் அனைவரும் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
இந்த மாதத்தில் (ஓகஸ்ட்) நேற்று வரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி.) ஏற்றிக் கொண்ட 84 பேரில் பெரும்பாலானோர் பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-9)

## தென்மராட்சி அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, ஓக.29
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் செப்ரெம்பர் ஐந்தாம் திகதி பி.ப. ஒரு மணிக்கு வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

## உதவுதொகை வழங்கல்

தென்மராட்சி, ஓக.20
பிரான்ஸ் வாழ் கைதடி ஒன்றியத்தின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் கல்விக்கான உதவு தொகை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கைதடி வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் கழகத் தலைவர் "லயன்" இ.கந்தசாமி தலைமையிலே நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பெருமளவு மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் புலம்பெயர் வாழ் உறவுகளும் சமுகம் தரவுள்ளனர். (வ-288)

# கண்ணீர் அஞ்சலி



கழக அங்கத்தவர்
*இராஜகோபால் பிரதீபன்*
அவர்களின் அன்பு மாமியாரும்
*அமுதா பிரதீபன்*
அவர்களின் அன்புத் தாயுமாகிய

**திருமதி தவமணி விஜயரட்ணம்**
அவர்களின்

மறைவையொட்டி எமது இதய அஞ்சலியை செலுத்துவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில். (C/11656) (7.6.3)

கொக்குவில் வளர்மதி
முன்னேற்றக் கழகமும்,
சனசமூக நிலையமும்.



# சுஜித் என்ரபிறைசஸ்

டச்சு வீதி, சாவகச்சேரி (பழனி ஆண்டவர் ஆலயம் முன்பாக)

எமது நிறுவன மட்டக்களப்பு கிளைக்கு

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

மாதாந்தம் ரூ.30000/- தொடக்கம் ரூ.35000/- வரை சம்பாதிக்கலாம். வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் ஆவணங்களுடன் நேரில் வரவும்.
உணவு, தங்குமிட வசதி இலவசம்.

(சி/2743)(23-16-14)

தொடர்பு
021 227 0586 , 0714542030


# கடனை மீளச் செலுத்தாததால் வர்த்தக வங்கிகள் வங்குரோத்து



கொழும்பு, ஓக.29
தங்கத்தின் விலை உயர் வடைந்திருந்தபோது வங்கிகளால் நகைகளைப் பிணையாகப் பெற்று வாடிக்கையாளர்களுக்குப் பெருந்தொகைகளில் வழங்கப்பட்டுள்ள கடன் தொகைகள் மீளச் செலுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளது. அதனால் நாட்டின் சில தனியார் துறை வர்த்தக வங்கிகள் வங்குரோத்து அடையும் அபாயத்தை எட்டியுள்ளன. உலக சந்தையில் தங்கத்தின் விலை மட்டங்கள் பெருமள வில் கீழிறங்கிச் சென்றுள்ள தால், சில கடன்காரர்கள் தங்க நகைகளை அடைவு வைத்து பெற்றுள்ள கடன் தொகையை விட, தங்க நகைகளின் பெறுமதி குறைவடைந்துள்ளது. அதனால் வங்கிகள் நட்டமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அடைவு வைத்து கடன்களைப் பெறும் நபரின் கடன் சம்பந்தப்படும் அறிக்கையொன் றினை இலங்கை கடன் விவரங்கள் செயற்பாட்டுப் பிரிவுக்கு வர்த்தக வங்கிகள் அனுப்பி வைக்காதிருப்பதும் வாடிக்கையாளர்கள் கடன்களைச் செலுத்தாதிருப்பதற்கு ஒரு காரணமாகவும் உள்ளதாக கடன்களை வகைப்படுத்தும் நிறுவனங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (ச-22)


# 31ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்
19.06.1946

மறைவு
30.07.2013

அமரர்
## அப்பாத்துரை கமலாதேவி

பாசத்தின் பொக்கிஷம் ஒன்று பார்விட்டுப்போய்
முப்பத்தொன்று ஆனதம்மா!
நேசமுடன் தேடினோம் நெருங்க முடியவில்லை அம்மா!
உங்கள் அன்புக் கதை கேளாமல்
வாடுகின்றோம் அம்மா
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம் அம்மா!

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி,
மல்லாகம். (39274)(10.16,14)

குடும்பத்தினர்.


**மாகாண சபைத் தேர்தல்கள் -2013.09.21**
**மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகள்**

# தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்களிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கையளிப்பதற்காக விடுமுறை வழங்குவது தொடர்பான 1988 ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொழிலாளர்களினதும், தொழில்தருநர்களினதும் தகவலுக்காக இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

"123 (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடைய ஆளொருவரை வேலைக்கமர்த்தியவராகவிருக்கின்ற எந்த ஆளும், அத்தகைய ஆளினால் அதற்காக எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய ஆள் அத்தேர்தலில் வாக்களிப்பதை இயலச் செய்வதற்காக வேலைக்கமர்த்திய அந்த ஆள் போதியதெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலத்திற்கு (அக்காலம் நான்கு மணித்தியாலங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.) சம்பள இழப்பை ஏற்படுத்தாத லீவை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) உப பிரிவு (1) இன் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவரினாற் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**02.** மேற்கூறப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தனது வாக்கையளிப்பதற்காக விடுமுறை கோரி எழுத்துமூம் விண்ணப்பம் செய்கின்ற எல்லா ஊழியர்களுக்கும், விடுமுறை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் விடுமுறை காலம், அமய ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையொன்றாகக் கருதப்பட வேண்டியதுடன், அது ஊழியர்களின் சாதாரண விடுமுறைகளிலிருந்து புறம்பானதாகவிருக்க வேண்டும்.

**03.** இவ்விடயம் தொடர்பாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுமுறை காலத்தை, அந்த ஊழியர் தொழில் புரியும் இடத்திலிருந்து அவரது வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போகவும் அங்கிருந்து திரும்பி வரவும் உள்ள தூரத்தைக் கருத்திற்கொண்டு தொழில்தருநரால் தீர்மானம் செய்ய வேண்டும். சட்டத்தின் படி லீவு பெற்றுக்கொள்வது தொடர்பாக இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களின்போதும் ஊழியர்களிடமிருந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதனால், இவ்வாக்கெடுப்பின்போது வாக்களிக்க உரித்துள்ள தனது ஊழியர்களுக்கு, சட்டத்தின் கீழ் உரிமையுள்ள இவ்விடுமுறையை தனியார், அரசாங்க துறைகளிலுள்ள தொழில்தருநர்கள் தமது தாபனத்தில் தொழில்புரியும் ஊழியர்களுக்கு வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.


**04.** மேற்கூறப்பட்ட மாகாகண சபைகளின் தேர்தல் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி மு.ப 7.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை நடத்தப்படும்.

**05.** இது தொடர்பாக சகல தொழில்தருநர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பை மிகவும் மெச்சுகின்றேன்.

**மஹிந்த தேசப்பிரிய**
**தேர்தல்கள் ஆணையாளர்.**

**தேர்தல்கள் செயலகம்,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**
**2013, ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி.**

(c11653-23-16-14)


வங்கிகள், வைத்தியசாலைகள் மற்றும் ஹொட்டல்களுக்கு விசேட விலைக்கழிவு

உத்தரவாதத்துடன் கூடிய தயாரிப்பு | சிறந்த விலைத் தள்ளுபடி | நாடுபூராவும் கிடைக்கும்

LANKA NIPPON
தலைமை காரியாலயம்: 18, கெயிசர் வீதி, கொழும்பு-11. தொ.பே. 2437735, 5230975
காட்சியறை: 517-519, காலி வீதி, கொழும்பு 04. தொ.பே. 5235878, 2582365
E: info@lankanippon.com | W: www.lankanippon.com



# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி கூறுதலும்



அமரர் **சங்கரப்பிள்ளை**
## கணேசரத்தினம்

கடந்த 21.07.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த அமரர் சங்கரப்பிள்ளை கணேசரத்தினம் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு நாளை (30.08.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம். மேலும் அன்னாரது பிரிவுச் செய்தியறிந்து தொலைபேசி மூலமும், நேரிலும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றிகள்.

இல.61, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி. 077 350 2624

குடும்பத்தினர்.

(37514)(10.6)

# போரால் சேதமடைந்த குளங்கள் புனரமைப்பு

கொழும்பு,ஓக.29

இலங்கையில் போர் இடம்பெற்ற பிரதேசங்களில் சேதமடைந்துள்ள குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தை விவசாய சேவைகள் அபிவிருத்தித் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 650 வரையிலான குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன என்று விவசாய சேவைகள் அபிவிருத்தி ஆணையாளர் சுனில் வீரசிங்க தெரிவித்தார்.

போரால் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ள பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இந்தக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

## மரண அறிவித்தல்



### திருமதி விஜயரட்ணம் தவமணி

மாவட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயரட்ணம் தவமணி கடந்த 27.08.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை விஜயரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா- நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காந்தரூபன் (ஜேர்மனி), மோகன்ராஜ் (கட்டார்), விஜிதா (ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை), அமுதா (கனடா), ஆகியோரின் அன்புத் தாயும் பிரதாபன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), நந்தினி, சுகுனா (ஜேர்மனி), பிரதீபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் பிரதாயினி, வித்தகன், சுஜானி (ஜேர்மனி), பிரனுஜா, அஸ்வின் (ஜேர்மனி), அபிஷன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் சிவகாமி இல்லம் பாப்பாத்தோட்ட வீதி, இனுவிலில் உள்ள அவரின் வீட்டில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39273)(23-16-14)

சிவகாமி இல்லம், பாப்பாத்தோட்ட வீதி, இனுவில்.

தகவல்: விஜிதா (மகள்)

## கண்ணீர் அஞ்சலி

### அருட்பணி. V.P. தனேந்திரா அடிகளார்

[எமது பாடசாலையின் பகுதிநேர ஆசிரியரும், ஆலோசகர் சபை உறுப்பினரும்]



அவர்களின் பிரிவினால் .
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நவீல்ட் பாடசாலைச் சமூகம்

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### அண்ணாமலை கந்தையாபிள்ளை செல்வரட்ணம்

(“செல்வம்ஸ்” நெடுங்கேணி, “முருகன் ஸ்ரோர்ஸ்”கதுருவெல-பொலன்நறுவ)



காரைநகர் சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும், S.M. கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை கந்தையாபிள்ளை செல்வரட்ணம் நேற்றுமுன்தினம் 27.08.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை- பூரணம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், பத்மாதேவியின் அன்புக் கணவரும், வரதராசா, சற்குணராசா, ஜெகராசா, ஜெயமாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவலலிதா, பவானி, தர்சினி, தவராசா (ஆசிரியர் கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன் விஸ்வலிங்கம் துரைராஜசிங்கம் மற்றும் உமாதேவி, தேவராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், பாக்கியம், சந்திரசேகரம், சர்மா, தர்மையா, இராசம்மா, நாகரத்தினம், கிருபால் மற்றும் நவரத்தின பூபதி, செல்வராணி, கெங்காதேவி, கந்தசாமி, நடராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பவித்திரா, ராகவி, யதுர்சன், ஹர்மிகா, நர்மிகா, லக்ஷா பால கீர்த்தனா, கஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2013) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

S.M. கேணியடி, காரைநகர்.

(39278) (10,14)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### மாசிலாமணி ஜெகதீஸ்வரன் (ஆனந்தன்)



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அன்னசத்திர ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி ஜெகதீஸ்வரன் நேற்றுமுன் தினம் (27.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மாசிலாமணி அன்னலட்சுமி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை- சொர்ணம்மா தம்பதியரின் மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் மஜிதன், யசிந்தன், லக்ஷகா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவசோதி, மன்மதராசன், உதயசோதி, கலா, பவானி, ஜீவா, கிருபா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலாநிதி, சுமதி, வதனி, பவானி, சீலன், சிவஸ்காந்தன் (யா/போதனா வைத்தியசாலை NTS), காலஞ்சென்ற அஜித் மற்றும் சர்வானந்தன், சியாமளா, வரதராசா காலஞ்சென்ற ஜெயராசா மற்றம் ராஜலட்சுமி (U.K), சிவானந்தன் (U.K), மகாலட்சுமி, சதானந்தன் (U.K) ஆகியோரின் மைத்துனரும் சோதிமலர், சுயந்தன் (U.K), ராதா (U.K), பரமசிவம், கிருபா தேவி (U.K) ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

51, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

(39273)(23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.
0777698409

## சின்னத்தம்பி வேலுப்பிள்ளை



யாழ்.மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் (27.08.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பூரணம் தம்பதியரின் மூத்த புதல்வனும், மலர், காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலாராணியின் பாசமிகு கணவரும், சசீந்திரன் (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்), அமிர்தா, சிவதாசன், சிவசுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ்குமார் (பிரான்ஸ்), பிரசாந் ஆகியோரின் அன்பு மாமனும், அபினஜா (பிரான்ஸ்), அக்ஷனா (பிரான்ஸ்), டபிஷனா, கபிசாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற பவளகாந்தின் மைத்துனரும், காலஞ்சென்ற கோபிகா, பனோஜன், பிரதீஸ், றஜீவ் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2013) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(39248)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:0777244196, 0779352493

## கோவிந்தபிள்ளை தியாகராசா

(குஞ்சு மாமா)



கலட்டிக்கிணத்தடி, புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை தியாகராசா நேற்று (28-08-2013) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் நடராசா, சரஸ்வதி (தங்கம்மா), காலஞ்சென்ற சண்முகநாதன், கணேசலிங்கம் (அவுஸ்திரேலியா), அமிர்தலிங்கம் (அவுஸ்திரேலியா), பஞ்சலிங்கம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற மார்க்கண்டு, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், விஜயலட்சுமி, பாலசுப்பிரமணியம், பிரியாணி (அவுஸ்திரேலியா), றஞ்சிதமலர்(அவுஸ்திரேலியா), பானுமதி (அவுஸ்திரேலியா), பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்மலிங்கம் (மட்டக்களப்பு), தர்மபாக்கியம் (கனடா), சகுந்தலா, புஸ்பராணி (டென்மார்க்), இராசலிங்கம் (லண்டன்), புவனேஸ்வரி, புவனேஸ்வரன் (சுவிஸ்), புஸ்பராசா(அவுஸ்திரேலியா), தமிழ்ச்செல்வி (அவுஸ்திரேலியா), மயூரன், சிறீதரன் (சுவிஸ்), வதனி (லண்டன்), வினோதனி, தர்மினா (லண்டன்), ஜானகி (அவுஸ்திரேலியா), றிச்சார்ட் (அவுஸ்திரேலியா), கிருபா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சந்திராதேவி (மட்டக்களப்பு), நவரத்தினராசா, நந்தினி (சுவிஸ்), ஜெயந்தன் (அவுஸ்திரேலியா), கலைவாணி (சுவிஸ்), குகதாசன் (லண்டன்), சோதிரூபன் (பிரதேச செயலகம், கரவெட்டி), ஜெயானந்தன் (லண்டன்), பவானி (அவுஸ்திரேலியா), பவானந்தன் (அவுஸ்திரேலியா), தவச்செல்வி, கல்யாணி (அவுஸ்திரேலியா), அரவிந்தன் (அவுஸ்திரேலியா), கவிதரன் (அவுஸ்திரேலியா), தீபன் (அவுஸ்திரேலியா), கிருசாந்த் (அவுஸ்திரேலியா), பிறேம்குமார், ஸ்ரீஸ்கந்தா, உதயசூரியா ஆகியோரின் சிறிய தகப்பனாரும் கயல்வழி, சுமதி, தயாபரன், சுபா, மதுராந்தகி, பாலசங்கர், செந்தூரன், சிந்துஜன், வசீகரன், அகல்யா, பிரதீபன், தர்சன், சங்கவி, மகீஷா, டினேஸ், சோபன், தர்சன், ராகவி, ராகல், வருண், பவித்திரா, அஸ்வின், கீர்த்தன், பிரவீன், பிரார்த்தனா, பிரசோபன், அபிநயா, அருரன், அபிஷேகா, நிலுஷா, பிரியங்கா, லக்ஷன், பிரசன்னா, ஆராதனா, சாய்சரண், சாகித்யன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2013) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டிக் கிணத்தடி, புலோலி தெற்கு,
புலோலி, சாரையடி.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 0771133190, 0212260245

# சுயாட்சியே தீர்வு என்று நிரூபிக்க கூட்டமைப்புக்கே வாக்களிப்பர்

## வேட்பாளர் ஜெயசேகரன் நம்பிக்கை



நேர்காணல்
ஔரீஷ்

"வடமாகாண சபைத் தேர்தலை தமது சுயாட்சிக் குரலுக்கான களமாகத் தமிழ் மக்கள் பயன்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் எங்களுக்கு எஞ்சியிருக்கும் பகுதிகளையும் நாங்கள் இழக்க வேண்டியிருக்கும்" என்று கூறுகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஜெயசேகரன். இவருடனான நேர்காணல் உங்களுக்காக:

கே: நீங்கள் ஒரு வர்த்தக சமூகப் பின்னணியில் இருந்து அரசியலுக்குள் வந்திருக்கிறீர்கள். அதுவும் கூட்டமைப்பு சார்பாக இவ்வாறு கூட்டமைப்பில் போட்டியிட வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது.

ப: நானொரு வர்த்தகனாக இருந்தாலும் அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் அபிமானிகளாகவே எனது குடும்பத்தினர் இருந்தார்கள். எனவே இயல்பாகவே அந்தக் கட்சியின் கொள்கைகள் எனக்குள் ஊறியிருந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் கூட எனது மைத்துனர் ஒருவரின் வீட்டிலேயே நடந்தது. இந்த நிலையில் தான் வடமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் களமிறங்க என்னை அணுகினார்கள். ஏற்கன்வே கூட்டமைப்பின் மீதும் சமூகத்தின் மீதும் இருந்த அக்கறை மறுப்பேதும் சொல்லாமல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் முடிவை எடுக்கத் தூண்டியது.

எனது முடிவை வர்த்தக சாங்கத்திடம் தெரிவித்து அவர்களின் அனுமதி பெற்ற பின்னரே வேட்பு மனுவைத் தாக்கதல் செய்தேன். எனவே குடாநாட்டு வர்த்தகர்களின் பூரண ஒத்துழைப்புடனும் தமிழ் மக்களின் ஆதரவுடனும் பெரு வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

கே.நீங்கள் வர்த்தக சங்கத் தலைவராக இருந்த காரணத்தால் வர்த்தகர்களின் ஆதரவு உங்களுக்கு உண்டு. எனினும் சாதாரண மக்களிடையே உங்களைப் பற்றிய அறிமுகங்கள் இருக்கின்றதா?

ப.நான் வர்த்தக சங்கத் தலைவராக இருந்த போது தனியே வியாபார நோக்கோடு செயற்படவில்லை. சமூக மேம்பாட்டுப் பணிகளிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டிருந்தேன். இறுதிப்போரின் போது எல்லா உடமைகளையும் இழந்து முகாம்களில் தஞ்சமடைந்த மக்களுக்கு முதன்முதலாக உணவு. அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளை கொடுத்தவர்கள் நாங்கள் தான். மற்றைய தொண்டு நிறுவனங்கள் வெளிநாட்டு நிதிகளிலேயே தமது பணிகளைச் செய்ய நாங்கள் எங்கள் வர்த்தக நண்பர்களின் நிதியுதவியோடு பாதிக்கப்பட்ட எங்கள் மக்களின் துயர் துடைக்க இயன்ற உதவிகளைச் செய்தோம். செய்துவருகின்றோம்.

வெறுமனே பொருளுதவியோடு மாத்திர[illegible]மல் கிட்டத்தட்ட 300 குடும்பங்களை பொருளாதார ரீதியாக உயர்வு பெறச் செய்துள்ளோம். எந்தவித வாழ்வாதாரமும் அற்ற அந்தக் குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள். கூடுகள் என்பவற்றை வழங்கி இன்றைக்கு அவர்களை மாதாந்தம் 40 ஆயிரம் ரூபா வுக்கும் மேற்பட்ட வருமானத்தைப் பெறும் குடும்பங்களாக மாற்றியிருக்கின்றோம். இது தவிர பாடசாலையில் இருந்து இடைவிலகிய பிள்ளைகளை மீண்டும் பாடசாலையில் சேர்ப்பித்து அவர்களின் கற்றலுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். தொடர்ச்சியாக அவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று வருகிறார்களா என்பதைக் கண்காணித்தும் வருகின்றோம்.

இத்தகைய சமூக சேவைகளை எந்தவித சுயநல நோக்கத்திற்காகவும் செய்யவில்லை. நான் இந்தத் தேர்தலில் தோற்றாலும் கூட மக்களுக்கான சமூக சேவைப் பணிகளில் அக்கறையுள்ளவன் என்ற வகையில் தொடர்ந்து இந்தச் சேவைகளில் ஈடுபடுவேன். மற்றவர்களைப் போல தேர்தலுக்காக மட்டும் கொடையாளியாகும் குணம் எனக்குக் கிடையாது. எப்போதுமே இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே எனது கொள்கை. வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றால் இன்னும் நிறையப் பேரின் கண்ணீரை புலம்பெயர் தமிழர்களையும் கூட்டிணைத்துக் கொண்டு என்னால் துடைக்கமுடியும்.

கே:வடமாகாண சபையென்பது தமிழர்களுக்குரிய நிரந்தரத் தீர்வாக அமையுமா?

ப: உண்மையில் வடமாகாண சபை என்பது அதிகாரங்கள் குறைந்த மிகச்சிறிய அலகு என்பது எமக்குத் தெரியும். ஆனாலும் நாங்கள் இந்தத் தேர்தலில் போட்டியிட்டாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் தமிழர்கள் மீது காலங் காலமாக பேரினவாதமும் வேறு சில சக்திகளும் சொல்லிவரும் குற்றச்சாட்டு என்னவெனில் 'இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக கிடைத்த பல சந்தர்ப்பங்களை தவறவிட்டுவிட்டார்கள்' என்பதே. அதே போன்று இப்போது வடமாகாண சபையிலும் நாங்கள போட்டியிடாவிட்டால் இதையும் தவறவிட்டுவிட்டோம் என்று பின்னொரு காலத்தில் குற்றம் சாட்டுவார்கள். மாகாண சபையை அரச தரப்பு கைப்பற்றிவிட்டால் எதிர்காலத்தில் தமிழர்களுக்குக்கென எஞ்சியிருக்கும் பகுதிகளையும் நாங்கள் இழக்க வேண்டியிருக்கும்.

இதேவேளை வடமாகாண சபை தேர்தலை அரசு விரும்பி நடத்தவில்லை. மாறாக இந்தியாவினதும் சர்வதேசத்தினதும் அழுத்தம் காரணமாகவே வடமாகண சபைத் தேர்தலை நடத்த அரசு இசைந்தது. இப்போது அதிகாரங்கள் அற்ற மாகாண சபை முறைமைக்கு இது போன்ற சர்வதேச அழுத்தங்கள் காரணமாக இனிவரும் காலங்களில் அதிகாரங்கள் கிடைக்கக்கூடும்.

அப்போது வலிமையான மாகாண சபையை நாங்கள் பெற முடியும்.

மாகாண சபை மட்டுமே எங்களுக்கான தீர்வு என்று நம்புவேன் இல்லை நான். சுயாட்சியே தமிழர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வாக முடியும். அந்த முடிவை வலியுறுத்தவும் இந்தத் தேர்தல் எங்களுக்கொரு வாய்ப்பாக அமையும். தமிழர்கள் எல்லோரும் சுயாட்சியையே விரும்புகிறார்கள் அந்தக் கொள்கையை வலியுறுத்தும் கூட்டமைப்புக்கு மக்கள் வாக்களிப்பதன் மூலம் சர்வதேசத்துக்கு உணர்த்த முடியும்.

கே: கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தலில் கூட்டமைப்புக்கான மிகப்பெரிய வெற்றிகளை தமிழ் மக்கள் வழங்கியிருந்தார்கள் . அது போன்ற வெற்றியை இந்த முறையும் ஈட்டிக் கொள்ள முடியுமா?

ப: கடந்த காலத் தேர்தல்களில் படிப்படியாக மக்களின் வாக்களிப்பு வீதம் அதிகரித்து வந்ததை அனைவரும் உணர்ந்திருக்க முடியும். வாக்களிப்பு வீதம் உயர உயர அதற்கேற்ப கூட்டமைப்பு பெற்றுக்கொள்ளும் ஆசனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருந்தது. எனவே இந்த முறை முன்னைய காலங்களை விடவும் அதிகளவானோர் வாக்களிப்பில் தாமாகவே முன்வந்து கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம். என்றாலும் மக்களின் வாக்களிப்பு வீதத்தை தூண்டுவதற்காக இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் இறங்கியிருக்கிறோம்.

கே.வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் என்னென்ன செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றீர்கள்?

ப.இனப்பிரச்சினையை முற்றாகத் தீர்க்க மாகாணசபை உதவாவிட்டாலும் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு இதனை சிறந்த ஒரு களமாகப் பயன்படுத்த முடியும். முன்னரெல்லாம் நம்மவர்கள்தான் உள்ளூர் உற்பத்திகளை லொறிகளில் ஏற்றிக் கொண்டு தென்னிலங்கைக்குச் செல்வார்கள். ஆனால் இப்போது யார் யார் எல்லாமோ வந்து தங்கள் பொருள்களை இங்கே விற்றுவிட்டுப் போகிறார்கள். இதனை மாற்றி தென்னிலங்கை வர்த்தகர்களின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்து முன்னரைப் போல வடபகுதி வர்த்தகர்கள் சுதந்திரமாக தொழில் செய்யக் கூடிய நிலையை ஏற்படுத்தலாம்.

அத்தோடு போருக்கு முன்னர் வடபகுதியில் கொடிகட்டிப் பறந்து தற்போது செயலற்றுப் போயுள்ள தொழிற்சாலைகளை மீள இயங்க வைக்க என்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன். எனினும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இயங்கினால் சுண்ணக்கல் வளம் பறிபோவதோடு இயற்கைச் சமநிலையும் பெரிதளவு குழப்பமடையும் என்பதனால் அதுகுறித்து நான் பெரிதும் அக்கறை கொள்ளவில்லை. ஆயினும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் என்பவற்றை மீள உயிர்ப்போடு இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். இதன்மூலம், எமது பகுதியில் வீணாகிவரும் வளத்தை பொருளாதார முதலீடாக மாற்றுவதுடன் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பையும் வழங்க முடியும்.

கே.வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறீர்களா?

ப.நிச்சயமாக. ஏனெனில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து ஆட்சியமைப்பதற்காகவே முஸ்லிம் காங்கிரசுக்கு முஸ்லிம் மக்கள் வாக்களித்திருந்தார்கள். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக அந்தக் கட்சி மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு ஆளும் வர்க்கத் தோடு இணைந்து ஆட்சியைப் பகிர்ந்துகொண்டது.

இதேபிழையை மீண்டும் விடுவதற்கு முஸ்லிம் மக்கள் தயாராக இல்லை. எனவே வடமாகாண சபைத் தேர்தலில் நேரடியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து முஸ்லிம் மக்களும் தமது உரிமைக்கான குரலை பலமாக வெளிப்படுத்துவார்கள். இதில் எந்த மாற்றமும் கிடையாது.




















ஸ்ரான்லி வீதியில் ஈ.பி.டி.பியின் யாழ். தலைமைக் காரியாலயம் முன் பாக இரு பக்கமும் வீதித் தடை ஏற் படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள தாக விசனம் வெளியிடப்படுகிறது. (ஐ-21)

# அரசின் அடாவடிகள் குறித்து நவிப்பிள்ளைக்கு விளக்குவேன்

## ஐ.தே.க.வேட்பாளர் துவாரகேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக.29

அரசு தமிழ் மக்கள் மீது திணித்துள்ள அடாவடித்தனங்கள் குறித்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடம் விரிவாகத் தெரிவிப்பேன். இவ்வாறு தெரிவித்தார் ஐ.தே.க.சார்பாக வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் துவாரகேஸ்வரன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐ.நா. ஆணையாளர் நவநீதம்பிள்ளையை நானும் சந்திக்கவுள்ளேன்.

இதன்போது வடக்கில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் பிரச்சினைகள் குறித்து அவரிடம் நான் தெளிவுபடுத்துவேன்.

குறிப்பாக திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், சிங்கள குடியேற்றங்கள் மற்றும் வடபகுதிக்கு மாத்திரம் என்று விதிக்கப்பட்டுள்ள கெடுபிடிகள் குறித்து நவிப்பிள்ளையிடம் விளக்குவேன்.

> நவநீதம் பிள்ளையைப் பொறுத்தவரை அவர் மக்களுக்கு ஏற்படும் மனிதஉரிமைகள் ரீதியான பிரச்சினைகளை ஆராயவே இலங்கை வந்துள்ளார்.

சலுகைகளுக்காகவும், இருப்புக்காகவுமே சிலர் அரசியல் செய்கின்றனர். இவர்கள் அரசுடன் சேர்ந்து கொண்டு தமிழ் மக்கள் பிரச்சினைகளை மூடி மறைக்கின்றனர்.

இதனால் வட பகுதியில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தே அரசால் ஏற்படுத்தப்படும் கெடுபிடிகள் குறித்தே வெளியுலகுக்கு தெரியப்படுத்தும் சந்தர்ப்பங்கள் இல்லாமல் செய்யப்படுகின்றன.

வடக்கில் அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு சில தனித்துவமான இடங்களை மட்டும் காண்பித்து விட்டு அரச தரப்பினர்மார் தட்டிக்கொள்கின்றனர்.

நவநீதம்பிள்ளையைப் பொறுத்தவரை அவர் மக்களுக்கு ஏற்படும் மனிதஉரிமைகள் ரீதியான பிரச்சினைகளை ஆராயவே இலங்கை வந்துள்ளார்.

அவருக்கு இங்குள்ள உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது கட்டாய கடமையாகும்.

அந்த வகையில் நான் அவரைச் சந்தித்து முக்கிய விடயங்களைத் தெரிவிப்பேன்-என்றார். (ஐ)

# சலுகைக்காக வாக்களிப்பதைவிடுத்து உரிமையை உறுதிப்படுத்தவேண்டும்

## கிளிநொச்சியில் த.தே.கூ.வேட்பாளர் திருலோகமூர்த்தி

கிளிநொச்சி.ஒக.29

எங்கள்பிரதேசங்களில்போரைத் திணித்து மக்களை நிர்க்கதியாக்கி, இங்குள்ள வளங்களை அழித்து அவல நிலைமையை எற்படுத்திய அரசு, அபிவிருத்தி என்ற போர்வையிலும் வேலைவாய்ப்பு என்ற மாயையிலும் வாக்குப்பிச்சை கேட்டு நிற்கிறது.

இதை உணர்ந்து தமிழ்மக்கள் வாக்களிக்கவேண்டும். இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் டாக்டர் க.திருலோகமூர்த்தி.

கிளிநொச்சி கோணாவில் காந்தி கிராமம் பொது நோக்கு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி விவசாயிகளும் வர்த்தகர்களும்ஏனையதொழில் துறைசார்ந்தவர்களும் அதிகளவு செறிந்து வாழும் பிரதேசமாகும்.

போரால் முற்றாகப் பாதிக்கப்பட்ட எமது மாவட்டத்தில் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுடன் வாழந்துவருவதை நாம் அறிவோம்.



> போரால் முற்றாகப் பாதிக்கப் பட்ட எமது மாவட்டத்தில் மக்கள் பல்வேறு நெருக்கடிகளு டன் வாழந்து வருவதை நாம் அறிவோம்.

தொழில் வாய்ப்புக்களுக்காகப் பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாது நிர்க்கதியான நிலைக்குள் வர்த்தகர்களும் முன்னாள் போராளிகளும் பொது மக்களும் இருக்கின்றனர். இதுவே அரசு மக்களுக்குக் கொடுத்த வெகுமதியாகும்.

கிளிநொச்சி மாவட்ட மக்களில் அனேகர் போரின் போது காணாமல் போயுள்ளனர். போரிலிருந்து மீண்டு வந்த பெற்றோர் உறவினர்கள் தமது பிள்ளைகளை படையினரிடம் ஒப்படைத்தனர். இவர்களுக்கு என்ன நடந்தது? இவர்களின் நிலை என்ன? என்று தினமும் ஏங்கும் உறவுகளுக்கு என்ன பதிலை அரச சொல்லப் போகிறது? வேதனையோடு இருக்கு எங்கள் மக்களிடம் வாக்குக் கேட்க அரசுக்கும் அவர்களது வேட்பாளர்களுக்கும் என்ன தகுதி இருக்கிறது. உண்மை நிலையை மக்கள் உணர்வார்கள்.

எதிர்வரும் வட மாகாண சபை தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. உலகமே எதிர்பார்க்கும் தேர்தல் இது. இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட மக்கள் சரிவரப் பயன்படுத்த முன் வரவேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களித்து உங்கள் உரிமைகளை சுதந்திர வேட்கை யை வெளிப்படுத்துங்கள்.- என்றார். (ஐ)


# வாக்காளர் அட்டைகள் விநியோக பணி ஆரம்பம்

கொழும்பு. ஒக.29

வாக்காளர்அட்டைகள் நேற்று முதல் தபால் திணைக்களத்தினரால் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல்கள் திணைக்களம் நேற்று முன்தினம் வாக்காளர் அட்டைகளை தபால் திணைக்களத்திடம் கையளித்த நிலையில் நேற்று விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரு வார காலத்துக்குள் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தத்தமது பகுதி தபாலகங்களில் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-4)






# நவிப்பிள்ளை எமக்கு கட்டளையிட முடியாது

கொழும்பு, ஓக. 29
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையால் இலங்கைக்கு எவ்வித கட்டளைகளையும் பிறப்பிக்க முடியாது என்று அரசு நேற்று ஆணித்தரமாக இடித்துரைத்தது. இதையும் மீறி உத்தரவு பிறப்பிக்கப்படுமானால், அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என் றும் அரசு திட்டவட்டமாக அறிவித்தது.
நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம் அரசுக்கு முக்கிய சம்பவம் இல்லை என்றும், நினைத்திருந்தால் அவரது பயணத்தைத் தடுத்திருக்கலாம் என்றும் அரசு சுட்டிக் காட்டியது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம் தொடர்பிலும், அவரது சந்திப்புகள் குறித்தும் ஊடகவியலா ளர்கள் பல கேள்விகளை எழுப்பினர். இவற்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சரும், சபை முதல்வருமான நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். (த-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

## நவநீதம்பிள்ளையைத் துரத்தும் காணாமற்போனோரின் உறவுகள்


செயலகத்துக்கு நேற்றுச் சென்ற நவநீதம்பிள்ளை அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் டி சில்வாவுடன் கலந்துரையாடல் நடத்தினார்.
இதன்போது மாவட்ட செயலகத்தின் முன்பாகத் திரண்ட கிழக்கு மாகாணத்தில் காணமற் போனோரின் உறவுகள் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.
காணாமற்போன. தமது உறவுகளைக் கண்டு பிடித்துத் தருமாறு அவர்கள் கோஷம் எழுப்பினர். இருப்பினும் நவநீதம்பிள்ளை கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களை சந்திக்கவில்லை.
நவநீதம்பிள்ளை யாழ்ப்பாணம் வந்திருந்த போதும் காணாமற் போனோரின் உறவுகள் பெரும் எடுப்பில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## அங்கஜனின் தந்தை இராமநாதன் கைது

பாளரான சர்வானந்தாவின் ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் இருவர் காயமடைந்தனர்.
வேட்பாளர் அங்கஜனின் தந்தையான இராமநாதனே துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டதாக வேட்பாளர் சர்வானந்தா சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.
இதனையடுத்து இராமநாதன் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். நேற்றுக் காலையில் இருந்து பிற்பகல் வரை இராமநாதன் பொலிஸ் நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.
அங்கஜனின் தந்தையான இராமநாதனை கைது செய்யா விட்டால் தாம் வேட்பாளர் பட்டியலில் இருந்து விலகிக்கொள்ளப்போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களான பொன்னம்பலம், சர்வானந்தா, றெமீடியஸ், அகிலதாஸ் ஆகியோர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## எழிலன் எம்மிடம் இல்லை

அனந்தி. இறுதிப்போரின் கடைசி நாளான 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி எனது கணவர் மற்றும் ஆயிரக்கணக்கான போராளிகள் எங்கள் கண் முன்பாக இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். எனது கணவர் உயிருடன் இருப்பார் என்று நம்புகின்றேன். அவர் எங்காவது இரகசியத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவித் திருந்தார்.
இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இராணுவ பேச்சாளர், அனந்தியின் கணவர் குறித்து எந்த தகவலும் இல்லை. புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டவர்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியல்கள் உள்ளன. எல்லோருடைய தகவல்களும் அதில் பதிவாகியுள்ளன. எவரேனும் அதைப் பொலிஸாரிடம் பெற்றுக் கொள்ளலாம் - என்றார். (த-5)




## காணாமற்போன சம்பவங்களை கையாளத் தனிச் சட்ட வரைவு

அரசு திட்டமிட்டுள்ளது.
கடத்தப்பட்டு காணாமற் போ கும் சம்பவங்களை கடும் தண்டனைக்குரிய குற்றவியல் குற்றமாகக் கருதும் வகையில் குற்றவியல் சட்டக்கோவை திருத்தப்படவுள்ளது. நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவொன்று ஏற்கனவே இந்தத் திருத்தங்களை ஆராய்ந்து வருகின்றது.
கடத்தப்பட்ட பின்னர் உடல் கிடைக்காத நிலைமையை கையாள்வதற்கு தற்போதைய சட்டத்தில் இடமில்லை. இந்தப் புதிய சட்டவரைவு நிறைவேற்றப்படின் கடத்தப்பட்டவரின் உடல் கிடைக்காத நிலையிலும் முறையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## அரச வேட்பாளர்களின் ஆயுதங்களால் அச்சம்

சியைச் சேர்ந்த மற்றொரு வேட்பாளரான அங்கஜனின் தந்தையால் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
அனுமதி பெற்ற துப்பாக்கிகளையும் தேர்தல் காலத்தில் யாரும் வைத்திருக்க முடியாது என்றும் அவ்வாறு வைத்திருந்தால் அவற்றை பறிமுதல் செய்யுமாறு யாழ். வந்திருந்த தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் அரச வேட்பாளர்கள் இடையே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. அத்துடன் கடந்த 20 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் அங்கஜனின் தந்தை தன்னை கைத்துப்பாகியைக் காட்டி மிரட்டியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தம்பிராசா குற்றம் சாட்டியிருந்தார்.
இந்தச் சம்பவங்கள் குடாநாட்டு மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.
அரச வேட்பாளர்கள் உயிராபத்தை விளைவிக்கும் ஆயுதங்களை வைத்திருப்பதானது நீதியான தேர்தல் நடைபெறுவதை கேள்விக்குறியாக்கும் என்று தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.
மக்கள் சுதந்திரமாக தேர்தலில் வாக்களிக்க வேண்டியிருந்தால் இவ்வாறான ஆயுதங்கள் உடனடியாகக் களையப்படவேண்டும் என்றும் பொலிஸார் இது விடயத்தில் விரைந்து செயற்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை. தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதாரவாளர்கள் இடையேயான இந்த மோதல் வடக்குத் தேர்தலை நிறுத்தி வைக்க அரசு மேற்கொள்ளும் சதி நடவடிக்கை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டி உள்ளது. (த-5)

## வலி. வடக்கு மக்களின் 'ரிட்' மனு ஒத்திவைப்பு

வலி. வடக்கில் தமிழ் மக்க ளின் பூர்வீக நிலங்களை. 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணியைப் படைகளின் தேவைக்காகச் சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் சுவீக ரிப்பு அலுவலரால் கடந்த ஏப் ரல் மாதம் விடுக்கப்பட்டன.
இதனை எதிர்த்து பாதிக்கப் பட்ட மக்கள் முதல் கட்ட மாக ஆயிரத்து 474 'ரிட்' மனுக்களை கடந்த மே மாதம் 15 ஆம் திகதி கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.
இந்த மனுக்கள் மீதான விசாரணை மே மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது குறித்த 'ரிட்' மனுக்களை ஏற்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை மே மாதம் 27 ஆம் திகதி முன்வைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பணித்தது.
இதற்கிடையில் இரண்டாம் கட்டமாக 710 'ரிட்' மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மொத்தமாக 2 ஆயிரத்து 184 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
இந்த வழக்கின் பிரதிவாதிகளாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர், காணிகளை சுவீகரிக்கும் தகுதி வாய்ந்த அரச அதிகாரி மற்றும் அரச காணி அளவையியலாளர் ஆகியோரை மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
இந்த நிலையில் குறித்த வழக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் மனுக்கள் மீது பிரதிவாதிகள் ஆட்சேபங்களை தெரிவிப்பதற்கு நவம்பர் 7 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியுள்ளது.

### பிரதிவாதிகளுக்கு அழைப்பு

யாழ். ஆயரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 'ரிட்' மனுவில், றோமன் கத்தோலிக்க பேராயர் நிலையியல் சட்டப்படி தான் தனது மறை மாவட்டத்திலுள்ள காணிகளுக்கு உரிமையுள்ளவர் என்றும் வலி வடக்கில் சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள காணிகளில் தனது காணிகளும் உள்ளடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
காணி அமைச்சரின் காணி சுவீகரிப்புப் பிரகடனத்தைச் செயற்படுத்துவதை தடுக்குமாறு ஆயரின் மனுவில் கோரப்பட்டுள்ளது.
இந்த மனுவில் பிரதிவாதிகளை நவம்பர் 7 ஆம் திகதி நீதிமன்றுக்கு அழைக்கும் கட்டளையை பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (த-5)

**பணி நிலை வேண்டுகை**

மல்ரி சென்ரர் நிறுவனத்துக்கு கணினி அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
(முன் அனுபவம் உள்ளவர்கள்)
நீர்வேலி பிரதேசத்துக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
நீர்வேலி. 0776184425. 021 222 4143

## மரண அறிவித்தல்

### திருமதி றஞ்சிதமலர் யோகநாதன்

(உபதபாலதிபர் மந்துவில்)



மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றஞ்சிதமலர் யோகநாதன் 28.08.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஐயம்பிள்ளை யோகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஐயாத்துரை- சரஸ்வதி தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை- செல் லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் பேருந்தா, மிதுர்ஷன்( மாணவன் சாவ/ இந்துக் கல்லூரி ), சிவர்ஷன் (மாணவன் சாவ/இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஜெயராசசிங்கம் (உபதபாலதிபர், மந்துவில்), தர்மகுலசிங்கம் (உப அஞ்சல் அலுவலகம், வரணி), காலஞ்சென்ற இராசகுலசிங்கம் (தபால் ஊழியர், கொடிகாமம்), இராசமலர் பாஸ்கரன் (முன்னாள் ஆசிரியை, யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), இன்பமலர் ஆகியோரின் அருமை சகோதரியும் உமாஜெயந்தி (ஆசிரியை, கண்டி), பாஸ்கரன் (பிரதேச சபை ,கொடிகாமம்), தனலெட்சுமி (ஆசிரியை யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பானுகா, தர்மிகா, சிவஜா, ஆகியோரின் அருமைப் பெரியம்மாவும் கீர்த் திகா, சிவாஜன், தண்முகி ஆகியோரின் பாசமுள்ள மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (29.08.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் வேம்பராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் மேற்கு கொடிகாமம்
தொ.பே.: 0774892625

தகவல்: குடும்பத்தினர்



39ஆவது தேசியமட்டக் கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட வடமாகாண அணியினருடன் பயிற்றுநர் குணசேகர, வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் ராஜாரணசிங்க மற்றும் வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி லலித் ஜெயசேகர.(ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் ஒக 29
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை உருப்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் .

பிப 4.30 மணி
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் எதிர் நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம். (ற-23)

-----------

யாழ்ப்பாணம், ஒக. 29
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:

பி.ப 4மணி
அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4.45 மணி
நவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மைக்கல் விளையாட்டுக் கழகம். (ற-23-422)

-----------

யாழ்ப்பாணம் ஒக29
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம்

பி.ப. 3.30 மணி
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

பிப 4.30 மணி
சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்.(ற-23)

-----------

யாழ்ப்பாணம் ஒக29
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சூசைப் பிள்ளை ராஜ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

பி.ப. 3.45 மணி
சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்.ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4.45 மணி
அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம்.

(ற-23)

## சாதிக்கிறது யாழ். 'பி' அணி

யாழ்ப்பாணம், ஒக.29
இலங்கை கரம் சம்மேளனம் அங்கததுவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தேசிய மட்ட கரம் சுற்றுப் போட்டித் தொடரின் 'பி' பிரிவில் யாழ். மாவட்ட 'பி' அணி வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு முன்பதான ஆட்டத்தில் விளையாடுவதற்குத் தகுதி பெற்றுள்ளது.

கொழும்பு கரம் சம்மேளனத்தின் மண்டபத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் யாழ்.மாவட்ட 'பி' பிரிவு அணிக்கும் பெற்றோலிய கூட்டுத்தாபன விளையாட்டுக்கழக அணியி னருக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் யாழ். மாவட்ட 'பி' பிரிவு அணி 5:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் யாழ். மாவட்ட 'பி' பிரிவு அணியை எதிர்த்து ஆரித்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. அதில் யாழ். மாவட்ட 'பி' பிரிவு அணி 5:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் யாழ். மாவட்ட 'பி' பிரிவு அணியை எதிர்த்து எஸ்.என். ஏ. வி.க. அணி மோதியது. அதில் 5:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# சண்றைஸை சாய்த்தது சண்போய்



யாழ்ப்பாணம், ஒக. 29
கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த வீரர்களுக்கிடையே புதுமுறிப்பு உதய சூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய யூ.பி. எல். மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சண்போய்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பி யன் ஆனது.

இறுதியாட்டத்தில் சண்றைஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்போய் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சண்போய் விளையாட்டுக்கழக அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சண்போய் விளையாட்டுக்கழக அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் நிலுஷன் 19 ஓட்டங்களையும் மாஷா 9 ஓட்டங்களையும், சிந்து 2 ஓட்டங்களையும், லிங்கா 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் சண்றைஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் தங்கராசா, றிஷாந், மோகன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கஜன், சுபாஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

53 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சண்றைஸ் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 39 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

அதில் பிரதீபன் 14 ஓட்டங்களையும் மோகன் 8 ஓட்டங்களையும் றிஷாந் 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் சண்போய்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக மாஷா 4 இலக்குளையும் தவதீஸ், ஜெனி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகன் விருதை சண்போஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் மாஷாவும், அதி கூடிய இலக்குகளை வீழ்த்திய வீரருக்குரிய விருதை சண்போய்ஸ் விளையாட்டுக் கழக வீரர் தவதீஸும், தொடர் ஆட்ட நாயகன் விருது, அதி கூடிய 6 ஓட்டங்களை பெற்ற வீரருக்குரிய விருது அரை இறுதியாட்டத்தில் ஆட்ட நாயகனுக்குரிய விருது என்பவற்றை சண்றைஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் தங்கராசாவும் பெற்றுக்கொண்டனர்.

ஒரு போட்டியில் 10 சிக்ஸர்கள் அடித்த வீரருக்குரிய விருது, ஒரு போட் டியில அதிகூடிய ஆறு ஓட்டங் களைப் பெற்ற மைக்கான விருது, அரையிறுதியாட் டத்தில் ஆட்டநாயகன் விருது என்பவற்றை சூரியன் சூப்பர் கிங்ஸ் விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த குமார் பெற்றுக் கொண்டார்.

(ற-23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக.29
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

விண்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இமையாணன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சிறந்த வீரனாக கடெமியன் தெரிவானார்.

கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மானிப்பாய் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக கிரிக்கெட் தொடர்: போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக.29
அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் 8 பேர் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரில் வடமராட்சி பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக்க ழகங்களுக்கு இடையே கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணியின் விவரம் வருமாறு:

**இமையாணன் வென்றது**

உதயசூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும் இமையாணன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அதில் கிருபாகரன் 22 ஓட்டங்களையும், பிரசாந் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் இமையாணன் விளையாட்டுக்கழக அணி சார்பாக கவி 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சைமன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 8 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இமையாணன் விளையாட்டுக் கழகம் 4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எதுவித இலக்குகள் இழப்பின்றி 42 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

அதில் றஜீ 29 ஓட்டங்களையும், கவி 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

**நாவலர் வெற்றி**

ஐங்கரா விளையாட்டுக்கழக அணிக்கும் நாவலர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐங்கர விளையாட்டுக்கழக அணி 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றறது.

அதில் ஜெயந்தன், தயாதர்ஷன் ஆகியோர் 12 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நாவலர் விளையாட்டுக்கழக அணி சார்பாக அஜந்தன் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கஜீபன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நாவலர் விளையாட்டுக்கழகம் 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 41 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

அதில் கோபால் ஆட்டம் இழக்காமல் 21 ஓட்டங்களையும் சிவறூபன் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். .

பந்துவீச்சில் ஐங்கரா விளையாட்டுக்கழக அணி சார்பில் ரமேஸ் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 10 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கை வீழ்த்தினர்.

**சிறிமுருகன் வென்றது**

வீனஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வினஸ் விளையாட்டுக்கழக அணியினர் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் கருயன் 25 ஓட்டங்களையும், சுதர்ஷன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி சார்பாக டெஸ்மன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு3 இலக்குகளையும், பவன் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணியினர் 7 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இலக்குகள் இழப்பின்றி 63 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் பவன் 36 ஓட்டங்களையும், டெஸ்மன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

**இமையாணன் வெற்றி**

இமையாணன் விளையாட்டுக்கழக அணிக்கும் நாவலர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இமையாணன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் யுத் விளையாட்டுக்கழகம் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் புவி 40 ஓட்டங்களையும், மானஸன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நாவலர் விளையாட்டுக்கழக அணி சார்பில் டினே 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 22 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சஞ்ஜீபன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நாவலர் விளையாட்டுக்கழக அணியினர் 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 62 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சிவறூபன் 24 ஓட்டங்களையும் அஜந்தன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் இமையாணன் யுத் விளையாட்டுக்கழக அணி சார்பில் புவி 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் டைமன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

**சிறிமுருகன் வென்றது**

மைக்கல் விளையாட்டுக்கழக அணிக்கும் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் விளையாட்டுக்கழக அணியினர் 8 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் கபில் 36 ஓட்டங்களையும் ரகு 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணி சார்பாக சதீஸ் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ராஜி 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணியினர் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றனர்.

அதில் டெஸ்மன் 35 ஓட்டங்களையும், ராஜ் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மைக்கல் விளையாட்டுக்கழக அணி சார்பாக ரஜீத் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சுமன் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.(ற-23)

## அமெரிக்க ஓபன் ரெனிஸ்


# பெடரர், ஜோகோவிச் இரண்டாம் சுற்றில்



அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், செர்பியாவின் நோவக் ஜோகோவிச் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் வெற்றி பெற்றனர்.
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.
அதன் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் உலகின் முதல்தர வீரரான செர்பியாவின் ஜோகோவிச், லிதுவேனியாவின் ரிக்காடர்சை சந்தித்தார்.
இதில் ஆட்டத்தின் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் முதல் மூன்று செற்களையும் 6:1, 6:2, 6:2 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.
மற்றொரு ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், சுலோவேனியாவின் கிராகா ஜெமில்ஜாவை எதிர்கொண்டார். இதில் தொடக்கம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி பெடரர், முதல் மூன்று செற்களையும் 6:3, 6:2, 7:5 என்ற நேர்செற்களில் வீழ்த்தினார்.
பிற ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் கனடாவின் மிலாஸ் ராவோனிக், அமெரிக்காவின் ஜோன் இஸ்னர், ஷாம் க்யூரி, ஜெர்மனியின் ரொமி ஹெராஸ், செக் குடியரசின் தோமஸ் பெர்டிக் ஆகியோர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.
மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் பெலராசின் அசரன்கா, ஜேர்மனியின் தினா பிஷன்மேயரை சந்தித்தார். ஆட்டத்தின் தொடக்கம் முதல் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய அசரன்கா 6:0, 6:0 என்ற நேர்செற்களில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.
பிற போட்டிகளில் செக் குடிரசின் பெட்ரா கிவிட்டோவா, டென்மார்க்கின் வோஸினியாக்கி, இத்தாலியின் சாரா இரானி, செர்பியாவின் ஆனா இவானோவிச் உள்ளிட்டோர் முதல் சுற்றில் வெற்றி பெற்றனர்.
மற்றொரு ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் முன்னணி வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர், அமெரிக்காவின் விக்டோரியா டுவாலை எதிர்கொண்டார்.
இதன் தொடக்கம் முதல் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்திய சமந்தா 7:5, 4:6, 4:6 என்ற செற்களில் தோல்வியடைந்து வெளியேறினார்.
மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் சுலோவாக்கியாவின் சிபுல்கோவா, உக்ரைனின் எலினாவிடம் 4:6, 3:6 என்ற நேர் செற்களில் தோல்வியடைந்து வெளியேறினார். (ற)

# 15 வருடங்களின் பின் சாதித்தது சிம்பாப்வே

15 ஆண்டுகளுக்கு பிறகு 7 இலக்குகள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை தோற்கடித்துள்ளது சிம்பாப்வே.
சிம்பாவேயிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், சிம்பாப்வே அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் சிம்பாப்வே அணி அதிர்ச்சி வெற்றி பெற்றுள்ளது.
ஹராரே விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றது.
முதலாவது இலக்குக்காக 56 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 2 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களுடன் பலமான நிலையில் காணப்பட்டது.
ஆனால் அதன் பின்னர் அடுத்த 4 இலக்குகளும் 23 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட அவ்வணி தடுமாறியது. அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் இறுதிவரை ஆட்டமிழக்காதுடன் பாகிஸ்தான் அணி 244 ஓட்டங்களைப் பெறுவதற்கு உதவினார்.
துடுப்பாட்டத்தில் மிஸ்பா உல் ஹக் 85 பந்துகளில் 83 ஓட்டங்களையும் மொஹமட் ஹபீஸ் 71 பந்துகளில் 70 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக பிரையன் விற்றோரி, ரென்டாய் சத்தர இருவரும் தலா 2 இலக்குகளையும் புரொஸ்பர், உற்செயா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
245 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 48.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
முதலாவது இலக்குக்காக 107 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, இரண்டாவது இலக்குக்காக 69 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான இணைப்பாட்டங்களின் உதவியுடன் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்தது.
துடுப்பாட்டத்தில் ஹமில்ற்றன் மஸகட்ஸா 104 பந்துகளில் 85 ஓட்டங்களையும், வியூசி சிபன்டா 82 பந்துகளில் 54 ஓட்டங்களையும், பிரென்டன் ரெய்லர் 59 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், சியன் வில்லியம்ஸ் 23 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அஜ்மல் 2 இல்க்குகளையும் ஜுனைட் கான் ஓர் இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சிம்பாப்வே அணியின் ஹமில்ற்றன் மஸகட்ஸா தெரிவானார். (ற)




# தவறாக எடை போட்டு விட்டோம்

## மிஸ்பா உல் ஹக்

சிம்பாப்வேயிற்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச ஆட்டத்தில் தோல்வியடைந்த பாகிஸ்தான் அணி, பலத்த விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் அணியின் மிஸ்பா உல் ஹக், முதலாவது ஆட்டம் இடம்பெற்ற ஆடுகளத்தை பாகிஸ்தான் அணி தவறாக எடை போட்டு விட்டது என்று தெரிவித்தார்.
நேற்றைய ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து. 50 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 244 ஓட்டங்களைப் பெற, சிம்பாப்வே அணி 48.2 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக்,
"ஆடுகளத்தைத் தாங்கள் தவறாக எடை போட்டு விட்டோம். இரண்டாவது இன்னிங்ஸில் ஆடுகளம் மெதுவாக மாறும் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால் ஆடுகளம் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடுவதற்கு இலகுவானதாக மாறியது.
இந்தப் போட்டியின் வெற்றியைப் பெற சிம்பாப்வே அணி மிகவும் பொருத்தமான அணிதான். இந்த ஆட்டத்தில் எம்மை விட சிம்பாப்வே அணி சிறப்பாக விளையாடியிருந்தது. சிம்பாப்வே அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர்." என்று தெரிவித்துள்ளார். (ற)



# மன்னிப்புக் கேட்டனர் இங்கிலாந்து வீரர்கள்

ஆஷஸ் தொடரை வென்ற உற்சாகத்தில் மைதானத்தில் சிறுநீர் கழித்தது தவறான ஒன்று தான் என இங்கிலாந்து வீரர்கள் மன்னிப்பு கேட்டுள்ளனர்.



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரை 3:0 என்ற கணக்கில் இங்கி லாந்து அணி வென்றதைத் தொடர்ந்து லண்டன் ஓவல் மைதானத்தில் அமர்ந்து கொண்டாடினர். அப்போதுதான் பிட்சில் சில வீரர்கள் சிறுநீர் கழித்து அசிங்கமாக நடந்து கொண்டனர். இந்த நிலையில் தங்களது செயலுக்காக இங்கிலாந்து வீரர்கள் மன்னிப்பு கோரியுள்ளனர்.
இதுதொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,
"எங்களது கொண்டாட்டத்தில் கிரிக்கெட்டுக்கும், மைதானத்துக்கும், கிரிக்கெட் ரசிகர்களுக்கும் அவமரியாதை ஏற்படுத்தும் எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை. நாங்கள் கிரிக்கெட்டை நேசிக்கிறோம்.
கிரிக்கெட்டுக்கு மரியாதை செலுத்துகிறோம். எதிராளிகளையும் நேசிக்கிறோம், நாங்கள் விளையாடும் மைதானத்தையும் நேசிக்கிறோம். இருப்பினும் எங்களில் சிலரின் நடத்தை பொருத்தமற்றது என்பதை ஒத்துக் கொள்கிறோம். அவர்களின் நடத்தை யார் மனதையாவது புண்படுத்தியிருந்தால் நாங்கள் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம். இது எதேச்சையாக நடந்ததே தவிர திட்டமிட்டு எதுவும் நடக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கிடையே இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் கிரீம் ஸ்வான், எங்களது வீரர்கள் மைதானத்தின் நடுவே பிட்ச் பகுதியில் அமர்ந்து பீர் சாப்பிட்டது உண்மைதான் என்றும் இருட்டாக இருந்ததால் சரியாக தெரியாமல் போயிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# விதிமுறைகளை மாற்றவேண்டும்




போதிய வெளிச்சமின்மை தொடர்பான விதிமுறைகளை மாற்ற வேண்டுமென இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் குறிப்பிட்டுள்ளார்.
ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தின் வெற்றிபெறும் வாய்ப்பு, போதிய வெளிச்சமின்மை காரணமாக கை நழுவிப் போயிருந்தது.
227 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 4 பந்துப் பரிமாற்றங்களில் 21 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் ஆட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.
இந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் சபை இது தொடர்பான விதிகளில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென அன்டி பிளவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன் அன்டி பிளவர்

இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியில் நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் அன்டி பிளவர் .

2009ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியை ஏற்ற அன்டி பிளவர் மிகச் சிறப்பான பணியை ஆற்றி வருகிறார். அத்தோடு, இம்முறை இடம் பெற்ற ஆஷஷ் தொடரை இங்கிலாந்து அணி 3:0 என்ற கணக்கில் கைப்பற்றவும் அவர் உதவியிருந்தார்.

அதிக வேலைப்பழு காரணமாக அன்டிபிளவர்கடந்தாண்டு இறுதியில் இங்கிலாந்தின் ஒரு நாள் சர்வதேச ஆட்டங்கள், '20/20' சர் வதேச ஆட்டங்கள் என்பவற்றுக்கான பயிற்றுவிப்புப் பதவியிலிருந்து விலகி அவ்வணிகளை மேற் பார்வை செய்யும் ஒருவராக மாறினார். இந்நிலையில், ஆஸ்திரேலியாவில் இவ்வாண்டு இறுதியில் இடம்பெறவுள்ள ஆஷஷ் தொடரின் பின்னர் அன்டி




பிளவர் டெஸ்ட் பயிற்றுவிப்பிலிருந்தும் ஓய்வுபெறலாம் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், தனக்கு இப்போதைக்கு அது குறித்த எண்ணங்களெவையும் கிடையாது எனத் தெரிவித்துள்ள அன்டி பிளவர், இங்கிலாந்தின் பயிற்றுவிப்பாளர் பதவியை மகிழ்ச்சியுடன் செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலம் குறித்து நிரந் தரமான திட்டங்களெவையும் தனக்குக் கிடையாது என்றும் தெரிவித்துள்ள அன்டி பிளவர், நீண்டகாலம் தாண்டி சிந்திக்க விரும்பவில்லை என்று நகைச்சுவையாகத் தெரிவித்துள்ளார். (ற)

# மன்னிப்பு கோரினார் லீமன்



இங்கிலாந்து வீரர் ஸ்ருவேர்ட் ப்ரோட் மீது தெரிவித்த கருத்துக்களுக்காக ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் டெரன் லீமன் மன்னிப்புக் கோரியுள்ளார். அத்துடன் இந்தப் பிரச்சினையிலிருந்து தாம் வெளியேற விரும்புவதாகவும் டெரன் லீமன் தெரிவித்துள்ளார்.

முதலாவது ஆஷஷ் போட்டியில் ஸ்ருவேர்ட் ப்ரோட் துடுப்பெடுத்தாடிய போது அஸ்ரன் ஏகரின் பந்தைத் தட்ட முனைந்த போது பந்து அவரது துடுப்பில் பட்டு, பிரட் ஹடினின் கையுறைகளில் பட்டு, முதலாவது ஸ்லிப்பில் காணப்பட்ட மைக்கல் கிளார்க்கின் கைகளை அடைந்தது.

ஸ்ருவேர்ட் ப்ரோட்டின் துடுப்பில் பந்து பட்டதைக் கவனிக்காத நடுவர் அதற்கு ஆட்டமிழப்பு வழங்க மறுத்தார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த டெரன் லீமன்,

"பந்து முதலாவது ஸ்லிப்பிற்குச் சென்ற பின்னரும் மைதானத்தை விட்டு வெளியேறாத ஸ்ருவேர்ட் ப்ரோட் ஓர் ஏமாற்றுக்காரர். சாதாரணமாக ஆட்டமிழக்கும் போது துடுப்பாட்ட வீரர்கள் நடுவரின் தீர்ப்புக்குக் காத்திருக்காது வெளியேற வேண்டும் என நான் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் முதலாவது ஸ்லிப்பிற்குச் சென்ற பின்னர் வெளியேறாமல் விட முடியாது.

அடுத்த ஆஷஷ் தொடருக்காக இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவிற்கு வரும்போது அங்கு வைத்து ஆஸ்திரேலிய இரசிகர்கள் ஸ்ருவேர்ட் ப்ரோட் மீது அழுத்தங்களை வழங்குவார்கள். அழுதபடி ஸ்ருவேர்ட் ப்ரோட் வீடு செல்ல வேண்டும் என்று தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துக்காக அபராதமும் செலுத்தியிருந்த லீமன், தற்போது மன்னிப்பும் கோரியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

" ஆஷஷ் தொடர் நிறைவடைந்துள்ள நிலையில் எனது கருத்துக்கள் குறித்து ஸ்ருவேர்ட் ப்ரோடிடம் கலந்துரையாடினேன். அந்தச் சம்பவம் மிகச்சிறப்பான பாடமாக அமைந்தது. குறித்த நிகழ்ச்சி நகைச்சுவையான நிகழ்ச்சியாகக் காணப்பட்டது. எனினும் அதில் கருத்துத் தெரிவித்ததன் மூலம் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து நிறைய பாடம் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது" என்று கூறியுள்ளார்.

டெரன் லீமன் தன்னிடம் மன்னிப்புக் கோரியதை உறுதிப்படுத்திய ஸ்ருவேர்ட் ப்ரோட், அந்த மன்னிப்பை ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். (ற)

# மோர்கன் அணித்தலைவர்

இங்கிலாந்து சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. செப்ரெம்பர் 6ஆம் திகதி தொடங்கும் இந்தத் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டது.

இதில் அலஸ்டயர் குக்கிற்கு ஓய்வு தரப்பட்டு இயன் மோர்கன் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார். தவிர இயன் பெல், அண்டர்சன், சுவான், ஸ்டுவேர்ட் புராட் ஆகியோருக்கும் ஓய்வு தரப்பட்டது.

அவர்களுக்குப் பதில் புதுமுக துடுப்பாட்ட வீரர் மைக்கேல் கார்பெர்ரி, காரி பல்லான்ஸ், வேகப்பந்து

வீச்சாளர் ஜமெய் ஓவர்டான், கிறிஸ் ஜோர்டான், ரான்கின் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

14 பேர் கொண்ட இந்த அணியில் மூத்த வீரர் பீற்றர்சனுக்கு இடம் தரப்பட்டுள்ளது.

அதேவேளை அயர்லாந்துக்கெதிரான ஒருநாள் ஆட்டத்திலும் இங்கிலாந்து அணி பங்கேற்கவுள்ளது.(ற)

Sky Computers (Pvt) Ltd
அனைத்துப் பாடத்திற்குமான புதிய பிரிவு ஆரம்பம்
மேலதிக விபரங்களிற்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்
89, கண்டி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-222-1417
(C.11651) (7.6.3)

LAP TOP மலிவு விற்பனை
DELL 18750/= மட்டுமே
FREE-HEAD PHONE/4GB PEN
ஒரு வருட உத்தரவாதம் (C/11650) (7.6.3)
ST.ANTONY'S
187, K.K.S. ROAD, JAFFNA TOWN
021 222 4865, 075 069 8608

அரிய வாய்ப்பு 02.09.2013 வரை மட்டுமே
2 இலட்சம் வேதனம், உணவு, இருப்பிடம் இலவசம்
ஐரோப்பிய நாடான Holand (நெதர்லாந்தில்)
படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை.
எல்லா நாள்களும் காலை 8 முதல் இரவு 6.30 வரை
(39271)(10.6)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..
Batch1 : 31.08.2013
Batch2 : 02.09.2013
Batch3 : 07.09.2013
Batch4 : 09.09.2013

ஆங்கில ஆசிரியர் தேவை
முன்பள்ளியில் ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை. உடனடியாக நேரில் சமுகம் தரவும்.
தொடர்பு: உரும்பிராய் கிட்ஸ் பார்க், ஞானவைரவர் கோவிலடி, உரும்பிராய்
077 6565258

IELTS
Complete Training
சர்வதேச தகைமையுடன் ஆங்கிலம்
ஆங்கிலம் தெரியாதவர்கள், ஓரளவு தெரிந்தவர்களுக்கென இரண்டு வெவ்வேறு பிரிவுகள்.
சரளமான பேச்சுப்பயிற்சியுடன் Listening, Reading, Writing பயிற்சிகள் பரீட்சைக்கேற்ப Practical ஆக வழங்கப்படுவதோடு 8 முன்னோடிப் பரீட்சைகள்.
பதிவும் அறிமுக வகுப்பும் 31.08.2013 சனி மாலை 3.00 pm
Spoken English வகுப்புகள் ஆரம்பம் 02.9.2013
பிரிவு 1 09 - 11.00
பிரிவு 2 11 - 01.00
SAAMSON Language Research Centre
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்.
077 621 4567

விற்பனைக்கு
புதிதாக கொண்டுவரப்பட்ட 5D MARK III (canon), canon 24- 105mm F4L, canon 70- 200mm 2.8 L, canon 50mm 1.4 (usm), canon battery grip, 2 battery, 600Ex RT canon flash, pelican 1510 case, Gary fong professional diffuser, UV filter for all lens, 16 GB sd card 4GB cf Card
தொடர்பு :- 0778517693

BIT MIS மாணவர்களின் சிறந்த பெறுபேறுகள் BIT
AB+ BB- Sivaroshan
A2BC Kopithan
A2BC Sriharshan
A2B+ C+ Amithayan
B+ B C+ C Sakthibalan
B+ 2C+ C Thulashi
Semester 1,3,5 Classes
Final Year Project Class VB.Net, PHP
BIT இணைப்பாளர் - MIS BIT Academy புதிய பதிவுகள் ஆரம்பம்
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்- பிரம்படி கொக்குவில் அருகாமை. TP : 0776577359

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.